# தேவனுடைய சித்தமாயில்லாமல் தேவனுக்கு ஒரு சேவை செய்ய முயற்சித்தல்

ஊழியக்கார சகோதரர்களே, அங்குள்ள நண்பர்களாகிய உங்களிடம், இந்தக் காலையில் இங்கிருப்பது ஒரு சிலாக்கியம் என்று நான் கூறுகிறேன். அப்படிப்பட்ட ஒரு அறிமுகம், ஏன், நான் எப்படித்தான் அதற்கு ஈடுகொடுக்கப் போகிறேனோ தெரியவில்லை.

2 ஆனால் அங்கே அமர்ந்து பேசிக்கொண்டிருக்கிற, சகோதரன் நோலன், நான் சரியாகச் சகோதரன் ஜேக் மூரைப் போல ஒரு நபரை எப்போதாவது சந்தித்திருக்கவில்லை என்று நான் நம்புகிறேன் (நாம் எல்லோரும் வெவ்வேறு அச்சுகளில் உண்டாக்கப்பட்டிருக்கிறோம், ஆனால் ஒரே தேவனால்.) உம்-ஹூம், பாருங்கள், அவர் நிச்சயமாகவே...சகோதரர் நோலன், "நான் இவருடன் இங்கே இருந்ததிலிருந்து..." (அவர் அவருடைய மருமகன்), அவரை நேசிக்கவும், அவருடைய ஞானத்தையும் மற்ற விஷயங்களையும் மதிக்கவும் தான் எப்படி கற்றுக்கொண்டேன் என்று கூறினார். அதற்கு, என்னால் அதற்கு "ஆமென்" என்று கூற முடியும். அநேக அருமையான காரியங்கள்...நாங்களும் அவரும், சகோதரன் பிரவுனும், சகோதரன் பூட்லியரும் இங்கே ஒன்றாகக் கழித்த காலங்கள். அருமையான தேவனுடைய மனிதர்களை நான் உண்மையாகவே என் முழு இருதயத்தோடு நேசிக்கிறேன்.

3 ஆகையால் நம் எல்லோருக்கும் வயது கூடிக்கொண்டே போகிறது என்பது எனக்குப்—எனக்குப் புரிகிறது, பாருங்கள், சுமார் இருபது ஆண்டுகளுக்கு முன்பு இளைஞர்களாக நாம் ஒன்றாகப் பாலைவனங்களைக் கடந்து சென்றதிலிருந்து, இப்படி எல்லாம் இப்போது நாம் எப்படி மாறிக்கொண்டே இருக்கிறோம் என்பதைப் பார்க்கும் அந்த நேரத்தை நினைத்துப் பார்க்கிறேன். ஆனால் நாம் ஒருபோதும் வயோதிகராகாத ஒரு தேசம் உண்டு என்பதை நாம் அறிந்திருக்கிறோம். என்றோ ஒரு நாள் நாம் மீண்டும் அங்கே சந்திப்போம்.

4 நேற்றிரவு நான் கூடாரத்தை விட்டுப் புறப்பட்டுக் கொண்டிருந்தபோது, அங்கே ஒரு சிறு பெண்மணி அங்கே ஒரு கட்டிலின் மேல் படுத்துக் கொண்டிருந்தாள். அவள்,

"சகோதரன் பிரான்ஹாம், அநேக ஆண்டுகளுக்கு முன்பு..." என்று கூறினாள். அவள் முடக்குவாதத்தால் பாதிக்கப்பட்டிருந்தாள் என்று நான் நினைக்கிறேன். அவள், "நீர் என்னிடம் கூறினீர்..." என்றாள். அந்தப் பெண் என்ன கூறினாள் என்று இப்போது மறந்துவிட்டேன், ஏதோ இது போன்ற ஒன்று, நான் அதைத் தவறாகக் குறிப்பிடவில்லை என்று நம்புகிறேன். "எனக்கு ஏற்பட்ட இந்தத் துன்பம் ஒரு நோக்கத்திற்காகத்தான் இருக்கும்," அல்லது அது போன்ற ஏதோவொன்றை, அதாவது அவள் ஒரு குழந்தையைப் பெற்றெடுப்பாள் என்று கூறினாள். அவள் அந்த நிலையில் இருக்கையில், அது எப்படிச் செய்யப்படும் என்பதைப் புரிந்து கொள்ள முடியவில்லை.

5 அங்கே ஒரு வாலிப, அழகான தோற்றமுடைய வாலிபன் நின்று கொண்டிருந்தான், அவன், "அவள் பெற்றெடுத்த குழந்தை நான்தான்" என்றான். "அவள் பெற்றெடுத்த குழந்தை நான்தான்" என்றான்.

6 அநேக காரியங்கள் நமது பாதையில் நடந்துள்ளன, அதைக் குறித்து பேசக் கூட நமக்கு இங்கே நேரமில்லை. நாம் மறுபக்கத்தில் இருப்போம்.

7 இந்த வர்த்தக புருஷர் குழுவில், நான் எந்த ஸ்தாபனத்தையும் சேர்ந்தவன் அல்ல என்பதை நீங்கள் யாவரும் அறிவீர்கள் என்று நான் யூகிக்கிறேன், ஆனால் நான்...நான் ஒரு ஐக்கிய அட்டையைக் கொண்டு இணைக்கப்பட்டுள்ள இந்த ஒரே குழு மாத்திரமே... அவர்கள் பல்வேறு ஸ்தாபனங்களைச் சார்ந்தவர்கள், அது வர்த்தக புருஷர்கள். அவர்கள் எனக்கும், நம்முடைய பிதாவாகிய கர்த்தர் எனக்கு அளித்துள்ள மாதிரியான ஊழியத்திற்கும் ஒரு பெரிய சொத்தாக இருந்து வருகின்றனர். அது...எனக்கு அந்த ஸ்தாபனத்தை பிடிக்கவில்லை என்பது சரியாக இல்லை; அது எனக்கு அளிக்கப்பட்ட ஒரு ஊழியமாயிருக்கிறது, நான் அந்த அழைப்புக்கு உண்மையாயிருக்கவில்லையென்றால், அப்பொழுது நான் தேவனுக்கு விசுவாசமில்லாத நபராக இருப்பேன்.

8 மேலும், நான் டூசானை விட்டுச் செல்வதற்குச் சற்று முன்பு, நான் யோசித்துக் கொண்டிருந்தேன், உங்களில் அநேகர் அங்கிருந்திருக்கலாம், ஒரு நாள் நான் லாஸ் ஏஞ்சல்ஸ் குழுவிடம் பேசிக்கொண்டிருந்தேன். அங்கே...நான் அந்த ஸ்தாபனத்தை சற்று—கொஞ்சம் கடுமையாக விமர்சித்தேன். நான்—நான் அந்தவிதமாக இருக்க வேண்டுமென்று கருதவில்லை. நீங்கள் அதைக் கடுமையானதாகக் கருதினால், அப்பொழுது நான் ஒரு மாய்மாலக்காரனாயிருப்பேன். நீங்கள் அதைச் செய்யக் கூடாது, இல்லை, அது யாரோ ஒருவர் மீது கோபத்தைக் காட்டுவது. ஆனால் நான் சகோதரன் ஷாரிட்டின் முற்றத்தில் கண்ட ஒரு மரத்தைக் குறித்துப் பேசினேன். அதன் மேல் ஏறக்குறைய ஐந்து விதமான கனிகள் இருந்தன. மேலும் நான், "அதைப் போன்ற ஒரு மரத்தை

நான் என்னுடைய வாழ்க்கையில் ஒருபோதும் கண்டதேயில்லை” என்றேன். அது ஒரு...அதில் திராட்சைப்பழம் இருந்தது, அதில் எலுமிச்சை இருந்தது, அதில் டேஞ்சரின், டாங்கெலோஸ்கள், ஆரஞ்சுகள், எல்லாமே ஒரே மரத்தில் விளைந்தன. “சரி,” நான், “எனக்கு—எனக்கு நிச்சயமாக அது புரியவில்லை. அது என்னவிதமான மரம்?” என்று கேட்டேன்.

“அது ஒரு ஆரஞ்சு மரம்.”

அதற்கு நான், “பாருங்கள், அந்தத் திராட்சைப் பழமா?” என்று கேட்டேன்.

அதற்கு அவர், “ஆம்” என்றார்.

நான்—நான், “அது எப்படி?” என்று கேட்டேன்.

மேலும், “அது ஒட்டுபோடப்பட்டுள்ளது” என்றார்.

அதற்கு நான், “ஓ, நான் காண்கிறேன்” என்றேன்.

9 அவர், “அவை அனைத்தும் சிட்ரஸ் குடும்பத்தைச் சேர்ந்தவை, மேலும் சிட்ரஸ் குடும்பத்தைச் சேர்ந்த எந்த மரத்தையும்... ஒட்டுப்போட்டு வளர்க்க முடியும்” என்றார்.

10 நான், “எனக்குப் புரிகிறது” என்றேன். அப்பொழுது நான் சற்று சத்தமிடத் துவங்கினேன், உங்களுக்குத் தெரியுமா, ஏனென்றால் நான் பதட்டமாகவும், உணர்ச்சிவசப்படுதலுடனும் இருக்கிறேன்.

11 எனவே, அவர், “என்ன விஷயம்?” என்று கேட்டார்.

12 மேலும் நான், “சரி, நான் ஏதோ ஒன்றைக் குறித்து சிந்தித்துக் கொண்டிருந்தேன்” என்றேன். மேலும் நான், “இப்பொழுது நான் உங்களை ஒரு கேள்வி கேட்க விரும்புகிறேன்” என்றேன். நான், “இப்பொழுது, அடுத்த வருடம் பூத்துக் குலுங்கும் போது, ஆரஞ்சு, டாங்கெலோ, திராட்சை பழங்கள், எலுமிச்சை எதுவும் இருக்காது; அது ஒரு ஆரஞ்சு மரத்தில் இருப்பதால் அங்கே எல்லாமே ஆரஞ்சுகளாக இருக்கும், இல்லையா?” என்றேன்.

13 அவர், “இல்லை, இல்லை. இல்லை, ஒவ்வொரு கிளையும் தனக்கான பலனைத் தரும்” என்றார்.

14 “எனக்குப் புரிகிறது” என்றேன்.

15 அதனால் அது இன்னும் மிகவும் நன்றாக ஒலித்தது, ஏனென்றால் நான்...உங்களுக்குத் தெரியும், நான்...நிச்சயமாக நான் ஹார்ட்போர்டிட் மற்றும் இந்த மற்ற எல்லாப் பல்கலைக்கழகங்களிலிருந்தும் பட்டம் பெற்றுள்ளேன் என்பதை நீங்கள் அறிவீர்கள். எனவே—எனவே நான்...*இயற்கையை* கவனித்து வருகிறேன், நான் இதுவரை கண்டறிந்துள்ள பல்கலைக்கழகங்களிலேயே மிகச் சிறந்த பல்கலைக்கழகம் அதுவே, சிருஷ்டிகரின் பல்கலைக்கழகம்தான். எனவே நான் அதைக் கவனித்தால், இயற்கை செயல்படுவதை நான் காணும்

விதத்திலிருந்து என்னுடைய பிரசங்கங்களை நான் பெற்றுக் கொள்கிறேன்.

16 மேலும் நான், “சரி, அது என்னை மிகவும் நன்றாக உணரச் செய்கிறது” என்றேன்.

17 அவர், “என்ன விஷயம்?” என்று கேட்டார்.

18 நான், “நான் ஒன்றைக் குறித்து சற்று யோசித்தேன்” என்றேன்.

19 ஆகையால் அந்த நாளில், நான் அதன் பேரில் பிரசங்கித்துக் கொண்டிருந்தேன். மேலும் நான், “இப்பொழுது, நீங்கள் பாருங்கள், முதலில் சபை துவங்கினபோது, அது…இயேசு கூறினார்…” என்றேன். நான் யோவான் 15-ம் அதிகாரத்தைப் பிரசங்கித்துக் கொண்டிருந்தேன். “‘நானே திராட்சைச் செடி, நீங்கள் கொடிகள். கனி கொடுக்காத கிளைகள் யாவும் வெட்டப்பட்டு, சுட்டெரிக்கப்படும்.’”

20 அதன் பேரில் யாரோ ஒருவர் என்னுடைய கருத்தை ஏற்க மறுத்து, “நீங்கள் பாருங்கள், நீங்கள் உண்மையிலேயே ஒருமுறை பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்டு இரட்சிக்கப்பட்டிருந்தால், ‘அவர்களால் அதிலிருந்து தப்பிக்க முடியாது’ என்று நீங்கள் சொன்னதாக நான் நினைத்தேன்,’” என்று அவர் கூறினார்.

21 “அது உண்மை.”

22 அவர், “*அதைக்* குறித்து என்ன?” என்று கேட்டார்.

23 நான், “இப்பொழுது நீங்கள் ஒரு வித்தியாசமான பொருளின் பேரில் பேசிக் கொண்டிருக்கிறீர்கள். அவர் அங்கே கனிகொடுப்பதைக் குறித்து பேசிக்கொண்டிருக்கிறார், திராட்சை செடியை அல்ல; அவர் கனிகொடுப்பதைக் குறித்து பேசிக்கொண்டிருக்கிறார், ஜீவனை அல்ல. அதற்கு அவர், ‘பாருங்கள், மரத்தை வெட்டி விடு, அது வளர்ந்து கனி கொடுக்கும்’” என்றார்.

24 அவர் கூறினார்…

25 மேலும் நான், “இப்பொழுது, பாருங்கள், இந்த மரம், அது துவங்கினபோது, எல்லாமே அசலான, வேதாகம கிறிஸ்தவர்களாய் இருந்தது. அதன்பிறகு லூத்தரன், மெதடிஸ்ட், பாப்டிஸ்ட், பிரஸ்பைடிரியன் என்ற கிளைகள் வருகின்றன: எலுமிச்சை மற்றும் இன்னபிற.” மேலும் நான், “நீங்கள் பாருங்கள், அது கிறிஸ்தவ மார்க்கத்தின் பெயரால் செழித்து வளர்கிறது, ஆனால் அது…அது அந்த மரத்தின் மூலம் ஜீவிக்கிறது, ஆனால் அது அதனுடைய சொந்த ஸ்தாபன வகையையே தருகிறது. பார்த்தீர்களா? ஆனால்,” நான், “அந்த ஆரஞ்சு மரத்தில் வேறொரு கிளை தோன்றுமானால், அது ஆதியில் இருந்தது போன்று ஆரஞ்சு பழங்களையே கொடுக்கும்” என்றேன்.

26 அங்கே நம்முடைய மகத்தான பெந்தேகோஸ்தே ஸ்தாபனங்களில் ஒன்றின் ஒரு மகத்தான…தலைவர் ஒருவர்

அங்கே அமர்ந்திருக்க நேர்ந்தது. ஒவ்வொருவரும் புரிந்து கொள்ளும்படியாக அதை எப்படி கூறுவது என்று எனக்குத் தெரியவில்லை அதாவது நான்—நான் அந்தச் சகோதரர்கள், சகோதரிகளுக்கு விரோதமானவன் என்பது—என்னுடைய கருத்தல்ல; அது தவறு. நான் மிகவும் தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டிருக்கிறேன், ஏன் என்று எனக்குத் தெரியவில்லை. பார்த்தீர்களா? ஜனங்கள் சபைக்குச் செல்வதில் கூட எனக்கு நம்பிக்கையில்லை என்று ஜனங்கள் நினைக்கிறார்கள். அது சத்தியத்திலிருந்து கோடிக்கணக்கான மைல்கள் தூரத்தில் உள்ளது. "நாம் அந்த நாள் சமீபித்து வருவதைக் காணும்போது, நாம் எவ்வளவாய் ஒன்று கூடி வர வேண்டும்." பார்த்தீர்களா? நாம் ஐக்கியத்தில் ஒன்று சேர வேண்டும். நாம் ஒருக்கால்…

27 நான் ஒரு நகரத்தில் வசித்து வந்தபோது, அங்கே அவர்களுக்கு ஒன்றுமே இல்லாமலிருந்தால்…அதாவது, ஏதோ ஒரு சபை, (நான் எந்தப் பெயரையும் அழைக்க விரும்பவில்லை), ஆனால் எந்த ஒரு சபையும், அவர்கள் ஒரு காரியத்தை மாத்திரம் விசுவாசித்தால், அதாவது இயேசு தெய்வீகத்தன்மை கொண்டவர் என்று, மற்றவை அனைத்தும் தவறாக இருந்தாலும், நான் அந்தச் சபைக்குச் செல்வேன். என்னால் ஒரு முழு அப்பத்தை எடுக்க முடியவில்லையென்றால், நான்—நான் ஒரு துண்டை எடுத்துக்கொள்வேன். பார்த்தீர்களா? நான் சென்று கேட்பேன், கர்த்தரை தொழுதுகொண்டு, என்னுடைய பங்கை நான் செய்து கொண்டிருக்கிறேன் என்பதை அவருக்குக் காண்பிப்பேன். நான் உயிரோடிருக்கிறேன் என்பதை அவர் அறிந்துகொள்ள வேண்டும் என்று நான் விரும்புகிறேன். நான்—நான்…நான் எதன் பட்சத்தில் இருக்கிறேன் என்பதை ஒவ்வொருவரும் அறிந்து கொள்ள வேண்டும் என்று விரும்புகிறேன். நான் கிறிஸ்தவர்களோடு கூடி, அங்கே கர்த்தரை தொழுதுகொண்டு, சேவிக்கிறேன்.

28 ஆனால் அது மிகவும் கடினமானது, நான்…என்னை மிகவும் மோசமாகத் தொல்லைப்படுத்துவது வழக்கம், அப்பொழுது நம்முடைய கர்த்தரும் கூட அநேக காரியங்களில் தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டதை நான் கண்டேன். அவர் எதையாவது கூறினால், அவர்கள்…தவறாகப் புரிந்துகொள்வார்கள். அது அந்தவிதமாகத்தான் இருக்க வேண்டும் என்று நான் யூகிக்கிறேன். ஆனால் ஞானமுள்ளவர்கள் புரிந்து கொள்வார்கள். பார்த்தீர்களா? வேதம் அவ்வண்ணமாய் கூறியுள்ளது. அவர்கள் அதைப் புரிந்து கொள்வார்கள்.

29 ஆகையால் இந்தக் காலையில் இதைக் கூறிக்கொண்டிருக்கையில்…நான், "இப்பொழுது, அவர்கள்—அவர்கள் கிறிஸ்தவ மார்க்கம் என்ற பெயரைக் கடைபிடித்து வாழ்கின்றனர், ஆனால் அவைகள் தவறான கனிகளைக் கொடுக்கும். அதற்கு ஒரு ஸ்தாபன கனி உள்ளது. அவர்கள் ஒரு காரியத்தை

அமைத்து, அவர்கள் அதிலிருந்து ஜீவித்து, அதே ஜீவனைக் கொண்டு ஜீவித்துக்கொண்டிருக்கிறார்கள்" என்றேன்.

30 அதைத்தான் நான் நேற்றிரவு கூற முயன்றேன், அந்த ஆவி அந்த ஆவிக்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டு, அதே சமயத்தில் ஒரு கிறிஸ்தவனாக இருக்க முடியாது. பார்த்தீர்களா? நீங்கள் அதே ஜீவனைக் கொண்டுதான் வாழ்ந்து கொண்டிருக்கிறீர்கள், ஆனால் நீங்கள் கொடுக்கும் கனிகளோ நீங்கள் என்னவாயிருக்கிறீர்கள் என்பதைக் கூறுகின்றன. பார்த்தீர்களா? அது உண்மை. பார்த்தீர்களா? அவர்களால் எல்லா அடையாளங்களையும் செய்ய முடியும், வியாதியஸ்தருக்காக ஜெபிக்கவும், வியாதியஸ்தரை சுகப்படுத்தவும், கண்களைத் திறக்கவும், பிசாசுகளைத் துரத்தவும், மேலும்—மேலும் இந்த எல்லாக் காரியங்களையும் செய்து, அங்கே உள்ள அதே ஜீவனைக் கொண்டு ஜீவித்தாலும், அது இன்னமும் ஒரு எலுமிச்சைப் பழமாகவே உள்ளது. பார்த்தீர்களா? அது உண்மை. இயேசு, "கனிகளால், நீங்கள் அறியப்பட்டிருக்கிறீர்கள்" என்று கூறினார். ஆகையால் அதன்பின்னர் நாம் கண்டறிவது…

31 நான் மேடையை விட்டு இறங்கினபோது, இந்த மகத்தான தலைவர் எழும்பி, அவர் "அவர் அந்த அர்த்தத்தில் கூறவில்லை" என்றார். அவர், "நாம் யாவரும் ஒட்டவைக்கப்பட்டிருக்கிறோம் என்பதை நாம் அறிவோம்" என்றார். சரி, நாம் ஒட்டுப்போடப்பட்டிருக்கிறோம், அடிமரத்தில் ஒட்டுப்போடப்பட்டிருக்கிறோம், அது சரிதான்; ஆனால் திராட்சைக் கொடியில் ஒட்டுப்போட்டிருக்கவில்லை. எனவே அப்பொழுது அவர் கூறினார்…ஒருவிதமாக—ஒருவிதமாக என் பேச்சைச் சற்று அவதூறாகப் பேச ஆரம்பித்தார்.

32 அங்கே ஒரு வாலிபன் இருந்தான், அது ஏதோ ஒரு திரைப்பட நட்சத்திரத்தின் ஆட்கள் என்று நான் நினைக்கிறேன். அவனுடைய பெயர் டானி ஹென்றி, அவன் ஒரு பாப்டிஸ்டு பையன். பாருங்கள், அவன் மேடைக்கு வந்து தன்னுடைய கரங்களை என்னைச் சுற்றிப் போட்டு, அவன், "சகோதரன் பிரான்ஹாம், இது புனிதத்துவத்தை பாழாக்குகிறதாயிராது என்று நான் நம்புகிறேன், ஆனால்," "கிட்டத்தட்ட அது வெளிப்படுத்தின விசேஷம் 23-ம் அதிகாரமாய் இருக்கலாம் என்று நான் நினைக்கிறேன்" என்றான்.

33 அதற்கு நான், "உங்களுக்கு நன்றி" என்றேன்.

34 அவன் ஏதோ ஒன்றைக் கூறத் துவங்கி, அவன் ஒரு பாப்டிஸ்டு பையனாய், அந்நிய பாஷையில் பேசத் துவங்கினான். அவன் அதைச் செய்தபோது, இங்கிருந்து லூயிசியானாவிலிருந்து ஒரு—ஒரு ஸ்திரீ இருந்தாள். அவள் ஒரு பிரெஞ்சுக்காரியாயிருந்தாள், ஒருவிதமான ஒரு பெரிய பருமனான ஸ்திரீயாயிருந்தாள், அவள் அந்த அர்த்தத்தை எழுதி வைத்தாள்.

35 பாருங்கள், அப்பொழுது இங்கே உட்கார்ந்து கொண்டிருந்த மற்றொரு வாலிப நபர் ஒரு பிரஞ்சுக்காரர், அவன் என்ன கூறினான் என்பதை அவர் எழுதினார். அவர்கள் குறிப்புகளை ஒப்பிட்டுப் பார்த்தனர், அவை இரண்டும் ஒன்றாகவே இருந்தன.

36 அதன்பின்னர் கிளிஃப்டனின் உணவகத்தில் வெகுபின்னால் நின்று கொண்டிருந்த, பெரிய, கருமையற்ற தலைமுடி கொண்ட ஒரு பையன் நடந்து முன்னே வந்தான். அவன், "அந்தக் குறிப்புகளை நான் காணட்டும். அவைகள் என்னவாயிருந்தன என்பதை நான் காண விரும்புகிறேன்" என்றான்.

37 மேலும் அந்த மூவருக்கும் இருந்த விளக்கம் ஒன்றாகவே இருந்தது. அவர் ஐ.நா.விற்கான மொழி பெயர்ப்பாளராக, பிரெஞ்சு மொழி பெயர்ப்பாளராக இருந்தார். அதில் கூறப்பட்டுள்ளதாவது:

> *நீ இந்த நேரான, குறுகலான, கடினமான வழியைத் தேர்ந்தெடுத்திருப்பதால், இதை உன் சொந்த விருப்பத்தின் பேரிலேயே செய்திருக்கிறாய்...*
>
> *ஆனால் என்ன ஒரு மகிமையான தீர்மானத்தை நீ செய்திருக்கிறாய், ஏனென்றால் அது* ***என்னுடைய வழியாயிருக்கிறது.***

பார்த்தீர்களா? மேலும் அவர்...அதன்பிறகு தொடர்ந்து சொன்னார்:

> *இதுவே, தன்னிலேயே, நிகழச் செய்யும் காரியமாகும், தெய்வீக அன்பில், மகத்தான வெற்றி உருவாக்கப்பட்டு, கொண்டுவரப்படும்.*

38 நீங்கள் பாருங்கள், எப்பொழுதுமே பிரஞ்சு மொழியிலும் கூட, வினையுரிச்சொல்லுக்கு முன்னால் உள்ள வினைச்சொல் வியாக்கியானத்தில் உள்ளது. எனவே அதில் என்னால் கூற முடியவில்லை...மோசே, அவன் தன்னுடைய தெரிந்து கொள்ளுதலைச் செய்தான், அவன் தன்னுடைய தெரிந்து கொள்ளுதலைச் செய்ய வேண்டியதாயிருந்தது. நாம் யாவரும் நம்முடைய தெரிந்து கொள்ளுதல்களைச் செய்ய வேண்டும், நம்மால் முடிந்தளவு மிகச் சிறந்ததை செய்ய வேண்டும். மேலும் தேவன்... தேவனைக் குறித்து எந்த மனிதனுக்கு அளிக்கப்படும் செய்தியையும் நான் மதிக்கிறேன். நான்...அது என்னவாயிருந்தாலும், நான் அதை என் முழு இருதயத்தோடு மதிக்கிறேன்.

39 இப்பொழுது, சற்று நேரத்திற்கு முன்னர், சகோதரன் ஸ்டிரிங்கர், லூசியானாவில்...இல்லை மிசிசிப்பியிலிருந்து, இங்கே எங்களுக்குச் சில புகைப்படங்களைக் கொண்டு வந்துள்ளீர்கள், அதை நாங்கள் பார்த்துக் கொண்டிருப்பதை நீங்கள் கண்டீர்கள். அது தோன்றினபோது, அது கர்த்தருடைய தூதனுடையதாயிருந்தது. எத்தனை பேர் இந்தக் கதையைக் கேட்டிருக்கிறீர்கள்? இங்குள்ள உங்கள் ஒவ்வொருவரும் அதைக் கேட்டிருப்பீர்கள் என்று நான்

யூகிக்கிறேன். நீங்கள் அதை ஒலிநாடாவில், இந்த விதமாகப் பதிவு செய்திருக்கிறீர்கள்.

40 இப்பொழுது, ஒரு நாள் காலைப் பத்து மணிக்கு இந்தியானாவிலுள்ள என்னுடைய அறையில் நின்றுகொண்டிருந்த என்னிடம் அது கூறப்பட்டது. நான் அதிகாலையில், டூசானில் இருப்பேன் என்று என்னிடம் கூறினார், நான் என் கால்சட்டையிலிருந்து ஒரு நெருஞ்சில் முள்ளினை (நாம் அங்கே ஒரு நெருஞ்சில் என்று அழைக்கிறோம்) எடுத்துக் கொண்டிருப்பேன். ஏழு தூதர்கள் வந்து இதை வெடித்தனர், பூமியும் வெடித்தது, மற்றெல்லாம் வெடித்தன, மலைகளிலிருந்து கற்பாறைகள் உருண்டன…ஏழு தூதர்கள் அங்கே நின்றனர்.

41 நான், "சரி…" என்றேன். நான் என்னுடைய மனைவியிடம் கூறினேன், அவள் இன்று காலை எங்கோ இங்கேதான் இருக்கிறாள், "நீ எல்லாவற்றையும் ஆயத்தப்படுத்து, ஏனென்றால் ஒரு மனிதனும் அதில் உயிர் வாழ முடியாது," நான், "அதிலிருந்து எப்படி தப்பிக்க முடியும். நான் டூசானுக்குச் செல்லப் போகிறேன், இங்கே பூமியில் என்னுடைய வேலை முடிந்துவிட்டது. நான் கர்த்தராகிய இயேசுவோடிருக்கும்படியாக வீட்டிற்குச் செல்லப் போகிறேன்" என்று கூறினேன்.

42 "சரி," அவள், "நீங்கள் உறுதியாக இருக்கிறீர்களா?" என்றாள்.

43 நான், "ஆம். ஆமாம், யாராலும் அதைத் தாங்க முடியாது—முடியாது. அதைச் செய்ய வழியேக் கிடையாது" என்றேன்.

44 நான் இப்போதுதான் *ஏழு சபைக் காலங்களைப்* பற்றிப் பிரசங்கித்தேன். வெளிப்படுத்தின விசேஷம் 1-ல் வெண்மையான முடியுடன் நின்று கொண்டிருந்த மற்றுமுள்ள ஒவ்வொன்றையும் இந்த இயேசுவை பற்றிக் கேட்பதற்காகத்தான், நமது தீரமான சிறிய சகோதரன் ஜாக் மூரை நான் அழைத்திருந்தேன்.

45 நான், "அவர் ஒரு வாலிப மனிதனாயிருந்தார்" என்றேன். அப்போதுதான், அது அவர் அல்ல, அவர் அணிந்திருப்பது ஒரு செயற்கை முடி என்ற வெளிப்பாடு வந்தது; அவர் உன்னத தெய்வீகத் தன்மையைப் போன்றே (என்னால் அதைப் புரிந்து கொள்ள முடியவில்லை) செயற்கை முடியை அணிந்திருக்கிறார். இஸ்ரவேலிலிருந்த பழைய நியாயாதிபதிகள் வெள்ளைத் தலையை உடையவர்களாக இருக்க வேண்டியதாயிருந்தது. வெள்ளை நிறம் தூய்மையைக் குறிக்கிறது. மேலும், இங்கிலாந்தின் உச்ச நீதிமன்றங்களில் உள்ள ஆங்கில நீதிபதிகள், இன்றளவும் வெளியே வரும்போது வெண்மையான செயற்கை தலை முடியை அணிந்துகொள்கிறார்கள், ஏனென்றால் இவ்வுலகில் அவர்களுடைய சட்டத்திற்கு மேலான வேறு சட்டம் எதுவும் இல்லை. பார்த்தீர்களா? அவர்கள் உன்னத நீதிபதிகளாயிருக்கிறார்கள்.

46 நான் அரிசோனாவிற்கு சென்றிருந்ததை நான் நினைத்துப் பார்க்கிறேன். என்னால் முடிந்தளவு முயற்சி செய்கிறேன்...நான் மிகவும் பயந்துபோயிருந்தேன். நான் பீனிக்ஸ் கூட்டத்திற்கு சென்றிருந்தேன். *ஐயன்மீர், இது என்ன சமயம்?* என்ற பிரசங்கத்தை நான் பிரசங்கித்தேன் என்பதை நினைவில் கொள்ளுங்கள். அது நினைவிருக்கிறதா? நான் அதைக் கண்டேன் என்று கூறினேன், நான், "அது நிறைவேறுவதற்கு முன்பு, **கர்த்தர் உரைக்கிறதாவது**, 'ஏதோ ஒன்று சம்பவிக்கப் போகிறது'" என்று கூறினேன். நீங்கள் அநேகமாக இப்பொழுது உங்களுடைய ஒலிநாடா நூலகத்தில் ஒலி நாடாக்களை வைத்திருக்கலாம். அங்கே நான், "ஒருபோதும் தவறிப்போகாத தரிசனங்களை இப்பொழுது நீங்கள் நினைவில் வைத்திருக்கிறீர்கள். 'ஏதோ ஒன்று நடக்கப் போகிறது.' நினைவிருக்கட்டும்!" என்றேன்.

47 அதற்கு ஒரு சில நாட்களுக்குப் பிறகு, நான் பதற்றமடைந்து கொண்டிருந்தேன், மேலும் நான், "இது என்ன? நான் மரிக்கப் போகிறேனா? அப்படியானால்...அதைத் துரிதமாக முடிக்க முடியும் என்று நான் நம்புகிறேன். நான் தாமதிக்க விரும்பவில்லை" என்று நினைத்தேன்.

48 ஒரு நாள் காலையில் கர்த்தர், "சபினோ கனியன் மலையின் உச்சிக்குப் போ" என்றார்.

49 நான் அங்கே மேலே என்னுடைய கரங்களை உயர்த்தி ஜெபித்துக் கொண்டிருந்தேன். என் கரத்தில் ஏதோ ஒன்று பட்டதை நான் உணர்ந்தேன். அது ஒரு பட்டயமாயிருந்தது. இப்பொழுது, இங்கே தனியாக நின்று கொண்டிருக்கையில், உங்களுடைய கரத்தில் ஒரு பட்டயம் *அவ்வளவு* நீளமாக இருந்தால், நீங்கள் எப்படி உணருவீர்கள் என்று உங்களால் கற்பனை செய்து பார்க்க முடியும். நான் அதை இழுத்து அதை நோக்கிப் பார்த்தேன். அது ஒரு பட்டயமாயிருந்தது, அவைகளில் ஒன்று...எனக்கு எப்படியும் ஒரு பட்டயத்தைக் குறித்து பயம். அது ஒரு—ஒரு உலோகத்தை உடையதாயிருந்தது, அதாவது இந்தப் பட்டயங்களில் ஒன்றைப் போன்ற ஒரு—ஒரு உலோகத்தை உடையதாயிருந்தது, மிகவும் கூர்மையானதும் குறுகியதுமாக இருந்தது. *இங்கே* அதைச் சுற்றி ஒரு உறை இருந்தது, அங்கே சண்டையிடுபவர்கள் வழக்கமாகவே, ஒருவருக்கொருவர் கைகளை வெட்டிக்கொள்ளாதபடிக்கு, மேலும்—மேலும் இங்கே கைப்பிடியில் ஒரு முத்து இருந்தது. என் கையில் கச்சிதமாகப் பொருந்திவிட்டது. சரி, நான் என் முகத்தைத் தேய்த்துக்கொண்டு திரும்பிப் பார்த்தேன்.

சரியாக அதே இடத்தில், அன்றொரு நாள், நான் ஒரு சிறிய, வெள்ளை புறா இறங்கி வந்ததைக் கண்டேன். அதைக் குறித்து நான் பிறகு உங்களுக்குக் கூறுவேன்.

50 நான் அதை என்னுடைய கரத்தில் பிடித்துக் கொண்டிருந்தேன், நான், "அது விசித்திரமாக இருக்கிறது. இப்பொழுது கர்த்தாவே,

நான்...நான் என்னுடைய சிந்தையை இழந்து கொண்டிருக்கிறேனா? இங்கே யாருமே இல்லை. நான் எவருக்கும் பல மைல்கள் தூரத்தில் இருக்கிறேன், இங்கே ஒரு பட்டயம் உள்ளது. நான் என்னுடைய கரத்தை உயர்த்தியிருந்தேன், அது எங்கிருந்து வந்தது?" என்று நினைத்துக் கொண்டிருந்தேன். மேலும் நான், "அது மிகவும் விசித்திரமான காரியம். இப்பொழுது இங்கே பார், அது ஒரு பட்டயமாயிருக்கிறது" என்று எண்ணினேன். அதைத் தட்டிப் பார்த்தேன், அது ஒரு பட்டயமாயிருந்தது. மேலும் நான், "இங்கே யாரும் நின்று கொண்டிருக்கவில்லை. நான் இந்தப் பாறைகளின் உச்சியில், மலையின் உச்சியில் இருக்கிறேன்" என்றேன். அங்கிருந்து நீங்கள் டூசானைக் கூடக் காண முடியாது. அது மிகவும் கீழே இருந்தது.

51 நான், "இப்பொழுது, அது ஒரு விசித்திரமான காரியம். இப்பொழுது, அது இந்தப் பக்கத்தில் எங்காவது இருக்க வேண்டும், சிருஷ்டித்து ஒரு பட்டயத்தை உருவாக்கி அதை என் கரத்தில் கொடுக்கக்கூடிய ஒருவர் இருக்க வேண்டும்" என்று நினைத்தேன். நான், "ஆபிரகாமுக்கு ஒரு ஆட்டுக்கடாவை சிருஷ்டித்த அதே தேவனால் மாத்திரமே அந்த அணில்களை சிருஷ்டிக்க முடியும்" என்று கூறினேன், அதை நீங்கள் கேள்விப்பட்டிருக்கிறீர்கள். மேலும் நான், "இங்கே பொருள் உள்ளது, அதில் மூன்று விதமான பொருள் உள்ளது, நான் என்னுடைய கரத்தில் வைத்திருக்கக்கூடிய மற்றெந்த காரியங்களைப் போன்றே அதை உண்மையாகவே என் கரத்தில் பிடித்துக் கொண்டிருக்கிறேன்" என்றேன்.

52 அப்பொழுது, "அது ராஜாவின் பட்டயம்!" என்று கூறின ஒரு சத்தத்தை நான் கேட்டேன்.

53 மேலும் நான், "இப்பொழுது, அது எங்கிருந்து வந்தது? அங்கே பாறைகளில் எங்கோ இருந்தது" என்று நினைத்தேன். நான் அதை என்னுடைய கரத்தில் *இந்தவிதமாகப்* பிடித்துக் கொண்டு, நான், "ஒரு ராஜாவின் பட்டயம்" என்றேன். நான் சுற்றும் முற்றும் பார்த்தபோது, அந்தப் பட்டயம் போய் விட்டிருந்தது. அதற்கு நான், "ஒரு ராஜாவின் பட்டயம்" என்றேன். அதாவது...அவர்கள் ஒரு பட்டயத்தைக் கொண்டு வீரராகச் சண்டையிடுகிறார்கள், இராணுவம் அல்லது ஏதோ ஒரு வழியில், அது சரி என்றே நான் நினைக்கிறேன், உங்களுக்குத் தெரியும். மேலும் நான், "சரி, அதற்காகத்தான் அநேகமாக அது இருக்கலாம். ஒரு வேளை நான் ஊழியக்காரர்கள் மீது கரங்களை வைக்கலாம், அல்லது அது போன்ற ஏதோ ஒன்றைச் செய்வதோ, அவர்களை ஊழியக்காரர்களாக்குவதற்காக என்று அது பொருட்படுத்துகிறது" என்றேன். அதன்பின்னர் நான்...

54 ஒரு சத்தம் மறுபடியும் பேசி, "*அந்த* ராஜாவினுடைய பட்டயம்!" என்றது. *ஒரு* ராஜா அல்ல; *அந்த* ராஜாவின் பட்டயம்! பார்த்தீர்களா?

55 நான், "இப்பொழுது, நான் என்னையே இழந்துபோய், என் சிந்தை நழுவிப் போய்விட்டது, அல்லது ஏதோ காரியம் சம்பவித்துக்

கொண்டிருக்கிறது, இங்கே எனக்கு அருகில் யாரோ ஒருவர் நின்று கொண்டிருக்கிறார்" என்று நினைத்தேன்.

56 சகோதரர்களே, இந்தக் காரியங்கள் உண்மையாயிருக்கின்றன. எப்படி கூறுவது என்று எனக்குத் தெரியவில்லை—எனக்குத் தெரியவில்லை, அது எப்பொழுதுமே அந்தவிதமாக நடப்பதை நீங்கள் எப்பொழுதும் கண்டிருக்கிறீர்கள். அது…என்னால் அதைப் புரிந்து கொள்ள முடியவில்லை. எனவே…அது மிகவும் விநோதமான உணர்வு.

57 நான் அங்கு நின்றேன். நான், "இப்பொழுது, ஒரு சிறிய, மிகச்சிறிய ஆண் குழந்தையாயிருந்து முதற்கொண்டே, என் வாழ்நாள் முழுவதும் என்னோடு பேசினவர் யாராயிருந்தாலும், இங்கே நின்றுகொண்டிருக்கிறார், என்னால் அவரைக் காணவே முடியவில்லை" என்று நினைத்தேன். நான், "*அந்த* ராஜாவினுடைய பட்டயமா?" என்று கேட்டேன். அது…தேவன் *அந்த* இராஜாவாயிருக்கிறார். "இந்தப் பட்டயம் என்ன?"

58 "வார்த்தை, அது உன்னுடைய கரத்தில் கொடுக்கப்பட்டுள்ளது." "மரணத்தைக் குறித்து பயப்படாதே, அது உன்னுடைய ஊழியம்" என்றார்.

59 ஓ, என்னே! நான் அந்த மலையிலிருந்து கீழே சென்று, அழுது, கூச்சலிட்டு, உச்சக் குரலில், பாறைகளைத் தாண்டிக் குதித்தேன். நான் அங்குச் சென்று, என் மனைவியிடம், "நான் மரிக்கப் போவதில்லை, பாருங்கள், அது—அது—இது என்னுடைய ஊழியம்" என்று கூறினேன். (நான் அவளிடம் பில்லிபாலை இங்கே அழைத்து வந்து பிள்ளைகளை அழைத்துச் செல்லும்படி கூறினேன். நான் சொன்னேன், "இப்போது என்னிடம் எதுவும் இல்லை, ஆனால் நீங்கள் அனைவரும் பசியால் வாடாமல் இருப்பதையும் மற்ற விஷயங்களையும் சபை பார்த்துக்கொள்ளும், நான்—நான் உங்களை எல்லைக்கு அப்பால் சந்திப்பேன்" என்றேன்.) மேலும்—மேலும் அவள்…நான், "இல்லை, நான் மரிக்கப் போவதில்லை, அது என்னுடைய ஊழியத்தைக் குறித்த ஏதோ ஒரு காரியம்" என்றேன்.

60 அதற்கு ஒரு சில நாட்கள் கழித்து நான் ஒரு கூட்டத்திலிருந்து வெளியே வந்து கொண்டிருந்தேன்; இங்கே டெக்ஸாஸில் உள்ள ஹூஸ்டனிலிருந்து ஒரு மூன்று பக்க தந்தி வந்திருந்தது. கர்த்தருடைய தூதன் புகைப்படமாக எடுக்கப்பட்ட அன்று இரவு என்னை மிகவும் மோசமாக விமர்சித்த அந்த மனிதன், அங்கே ஹூஸ்டனில் எடுக்கப்பட்ட அந்தப் புகைப்படம், அவர் என்னைத் தொலைபேசியில் அழைத்து, அவர் கூறினார்…ஒரு தந்தி அனுப்பினார், மனைவியோ, "சகோதரன் பிரான்ஹாம், நீங்கள் வேலையாயிருப்பதை நான் அறிவேன். என்னுடைய மகன் (டெட் கிப்பர்மேனின் சகோதரியின் பையன்) நாற்காலியில் மரிக்கும்படியாக மரணப் வரிசையில் காத்திருக்கிறான்" என்றாள்.

கூறினார்...(அது பில்லி பால் ஆக இருந்தால் என்ன?) அவர், "அவனும் ஒரு சிறு பெண்ணும் மரிக்க வேண்டும்" என்றார். நீங்கள் எல்லோரும் அதைச் செய்தித்தாளில் படித்திருப்பீர்கள், நிச்சயமாக. மேலும், "நீர் வந்து ஒரு கூட்டத்தை நடத்தி, ஜனங்களை ஒன்று சேர்க்க வேண்டும் என்ற நம்பிக்கை மாத்திரமே எங்களுக்கு உள்ளது" என்றார்.

61 ரேமண்ட் ஹாக்ஸ்ட்ரா எனக்கு ஏற்கனவே பலமுறை கடிதம் எழுதியிருந்தார், ஆனால் உங்களுக்குத் தெரியும், அந்தக் கூட்டத்திற்குப் பிறகு நான் திரு. மக் அனாலி மற்றும் அவர்களோடு ஒரு வேட்டைப் பயணம் செல்லத் திட்டமிட்டிருந்தேன். மேலும் நான், "பாருங்கள், நான் அந்தப் பிள்ளைகளை மரிக்கும்படி விட்டுவிட்டு, என்னுடைய முயற்சியை எடுக்காமலிருந்தால், என்னால் மீண்டும் வேட்டைக்கு செல்ல முடியாது" என்று எண்ணினேன்.

62 எனவே நான், "சரி, நான் வருகிறேன்" என்றேன். நான் ஹூஸ்டனுக்கு கூட்டத்திற்கு வந்தேன், நிச்சயமாக...அவர்கள் அவர்களை ஒருபோதும் கொல்லவில்லை, அவர்கள் அப்படியே... அவர்கள் அவர்களுக்கு ஆயுள் தண்டனை கொடுத்தனர். அதைத்தான் அவர்கள் செய்ய வேண்டும் என்று விரும்பினர், அவர்களுக்கு ஆயுள் தண்டனை வழங்கப்பட வேண்டும் என்று விரும்பினர். எனவே டெக்ஸாஸில் ஏறக்குறைய இருபத்தியொரு வருடங்கள் என்று நான் யூகிக்கிறேன்.

63 ஆகையால் அதன்பின்னர், திரும்பிச் செல்லும்போது, நான் மலையின் மேல் ஏறி, நான் சகோதரன் ஃபிரட் சாத்மனோடும் சென்றேன். அவர் இங்கே எங்கோ இருக்கிறார். சகோதரன் ஃபிரட், நீங்கள் எங்கே இருக்கிறீர்கள்? சரியாக இங்கே. சகோதரன் ஃபிரட் சாத்மன், சகோதரன் ஜீன் நார்மன்; ஒரு நாள், இரண்டாம் நாள் அங்கே அமர்ந்திருந்தபோது, கர்த்தருடைய தூதன் நேராக நாங்கள் இருந்த முகாமிற்குள்ளாக வந்து, அவர்களுடைய பிள்ளைகளைக் குறித்தும், அவர்கள் செய்து கொண்டிருந்த காரியங்களைக் குறித்தும் கூறத் துவங்கினர்.

64 நான் அங்கிருந்து புறப்பட்டு மலையின் மேல் திரும்பிச் சென்றேன். நான் ஏற்கனவே என்னுடைய ஜாவெலினா பன்றியைப் பெற்றுவிட்டிருந்தேன், மேலும் ஒன்றைப் பின்தொடர்ந்து அதைச் சகோதரன் ஃப்ரெட்டிடம் கொண்டு சேர்க்க முயன்றுகொண்டிருந்தேன். எனவே மலையின் ஓரத்தில் அவைகள் புசித்துக் கொண்டிருந்ததை நான் கண்டேன், அப்பொழுது நான், "சரி, இப்பொழுது, நான் என்ன செய்ய வேண்டும் என்பதை நான் உங்களுக்குக் கூறுவேன், சகோதரன் ஃபிரட்" என்றேன். நான், "இப்பொழுது, நீங்கள் காலையில் அந்த முனைக்குச் செல்லுங்கள்" என்றேன். நாம் பகல் வெளிச்சத்தில் மலையின் மேல் ஏறிச் செல்கிறோம். "பகல் வெளிச்சத்தில் அங்குச் செல்லுங்கள், நான்

மறுபுறம் செல்வேன். இப்பொழுது, நான் ஒன்றை சுடமாட்டேன், ஆனால் அவைகள் இந்த வழியாக ஓடினால், நான் அவைகளுக்கு முன்னால் சுட்டு அவைகளைத் திருப்பிவிடுவேன். நீங்கள் ஒரு பெரிய ஒன்றைத் தேர்ந்தெடுங்கள்" என்றேன்.

65 அவர், "சரி" என்றார்.

66 எனவே சகோதரன் ஃபிரட் அங்குச் சென்றார். சகோதரன் ஜீன் நார்மன் (சகோதரன் ஜீன் வரவில்லை என்று நான் நினைக்கிறேன், அவர் வந்தாரா?), அவர்—அவர் மற்றொரு பக்கத்தில் இருந்தார். ஜீன் நார்மனை உங்களில் அநேகருக்குத் தெரியும், அவர் அநேகருக்கு நெருங்கிய நண்பர், அருமையான சகோதரன். அவர் சற்று கீழே சென்றார். அங்கே, அந்தப் பன்றிகள், அவைகள் அன்று காலை அங்கே இருக்கவில்லை. சகோதரன் ஃபிரட்டைப் பார்த்துக் கையசைத்தேன், அவர் என்னிடத்திலிருந்து ஒரு மைல் தூரத்தில் இருந்தார். பாருங்கள், நான், "அவைகள் எங்கே சென்றிருக்க முடியும்?" என்று எண்ணினேன். நான் ஒரு பெரிய பள்ளத்தாக்கிற்குள் சென்று, கீழே இறங்கி வந்து, "அவைகள் எங்கே இருக்கின்றன என்பதை என்னால் கண்டுபிடிக்க முடியுமா என்று பார்க்கலாம்" என்று நினைத்தேன். திரும்பவும் துவங்கினேன். பகல் வெளிச்சத்திற்குப் பிறகு, சூரியன் உதயமாகத் துவங்கிக்கொண்டிருந்தது.

67 நான் ஒரு மாபெரும் பிளவைச் சுற்றிச் சென்றேன், ஓ, என்னே, நூற்றுக்கணக்கான, நூற்றுக்கணக்கான அடிகள், அங்கே அந்தப் பெரிய பள்ளத்தாக்கில் உள்ள பெரிய பாறைகள், அந்தப் பெரிய சுவர்கள். அது ஒருவிதமாக...சூரியன் உதயமாகிக் கொண்டிருந்தது, கிட்டத்தட்ட ஏழு மணிக்கு, அல்லது அதைப் போன்ற ஏதோ ஒன்று என்று நான் யூகிக்கிறேன். நான் கீழே அமர்ந்து, சுற்றும் முற்றும் பார்த்துக் கொண்டிருந்தபோது, நான் என்னுடைய கால் சட்டையைக் கீழே நோக்கிப் பார்க்க நேர்ந்தது, அங்கே அந்த நெருஞ்சில் முள் இருந்தது. மேலும் நான், "உங்களுக்குத் தெரியும், அது விசித்திரமாகத் தென்படுகிறது. நான் டூசானுக்கு வடகிழக்கே நாற்பது மைல் தூரத்தில் இருப்பேன் என்று கர்த்தருடைய தூதன் என்னிடம் கூறினார் என்பதை நீங்கள் அறிவீர்கள். நான் ஒரு நெருஞ்சில் முள்ளை என்னுடைய காலிலிருந்து எடுத்துவிடுவேன்" என்றேன். உங்களுக்கு அது நினைவிருக்கிறதா? உங்களுக்கு நினைவிருக்கிறதா? ஆம், ஐயா. பார்த்தீர்களா? நான், "அது விநோதமாக இருக்கிறது" என்றேன். நான் அதைப் பிடித்துக் கொண்டிருந்தேன்.

68 நான் நிமிர்ந்து பார்த்தபோது, எனக்குச் சுமார் ஐநூறு கெஜம் தொலைவில், ஏறத்தாழ இருபது பன்றிகள் வெளியே வந்து அந்தச் சிறிய இலைச்செடியை மேய்ந்துவிட்டுப் படுத்துக்கொள்வதைக் கண்டேன். நான், "இப்பொழுது, என்னால் சகோதரன் ஃபிரட்டை அந்த இடத்திற்கு கொண்டு செல்ல முடிந்தால், அவர் தன்னுடைய

பன்றியை அங்கேயே பிடித்துக்கொள்வார். ஆனால் அவர் இப்பொழுது எனக்கு ஒன்று அல்லது இரண்டு மைல்கள் தூரத்தில் இருக்கிறார் என்பதை நான் அறிவேன். எனவே," நான், "அவைகள் என்னைப் பார்க்காமல், அங்கே அந்தச் சின்ன சீமைக்கருவேல மரத்தருகே இந்தச் சின்ன மலைச்சரிவைக் கடந்து செல்ல முடிந்தால்," என்றேன். நான், "நான் இந்தப் பக்கமாகச் சுற்றிப் சென்றால், அங்கே ஒரு மான் பாதை இந்தப் பக்கமாக வந்து, நான் அங்கு ஓடி, அந்த வழியை விட்டு வெளியேற முடியும். மேலும், இந்தப் பள்ளத்தாக்கில் எந்த விரல் வழியாக வெளியே செல்ல வேண்டும் என்று எனக்குத் தெரியும்படி ஒரு சிறிய காகிதத் துண்டை இங்கே தொங்க விடுவேன், அதன் மூலம் சகோதரர் ஃப்ரெட்டைச் சரியான நேரத்தில் அங்கே கொண்டு சேர்க்க முடியும்" என்று கூறினேன்.

69 நான் அதைக் குறித்து மறந்துவிட்டபடியால், நான் இந்தச் சிறிய நெருஞ்சில் முள்ளைக் கீழே வீசினேன். மெள்ள குன்றின் குறுக்கே செல்லத் தொடங்கி, திரும்பிப் பார்த்தபோது, அவை என்னைக் கவனிக்கவில்லை, பிறகு கீழே ஓடி, இந்த மான் பாதையை அடைந்தன. நான் ஒரு பெரிய கருப்பு தொப்பியை அணிந்திருந்தேன். நான் இந்தப் பள்ளத்தாக்கினூடாக மிக வேகமாக ஓடத் துவங்கினேன், அது சம்பவித்தது.

70 முழுப் பூமியும் எங்கும் அதிர்ந்தது. *அந்த* அளவுப் பாறைகள் உருண்டு, தூசி *அந்த* விதமாகப் பறந்தது. அப்பொழுது நான் பார்த்தபோது, எனக்கு முன்பாக ஏழு தூதர்கள் நின்று கொண்டிருந்தனர்; அது இருந்தபடியே இருந்தது. நான் தரையிலிருந்து உயரே நிற்பது போன்றே உணர்ந்தேன். முதலில், யாரோ என்னைச் சுட்டுவிட்டார்கள் என்று நினைத்தேன், தெரியுமா, அந்தக் கருப்பு தொப்பியைப் பார்த்ததும்; எப்படியிருந்தாலும் அது ஒரு ஜாவெலினா பன்றி மாதிரி இருந்தது, அவை கருப்பாக இருக்கும், உங்களுக்குத் தெரியும். யாரோ என்னைச் சுட்டுவிட்டார்கள் என்று நினைத்தேன், அவ்வளவு...மிக அருகில். அப்போதுதான் அது என்னவென்று நான்—நான் பார்த்தேன். சரி, உடனே...நான் என் கட்டளையைப் பெற்றவுடனேயே, வேதத்தில், "ஏழு இரகசியங்களாகிய ஏழு முத்திரைகள்." பார்த்தீர்களா?

71 யாரோ ஒருவர் என்னிடம், "இப்பொழுது..." என்றார். ஓ, அவர், "சரி, இப்பொழுது, என்றோ ஒரு நாள் கர்த்தர் அநேகமாக (நீங்கள் தரிசனங்களைக் காண்கிறீர்கள், சகோதரன் பிரான்ஹாம்) இந்தக் காரியங்கள் என்னவாயிருக்கின்றன என்பதை உங்களுக்கு வெளிப்படுத்துவார், அந்நிய பாஷைகளிலும் மற்ற காரியங்களிலும் பேசுவதைக் காட்டிலும் நாம் எல்லோரும் தேவனிடத்தில் நெருங்கி வந்து, அதிக வல்லமையுடையவர்களாயிருக்க முடியும்" என்றார்.

72 நான், "அது அந்தவிதமாக இருக்க முடியாது" என்றேன்.

73 காரணம், பாருங்கள், அந்த வார்த்தை சத்தியம் என்று நான் விசுவாசிக்கிறேன். வேதம், "எவனாகிலும் ஒரு வார்த்தையைக்

கூட்டினாலும் அல்லது அதிலிருந்து ஒரு வார்த்தையை எடுத்துவிட்டாலும்" என்று கூறியுள்ளது. அது இந்த வார்த்தையில் இருக்க வேண்டும். பார்த்தீர்களா? ஜனங்கள் கண்டுகொள்ளாமல் விட்டுவிட்ட இரகசியங்கள், ஏனென்றால் அங்கேதான் என்னுடைய செய்தி *சர்ப்பத்தின் வித்தின்* செய்தியும், விசுவாசியின் பாதுகாப்பின் உண்மையான விசுவாசமுமே வந்தன.

74 நான் அங்குள்ள எனது பிரஸ்பிடேரியன் சகோதரர்களை இழிவுபடுத்தவில்லை, மேலும் வரும் வழியில் உள்ள பாப்டிஸ்ட் சகோதரர்களான உங்களில் சிலருக்குப் பாதுகாப்பு உள்ளது. இது வித்தியாசமாயிருக்க வேண்டும் என்று நான் கூறவில்லை, ஆனால் நீங்கள் அதைச் சரியாகக் கொண்டிருக்கவில்லை. பார்த்தீர்களா? அது உண்மை. பார்த்தீர்களா? ஆனால் நானும் கூட அதைத் தவறாகக் கூறினேன். ஆனால் வானத்திலிருந்து ஒரு தூதன் நின்று, உங்களிடம் கூறும்போது, அது வேதத்தில் சரியாக உள்ளது, அது உண்மை. பார்த்தீர்களா? அது உண்மை. பாருங்கள், அவர் எப்பொழுதுமே வேதவாக்கியத்தோடு சரியாகப் பேசுகிறார்.

75 அந்த வட்டமானது மேலே செல்லும் வரை நான் அதைக் கவனித்தேன், அவர்கள் ஒரு மறைவான ஒளியைப் போலவும், ஒரு மூடுபனியைப் போலவும் மாறினர். சரியாக அதே விதமாக... ஹூஸ்டனில் எடுக்கப்பட்ட அந்தப் புகைப்படத்தை எத்தனை பேர் பார்த்திருக்கிறீர்கள்? கிட்டத்தட்ட எல்லாமே. பார்த்தீர்களா? பாருங்கள், அந்தவிதமாகத்தான் இதுவும் இருந்தது. அது அதே காரியமாக மாறி, உயர உயரச் சென்று கொண்டேயிருந்தது.

76 நான் ஓடி, ஓடி, சகோதரன் ஃபிரட்டையும் அவர்களையும் கண்டுபிடிக்க முயற்சித்துக் கொண்டிருந்தேன். சிறிது நேரம் கழித்து, சுமார் அரை மணி நேரம் கழித்து, அவர் தன்னுடைய கரங்களை அசைத்துக் கொண்டிருப்பதையும்; சகோதரன் ஜீன் வந்து கைகளைக் அசைத்துக் கொண்டிருப்பதையும் என்னால் காண முடிந்தது. ஏதோ ஒன்று சம்பவித்திருந்தது என்பதை அவர்கள் அறிந்திருந்தனர். ஆகையால் அதன்பின்னர் நான் அவர்களோடு சேர்ந்து கொண்டேன். சகோதரன் ஃபிரட் *அங்கே* அமர்ந்திருக்கிறார்.

77 அது மேலே சென்றபோது, மெக்சிகோவின் நடுவே அமைந்திருந்த ஆய்வகங்களும் மற்ற காரியங்களும் அந்தப் புகைப்படத்தை எடுத்துக்கொண்டிருந்ததை நான் அறியவில்லை. *லைஃப்* என்ற பத்திரிக்கை அதைக் குறித்து செய்தி வெளியிட்டது. உங்களில் அநேகர்...இங்கே *லைஃப்* என்ற பத்திரிக்கை அதைக் குறித்த புகைப்படத்தைப் பிரசுரித்துக் கொண்டிருக்கிறது. இங்கே ஒரு இரகசியமான காரியம், அது எங்கிருந்து வந்தது என்று தங்களுக்குத் தெரியாது என்று அவர்கள் கூறினர்; அது மிகவும் உயரமானது. அது எல்லாக் கோளங்களுக்கும் மேலாக...இது மூடுபனியாக இருப்பதற்கு மிகவும் உயரத்தில் இருந்தது, ஏனென்றால் அது முப்பது மைல் உயரமும், இருபத்தியேழு மைல்கள் குறுக்கே

அவ்வளவு உயரமாயுள்ளது. அங்கே மேலே ஈரப்பதமோ வேறு எதுவுமோ கூட இல்லை, நீங்கள் பாருங்கள்.

78 அவர்கள் ஒரு விமானத்தைக் குறித்து நினைத்தனர்; எனவே அவர்கள் எல்லா இடங்களையும் சோதித்தனர், அந்த நாளில் விமானம் செல்லவில்லை. பாருங்கள், ஜன்னல்கள் ஆடுவதாலும் மற்றும் மற்ற காரியங்களின் நிமித்தமாக அவர்கள் அப்படிச் செய்ய வேண்டியிருக்கிறது. “விமானங்கள் ஏதும் இல்லை.” இதோ அது இங்கே பத்திரிக்கையில் வந்துள்ளது, உங்களுக்கும் அதேக் காரியத்தைக் கூறும். மேலும்—மேலும் அது தொடர்ந்து சென்று கொண்டேயிருந்தது. இன்றைக்கு சரியாக...

79 இதோ அது *விஞ்ஞானம்* என்ற பத்திரிக்கையில் வந்துள்ளது, அதை அவர்களால் புரிந்து கொள்ள முடியவில்லை. அது என்னவென்று அவர்களுக்குத் தெரியாது.

80 டூசானில் உள்ள பல்கலைக்கழகத்தில் என்னுடைய நண்பர் ஒருவர் அன்றொரு நாள் அங்குச் சென்று, அவர்களிடத்தில் அதைக் குறித்து பேசிக்கொண்டிருந்தார். மேலும், “என்னவென்று எங்களால் புரிந்து கொள்ள முடியவில்லையே...” என்றார்.

81 நான், “எதையும் கூறாதே, எந்த நன்மையும் செய்யாது. ‘உங்கள் முத்துக்களை பன்றிகளுக்கு முன்பாக எறிந்துவிடாதிருங்கள்’” என்றார். பார்த்தீர்களா? அது சபைக்கு, தெரிந்து கொள்ளப்பட்டவர்களுக்கு, வெளியே அழைக்கப்பட்டவர்களுக்கு உரியது. பார்த்தீர்களா?

82 அதன்பின்னர் ஒவ்வொருவரும் வந்து, “சகோதரன் பிரான்ஹாம், நான் உங்களுடைய புகைப்படத்தை இங்கே காண்கிறேன். நான் *இதைக்* காண்கிறேன். நான்...” என்று சொல்லிக்கொண்டிருந்தார்கள். அது எப்படியிருக்கிறது என்பதை நீங்கள் அறிவீர்கள். ஆனால் அந்த—அந்த அதிவேக வீச்சில், உள்ள இந்தச் சகோதரன்...என்னை மன்னிக்கவும். இது இப்படித்தான் தொடங்கியது, பரவலாக. *இது* உண்மையாகவே வலது புறமாக இருந்தது. மேலும், “குறிப்பிடத் தக்க தேவதூதன்தான் என்னிடம் பேசினார், வலது பக்கத்தில் இருந்தார்” என்று நான் சொன்னது, உங்கள் அனைவருக்கும் நினைவிருக்கும் என்று கூறினேன். அது சம்பவிப்பதற்கு முன்பே. உங்களுக்கு நினைவிருக்கிறதா? அதனுடைய சிறகுகள் *இவ்விதமாகப்* பின்னால் நீட்டப்பட்டிருந்தன. சரியாக அந்தத் தூதனின் செட்டைகள் மேலே மேலே சென்றன. பாருங்கள், அது... எனவே அவர்கள் புகைப்படங்கள் எடுக்கத் துவங்கினர், ஏனென்றால் அது மிகவும் இரகசியமாயிருந்தது. ஆனால் கடைசி காட்சியில், அது ஆகாயத்திற்குள்ளாகத் தோன்றினபோது, மற்றும் பல. இதுதான் அது, இங்கே *லுக்,* என்ற பத்திரிக்கையில் அது வெளியிடப்பட்டது. அவர்கள் அதைக் காணத் துவங்கும்போது, அது எப்படி மேலே செல்கிறது என்பதை நீங்கள் பாருங்கள், நீங்கள் பாருங்கள். அது

உருவானபோது, அது—உண்மையான முக்கிய மற்றும் கடைசி காட்சியாக வருகிறது.

83 அது எங்கிருந்து வந்தது என்றும், அது எங்கே சென்றது என்றும் அவர்களுக்குத் தெரியாது. விஞ்ஞானம் அதைக் குறித்து முற்றிலும் திகைப்படைந்துள்ளது, என்ன சம்பவித்தது என்று தெரியவில்லை. ஆனால் நாம்: "மேலே வானத்திலே அடையாளங்கள் இருக்கும்" என்பதை அறிவோம். நாம் அதை அறிவோம். பார்த்தீர்களா? அவர் இந்தக் காரியங்களை வாக்குத்தத்தம் செய்தார். பார்த்தீர்களா? இது எடுக்க அனுமதிக்கப்பட்ட ஒரே காரியம்...

84 இப்பொழுது, இந்தக் காலையில் நாம் இங்கே சொந்த சபையில் உள்ளவர்களாய் இருக்கிறோம் என்பதை நான் அறிவேன். எல்லாவற்றையும் அறிந்தவன் என்ற முறையில் சகோதர அல்லது சகோதரிகளாகிய உங்களை நான் எப்போதாவது கவர்ந்திருந்தால், தயவு கூர்ந்து என்னை மன்னியுங்கள். நான் அவ்வாறு இருக்க வேண்டும் என்று கருதவில்லை. நான் நின்று...இன்று காலையில் இங்கே அமர்ந்து வேத பண்டிதர்கள், புத்திசாலியான மனிதர்களுக்கு முன்பாகப் பேசிக்கொண்டிருக்கிறேன்; நான்—நான் படிப்பறியாதவன், என்னுடைய வேத வாக்கியங்களை கூட என்னால் சரியாக உச்சரிக்க முடியாது. இன்று காலை நான் ஒரு அத்தியாயத்தைப் படிக்க வேண்டியிருந்தது, அதை...எனக்காக இங்குள்ள சகோதரர்களில் ஒருவரிடம் படித்துக் காட்டச் சொல்லலாம் என்று இருந்தேன். ஏனென்றால் என்னால் அதில் உள்ள பெயர்களைக் கூட உச்சரிக்க முடியாது, முதலாம் நாளாகமம் 13-ம் அதிகாரத்தில் (சகோதரர் ஜாக், நீங்கள் விரும்பினால், அதைத் தேடி எடுக்கலாம்), என்னுடைய பாடப் பொருளுக்காக. என்னால்—என்னால் அந்தப் பெயர்களைக் கூட உச்சரிக்க முடியாது, நான் அதைச் செய்ய அவரை அனுமதிக்கிறேன், ஏனென்றால் அவரால் அவைகளை உச்சரிக்க முடியும்.

85 நான் அறிவாற்றலுள்ள மனிதர்களிடத்தில் பேசிக்கொண்டிருக்கிறேன் என்பதை நான் அறிவேன். ஆனால், சகோதரரே, நீங்கள் என்னுடைய கல்வியறிவின்மையை நோக்கிப் பார்க்காதபடிக்கு இந்தக் காரியங்கள் செய்யப்படுகின்றன, ஆனால் நான் உங்களிடத்தில் சத்தியத்தை சொல்லிக் கொண்டிருக்கிறேன் என்று விசுவாசியுங்கள். அது தேவன் உங்களுக்குச் சத்தியத்தை உரைக்கிறதாயுள்ளது. அதுதான் சத்தியம். பார்த்தீர்களா?

86 இப்பொழுது, நான் ஸ்தாபனங்களைக் குறித்து பேசும்போது, நீங்கள் மிகவும் கொடூரமானவர்களாயிருக்க வேண்டும் என்று நான் பொருட்படுத்திக் கூறவில்லை...இல்லை, நீங்கள் உங்களுடைய சபைக்குச் செல்லக் கூடாது என்று நான் பொருட்படுத்திக் கூறவில்லை. நீங்கள் என்ன செய்ய வேண்டியவராயிருக்கிறீர்கள், உங்களுடைய சபைக்குச் செல்லுங்கள். ஆனால் அந்த ஸ்தாபனங்களுடன் சேர்ந்து கொள்ளாதீர்கள், ஏனென்றால் ஒரு

நாள் நான் உங்களுக்குக் கூறி, அதை வேத வாக்கியத்தின் மூலம் நிரூபிப்பேன், அது மிருகத்தின் முத்திரை. அது முத்திரை என்பதை நீங்கள் நினைவில் கொள்ளுங்கள்.

87 நான் பிரசங்கித்துக் கொண்டிருக்கிறேன்…நான் அதைச் சகோதரன் ஜேக் அவர்களுடைய சபையில் பிரசங்கிக்கமாட்டேன், அவர் என்னிடத்தில், “போய் அதைச் செய்” என்று கூறுவார்; ஆனால் நான் கூடாரத்திற்கு செல்லப்போகிறேன், அது ஏறக்குறைய நான்கு மணி நேரம் நீடிக்கும். என்னுடைய பொருள் என்னவென்றால், “மிருகம் ஆதியிலும், முடிவிலும், சர்ப்பத்தின் சுவடு வழியாக” என்பதேயாகும். புரிகிறதா? அதற்குச் சுமார் நான்கு மணி நேரம் ஆகும். நான் என்னுடைய வேதவாக்கியங்கள் யாவற்றையும் குறித்து வைத்துள்ளேன். ஆதியிலிருந்தே மிருகம் இருந்தது, அது ஏதேன் தோட்டத்தில் மிருகமாக இருந்தது, அது முடிவிலே மிருகம், அவன் ஒரு மதசம்பந்தமான நபர் என்றும், (அந்த ஸ்தாபனத்தை உண்டாக்கிக் கொண்ட) ஒரு ஸ்தாபனம் என்றும் காண்பித்து; அதைக் குறித்த சுவடுகளினூடாக நேராக வந்து, அது உள்ளது என்று வேத வாக்கியங்களைக் கொண்டு அதை உங்களுக்கு நிரூபிப்பேன். அன்றொரு நாள் பரிசுத்த ஆவியானவர் அதை எனக்கு அருளும் வரையில் நான் அதை அறிந்திருக்கவில்லை.

88 இப்பொழுது, இதில், நான் இதை ஒரு நாள் நின்று கவனித்துக் கொண்டிருந்தபோது, ஏதோ ஒன்று என்னிடம் கூறியது…அதைப் பார்த்துக் கொண்டிருந்தபோது, நான் நினைத்தேன்…சகோதரன் ஹிக்கர்ஸன், என்னுடைய தர்மகர்த்தாக்களில் ஒருவரான…இல்லை ஜெபர்ஸன்வில் சபையின் உதவிக்காரர்…சபைக்குச் செல்வதில் எனக்கு நம்பிக்கையில்லையென்றால், நான் ஏன் சபைக்குச் செல்ல வேண்டும்? அன்றொரு இரவுத் தேசம் முழுவதிலும் உள்ள அவைகளை நாங்கள் இணைத்துக் கொண்டோம், ஒவ்வொரு இருநூறு சதுர மைல்களுக்கும் என்னுடைய சபைகள் இருந்தன.

89 இப்பொழுது, இந்த—இந்தப் புகைப்படத்தை, நான் நின்று, அதைப் பார்த்துக் கொண்டிருந்தேன், ஏதோ ஒன்று…நான் என்னுடைய அறையில் நின்று கொண்டிருந்தேன். ஏதோ ஒன்று, “அதை வலப்புறமாகத் திருப்பு” என்று கூறியது. நான் செவி கொடுத்தேன்.

90 அது யாரோ ஒருவரை சற்று மனரீதியாக நிலைகுலைத்து விட்டது போன்று தென்படுகிறது என்பதை நான் அறிவேன், ஆனால், நீங்கள் பாருங்கள், அன்றொரு இரவு நான் கூறினது போல, இந்த மகத்தான காரியங்கள் எல்லாம் மிகவும் அறிவாற்றல் வாய்ந்தவை…இப்பொழுது, நான் அதற்கு எதிரானவன் அல்ல. நினைவிருக்கட்டும், நாங்கள் உங்களுடைய பிள்ளைகளைப் பள்ளிக்கு அனுப்பி, கல்வி போன்றவற்றைக் கற்பிக்க வேண்டும், ஆனால் இப்பொழுதே நான் உங்களுக்குச் சொல்லுவேன், அது வரப்போகும் உலகத்தில் அவர்களுக்கு எந்த நன்மையையும்

செய்யாது, ஏனென்றால் அது வேறொரு நாகரீகமாக இருக்கும், இதற்கும் மேலாக எல்லா வழிகளிலும் இருக்கும். அந்த நாகரிகத்தில் எதுவுமே இருக்காது...அதில் எந்தப் பள்ளிகளும் இருக்காது, அதில் எந்த மரணமும் இருக்காது, அதில் எந்தப் பாவமும் இருக்காது. இது அந்த எல்லாவற்றையும் கொண்டுள்ளது; நாம் எவ்வளவுதான் நாகரீகமடைந்திருந்தாலும், எல்லா நேரத்திலும் அதிகமான மரணம் சேர்ந்து கொண்டேயிருக்கிறது. பார்த்தீர்களா? அந்த ஒருவர் மரணமில்லாதவராயிருப்பார். ஆனால் இப்பொழுது நாம் பள்ளியை உடையவர்களாயிருக்க வேண்டும், நாம் ஆடைகளை அணிய வேண்டும், நாம்...

91 நான் இன்று காலைச் *சாத்தானின் ஏதேன்* என்ற தலைப்பில் பேசப்போவதாக இருந்தேன் (உங்களில் அநேகர் அதைக் குறித்த ஒலிநாடாவை வைத்திருக்கிறீர்கள்), *சாத்தானின் ஏதேன்.* அவன் மற்றொரு ஏதேன் தோட்டத்தை உருவாக்கியுள்ளான், தேவன் துவக்கத்தில் செய்ததைப் போலவே, அதைச் செய்ய அவனுக்கு ஆறாயிரம் ஆண்டுகள் பிடித்திருக்கின்றன. தேவன் தம்முடைய ஏதேனை உண்டாக்கினார், சாத்தான் அதைக் கெடுத்துவிட்டான். இப்பொழுது சாத்தான் தன்னுடைய சொந்த ஏதேனை உண்டாக்கிக் கொண்டான், தேவன் அதை அழித்து, தன்னுடையதை ஏற்படுத்தப் போகிறார் (அது உண்மை).

ஏதோ ஒன்று என்னிடத்தில், “அதை வலப்புறம் திருப்பு” என்று கூறியது.

நான், “நான் அதைச் சரியாகக் கவனித்துக் கொண்டிருக்கிறேன் என்று நான் நினைக்கிறேன்” என்று எண்ணினேன்.

“அதை *வலப்புறம்* திருப்பு” என்றது. பார்த்தீர்களா?

92 நான், “ஒருகால் அந்தச் சத்தம் அதை வலப்பக்கமாகத் *திருப்புவதை* அர்த்தப்படுத்துகிறது” என்று எண்ணினேன். நான் அதைப் பார்த்தபோது, அது என்னவென்று நீங்கள் பாருங்கள்: ஹாஃப்மேனின் *கிறிஸ்துவின் தலை,* முப்பத்தி மூன்று. இங்கே, இங்கே நோக்கிப் பாருங்கள், அவருடைய கறுப்பு தாடி, அவருடைய முகம், அவருடைய கண்கள், அவருடைய மூக்கு மற்றும் மற்ற ஒவ்வொரு காரியத்தையும் பாருங்கள். அவருடைய தலைமுடியின் பாகம் இங்கே மேலே வருவதைப் பாருங்கள். அவர் தேவனாயிருக்கிறார் என்ற செய்தி சத்தியமாயிருக்கிறது என்பதை காண்பிக்கும்படியாக அவர் அந்த வெள்ளை தூதன் செயற்கை தலைமுடியை அணிந்திருக்கிறார். அவர் பிரபஞ்சத்தின் உன்னத நியாயாதிபதியாய், வானத்திற்கும் பூமிக்கும் மேலான நியாயாதிபதியாயிருக்கிறார். அவர் தேவனாயிருக்கிறார், தேவனைத் தவிர வேறொன்றுமில்லை. அவர் தேவனுடைய குமாரன் என்று அழைக்கப்படுகின்ற மானிட உருவில் வெளிப்படுத்தப்பட்ட தேவனாயிருக்கிறார், அந்தக் குமாரன் மனிதனாயிருந்தார். அது

நமது செய்தியை முற்றிலும் சரியானதாக ஆக்கவில்லையென்றால்: வேத வாக்கியத்தினால் அடையாளங்கண்டு கொள்ளப்பட்டு, ஊழியத்தில் அடையாளங்கண்டு கொள்ளப்பட்டு, அவருடைய பிரசன்னத்தினால் அடையாளங்கண்டு கொள்ளப்பட்டு, நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார். ஆகையால் சகோதரரே, அந்த ஏழு முத்திரைகள் சத்தியமாயிருக்கின்றன. அவர்களோடு இணங்காமல் இருக்கலாம், ஆனால் ஒரு முறை அமர்ந்து அதை உங்களுடைய திறந்த இருதயத்தோடு ஆராய்ந்து பாருங்கள், பரிசுத்த ஆவியானவர் உங்களை வழி நடத்தட்டும்…

93 இங்கே, சகோதரன் ஜேக்…இதைப் பிரசங்கிப்பதற்கு முன்பு நான் அவரை அழைத்தேன் ஒரு முறை அவரிடத்தில், "இந்த வெண்மையான செயற்கை தலைமுடி என்ன?" என்பதைக் குறித்துப் பேசினேன்.

94 அவர், "பாருங்கள், சகோதரன் பிரான்ஹாம், அது அவருடைய…அவருடைய மகிமையடைந்த சரீரத்தில் அவருடைய உயிர்த்தெழுதலுக்குப் பிறகு இருந்தது என்று நான் அதை அறிவிக்கிறேன்." நான் சகோதரன் ஜேக் அவர்களிடம் பேசிக்கொண்டிருந்தேன். மேலும்…சகோதரர் ஜாக் மூர், சகோதரர் வேல் மற்றும் அவர்களைப் போன்ற, எல்லா வகையான புத்தகங்களையும் வெவ்வேறு கோணங்களிலும் வாசித்த உண்மையான இறையியலாளர்களின் இறையியல் மற்றும் அது தொடர்பான போதனைகளை நான் சார்ந்திருப்பதைப் போல—போல, உலகில் வேறு யாரையும் நான் அதிகமாகச் சார்ந்திருக்க மாட்டேன். சரி, ஆனால், நீங்கள் பாருங்கள், அதனோடும் கூட, என்னுடைய நெருங்கிய நண்பன், என்னால்—என்னால்—என்னால் அதை ஏற்றுக்கொள்ள முடியவில்லை, அங்கே ஏதோ ஒன்று அதை ஏற்றுக்கொள்ளவில்லை.

95 அதன்பின்னர் அது வரும்போது, இது, அதன்பின்னர் அது என்னவென்று நான் பார்க்கிறேன். இங்கே அவருடைய கருமையான தாடி உள்ளது. நீங்கள் அதைக் காண்பீர்கள் என்று நான் யூகிக்கிறேன். பார்த்தீர்களா? அவருடைய கருமையான தாடியும், கருமையான முடியும், அவருடைய கண்கள், மூக்கு, எல்லாமே பரிபூரணமாக, அவருடைய தலைமுடியின் பாகமும் கூட இந்தப் பக்கமாக வந்து கொண்டிருந்தது. அவரே தேவன்! பார்த்தீர்களா? அவர் நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார். இது *லுக்* என்ற பத்திரிக்கை…இல்லை *லைஃப்* என்ற பத்திரிக்கை. நான் நினைக்கிறேன் இது…இப்பொழுது அது என்ன இதழ் என்பதை நான் மறந்துவிட்டேன்; ஓ, மே பதினேழாம் தேதி, 1963. அப்பொழுதுதான் அது வெளிவந்தது, அந்தப் பத்திரிக்கை யாருக்காவது வேண்டுமானால். ராக்பெல்லரும் அவருடைய—அவருடைய மனைவியும் உள்ள அதே புகைப்படம்தான் அதற்குப் பின்னால் உள்ளது. இந்தப் புதிய *விஞ்ஞான* பத்திரிக்கை, "அது

இன்னமும் ஒரு இரகசியமாகவே உள்ளது.”

96 நான் எதற்காக இந்தக் காரியங்களைக் கூறினேன்? நாம் கூற முயற்சித்துக் கொண்டிருக்கிற காரியங்களைக் குறித்து ஒரு சிறு பார்வையை உங்களுக்கு அளிக்கும்படியாக, தேவன் சரியாயிருக்கும்படி வானத்திலும் பூமியிலும் அடையாளங்காட்டிக் கொண்டிருக்கிறார். இந்தப் பகுத்தறிதல், தரிசனங்கள், நாம் எப்பொழுதுமே ஏராளமான போலித்தனங்களை உடையவர்களாயிருக்கிறோம். ஆனால் நினைவிருக்கட்டும், ஒரு போலி டாலர் இருப்பதற்கு முன்பு, முதலில் ஒரு உண்மையான டாலர் இருக்க வேண்டும்; முதலில் அது ஒரு உண்மையான டாலராக இருக்க வேண்டும், அதன்பின்னர் அவைகள் அதிலிருந்து தயாரிக்கப்படுகின்றன. நமக்கு ஒரு உண்மையான மோசேயும், ஒரு உண்மையான ஆரோனும் இருந்தது போல, அவர்களுக்குப் பிறகு நமக்கு ஒரு யம்பிரேயும், யந்நேயும் இருந்தனர். இவையனைத்தும் எப்படி வருகிறது என்று நீங்கள் பார்த்தீர்களா? அவர்கள் அதைக் கண்டு, அதன்பின்னர் உண்மையாகவே அசலான *ஒன்று* இருக்கும்போது, அவர்கள் அதைப் பாவனை செய்ய முயற்சிக்கின்றனர். அது உண்மை. தீங்கிழைக்கவோ அல்லது இழிவுபடுத்தவோ அல்லது ஏதோ ஒன்றை தவறாக வைக்கவோ அதைக் கூறவில்லை, ஆனால் சத்தியத்திற்காக மாத்திரம்; நான் அதை அறிந்துகொள்ள...

97 நான் ஒரு வயோதிக மனிதனாகி கொண்டிருக்கிறேன், என்னுடைய காலம் மிக நீண்டதாக இல்லை என்பதை நான் அறிவேன். இயேசுவானவர் வரத் தாமதித்தால், நான்...இன்னும் சிறிது காலம் தங்கியிருக்கலாம்; ஆனால் என்றோ ஒரு நாள் இந்த இருதயம் தன் கடைசி துடிப்பைத் துடிக்கும் என்பதை நான் அறிவேன், நான் மரணம் என்று அழைக்கப்படுகின்ற ஒரு பெரிய, இருண்ட அறைக்குள் நுழைகிறேன். ஆனால் அது வரும்போது, மனந்திரும்ப முயற்சிக்கும்படியான எந்தக் காரியத்திற்காகவும் பின்னோக்கிப் பார்க்க நான் விரும்பவில்லை. நான் அந்த நேரத்திற்கு வரும்போது, நான் தேவனுடைய கிருபையினால் தூய்மையாகவும், சுத்தமாகவும் இருக்க விரும்புகிறேன். நான் இந்த ஒரு காரியத்தை என் சிந்தையில் வைத்துக் கொண்டு, நான் அங்குப் பிரவேசிக்கையில், நான் அவருடைய நீதியின் அங்கிகளை என்னையே சுற்றிக்கொள்ள விரும்புகிறேன்; அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமையில் நான் அவரை அறிந்திருக்கிறேன்; அவர் அழைக்கும்போது, நான் மரித்தோர் மத்தியிலிருந்து வெளியே வந்து அவரோடு என்றென்றைக்கும் ஜீவிப்பேன். இப்போது இங்கு என் நோக்கம் என்னவென்றால், ஒவ்வொரு மனிதரையும்...உங்கள் இறையியல்களை மாற்றிக்கொள்வதற்கோ அல்லது வேறு எதற்கோ அல்ல, மாறாக இந்த நாளுக்கான தேவனுடைய வாக்குத்தத்தத்தின் மீது உங்கள் விசுவாசத்தை அதிகரிக்கச் செய்வதே ஆகும்.

இப்பொழுது நாம் ஜெபிப்போமாக:

98 அன்புள்ள தேவனே, இந்தக் காலையில் நாங்கள் ஒரு நன்றியுள்ள ஜனங்களாய் இருக்கிறோம், ஆனால் அதே சமயத்தில் கர்த்தாவே, நாங்கள் ஒரு இருண்ட உலகத்தில் ஜீவித்துக் கொண்டிருக்கிறோம்... பிதாவே, இந்தக் காலையில் இங்கே எங்களில் எவருமே உம்மோடு நெருங்கி நடக்க விரும்பாதவர்களாய் இருக்கவில்லை என்று நாங்கள்—நாங்கள் உணருகிறோம், எங்களுடைய ஜீவியங்களில் உம்முடைய அந்த—அந்தத் தொடுதலை நாங்கள் விரும்புகிறோம், அது எங்களை மென்மையாக்கி, நெகிழ்வுத்தன்மை உடையதாக மாற்றும், அதன்மூலம் நீர் எங்களை எந்த நேரத்திலும் மாற்ற முடியும், தேவனுடைய குமாரரும், குமாரத்திகளுமாக எங்களை உருவாக்க முடியும். பிதாவே, அதுவே—அதுவே இங்குள்ள எங்களுடைய நோக்கமாயுள்ளது, அதுவே—அதுவே நான் உமக்கு முன்பாக ஜீவிக்க முயற்சிக்க வேண்டும் என்பதே என்னுடைய ஒரே குறிக்கோள், உம்முடைய வார்த்தையைப் பெற்றுக் கொண்டு அதைப் புருஷர்களிடமும், ஸ்திரீகளிடமும் திரும்ப உரைக்கவும்... ஒரு வித்தியாசமான நபராய் இருப்பதற்காக அல்ல, ஆனால் எனக்கு ஜீவனை அளித்திருக்கிறவரை கனப்படுத்த முயற்சிப்பதற்காகவே. கர்த்தாவே, அதை அருளும்.

99 இன்றைக்கு இங்கே ஒரு நபரும் இல்லாதிருப்பதாக...இல்லை—இல்லை...நாங்கள் இக்காலையில் மீண்டும் தேசம் முழுவதிலும் இணைக்கப்பட்டிருக்கிறோம். எங்களுடைய சத்தத்தைக் கேட்கிற எவரும், உமது உயிர்த்தெழுதலின் வல்லமையில் உம்மை அறியாமல் அந்த மகத்தான அறைக்குள் எப்பொழுதுமே செல்ல நேரிடாதிருப்பதாக. தேசத்தில் எங்காவது பாவிகள் இருந்தால், அந்த...அல்லது இந்தக் கட்டிடத்தில், இந்த மகத்தான அரங்கத்தில் இன்று காலை இங்கே அமர்ந்திருக்கையில். உம்மை அறியாதவர்கள் இருப்பார்களானால், இந்நாளில் அவர்களுடைய மனச்சாட்சி அசைக்கப்படும் நாளாய், விழித்தெழுந்து, எந்த நிமிடத்தில் நாங்கள் அழைக்கப்படலாம் அல்லது எங்களுடைய ஜீவியத்திற்காக உன்னதத்தின் பேரில் பதிலளிக்க அழைக்கப்படலாம் என்பதை அவர்கள் அறியார்கள் என்பதை அவர்கள் உணருவார்களாக. எங்களுடைய பெயர்கள் இன்னமும் அந்தத் தண்டு புஸ்தகத்தில் எழுதப்பட்டிருந்தால், நாங்கள் அழிந்துபோவோம்; ஆனால் அது ஆட்டுக்குட்டியானவரின் ஜீவபுஸ்தகத்தில், உண்மையான ஜீவனின் புத்தகத்தில் எழுதப்பட்டிருந்தால், அப்பொழுது நாங்கள் இரட்சிக்கப்பட்டிருக்கிறோம்.

100 கர்த்தாவே, அந்த ஜீவன் இலையிலிருந்து மகரந்தத் தூளுக்குள்ளும், பதருக்குள்ளும், அதன்பின்னர் தானியத்திற்கும் பயணிக்கும்போது, இன்று காலை நாங்கள் கடந்துசெல்லும் வேளையில், கர்த்தாவே, தானியத்திற்குள் செல்லக்கூடிய ஏதோ ஒரு ஜீவன், அந்தத் தண்டில் பின்தங்கி இருந்தால், அதை இன்றே

வெளியே கொண்டுவரச் செய்யும், அது தானியத்தின் அசைவைப் பின்தொடரட்டும், ஏனெனில் இயேசுவின் நாமத்தில் நாங்கள் இதைக் கேட்கிறோம். ஆமென்.

101 அதிக நேரம் எடுத்துக் கொண்டதற்கு வருந்துகிறேன். இது அங்கே வானொலி நேரத்திலும், தொலைபேசி நேரத்திலும் ஒலிபரப்பாகிறது என்பதையே நான் மறந்துவிட்டிருந்தேன்.

102 இப்பொழுது நாம் நம்முடைய வாசிப்பிற்காகத் திருப்புவோம். சகோதரன் ஜேக், உங்களுடைய வேதாகமத்தை அங்கே வைத்துள்ளீர்களா? நான் என்னுடைய வேதவாக்கியங்களைக் கண்டுபிடித்துக்கொண்டிருக்கையில், இந்த வேதவாக்கியத்தை வாசிக்கும்படி சகோதரன் ஜேக் அவர்களிடம் நான் கேட்டுக்கொள்வேன், ஏனென்றால் என்னால் இந்தப் பெயர்களை உச்சரிக்க முடியாது. சரி. அது முதலாம் நாளாகமம் 13-ம் அதிகாரத்தில் உள்ளது. [சகோதரன் ஜேக் மூர், "அந்த அதிகாரம் முழுவதுமா?" என்று கேட்கிறார்.—ஆசி.] ஹூ-ஹூ.

*[தாவீது ஆயிரம்பேருக்குத் தலைவரோடும் நூறுபேருக்குத் தலைவரோடும் சகல அதிபதிகளோடும் ஆலோசனைபண்ணி,]*

*[இஸ்ரவேல் சபையையெல்லாம் நோக்கி: உங்களுக்குச் சம்மதியும் நம்முடைய தேவனாகிய* ***கர்த்தருக்குச்*** *சித்தமுமாயிருந்தால், இஸ்ரவேலின் தேசங்களிலெல்லாம் இருக்கிற நம்முடைய மற்றச் சகோதரரும், அவர்களோடே தங்கள் வெளிநிலங்களில் இருக்கிற ஆசாரியரும் லேவியரும் நம்மோடே கூடும்படிக்கு நாம் சீக்கிரமாய் அவர்களிடத்துக்கு ஆள் அனுப்பி,]*

*[நமது தேவனுடைய பெட்டியைத் திரும்ப நம்மிடத்துக்குக் கொண்டுவருவோமாக; சவுலின் நாட்களில் அதைத் தேடாதேபோனோம் என்றான்.]*

*[இந்தக் காரியம் சகல ஜனத்தின் பார்வைக்கும் செம்மையாயிருந்தபடியால், சபையார் எல்லாரும் அப்படியே செய்வோம் என்றார்கள்.]*

*[அப்படியே தேவனுடைய பெட்டியைக் கீரியாத்யாரீமிலிருந்து கொண்டுவரும்படி, தாவீது எகிப்தைச்சேர்ந்த சீகோர் நதிதுவக்கி ஆமாத்தின் எல்லைமட்டுமுள்ள இஸ்ரவேலையெல்லாங்கூட்டி,]*

*[கேருபீன்களின் நடுவே வாசம்பண்ணுகிற* ***கர்த்தராகிய*** *தேவனுடைய நாமம் தொழுதுகொள்ளப்படுகிற அவருடைய பெட்டியை யூதாவிலிருக்கிற கீரியாத்யாரீமுக்கடுத்த பாலாவிலிருந்து கொண்டுவரும்படிக்கு, அவனும் இஸ்ரவேலர் அனைவரும் அவ்விடத்திற்குப்போனார்கள்.]*

*[அவர்கள் தேவனுடைய பெட்டியை அபினதாபின் வீட்டிலிருந்து ஒரு புது ரதத்தின்மேல் ஏற்றிக்கொண்டுவந்தார்கள்; ஊசாவும் அகியோவும் ரதத்தை நடத்தினார்கள்—நடத்தினார்கள்.]*

*[தாவீதும் சகல இஸ்ரவேலரும் தங்கள் முழுப் பலத்தோடும் தேவனுக்கு முன்பாகச் சுரமண்டலங்களையும் தம்புருகளையும் மேளங்களையும் கைத்தாளங்களையும் பூரிகைகளையும் சேவித்து மகிழ்ச்சியாய் ஆடிப்பாடினார்கள்.]*

*[அவர்கள் கீதோனின் களமட்டும் வந்தபோது, மாடுகள் இடறினபடியினால், ஊசா பெட்டியைப் பிடிக்கத் தன் கையை நீட்டினான்.]*

*[அப்பொழுது **கர்த்தர்** ஊசாவின்மேல் கோபம் மூண்டவராகி, அவன் தன் கையை பெட்டியண்டைக்கு நீட்டினதினிமித்தம் அவனை அடித்தார்; அங்கே அவன் தேவசமுகத்தில் செத்தான்.]*

*[அப்பொழுது **கர்த்தர்** ஊசாவை அடித்ததினிமித்தம் தாவீது விசனப்பட்டு, அந்த ஸ்தலத்திற்கு இந்நாள்மட்டும் வழங்கிவருகிற பேரேஸ்ஊசா என்னும் பேரிட்டு,]*

*[அன்றையதினம் தேவனுக்குப் பயந்து: தேவனுடைய பெட்டியை நான் என்னிடத்துக்குக் கொண்டுவருவது எப்படியென்று சொல்லி,]*

*[பெட்டியைத் தன்னிடத்தில் தாவீதின் நகரத்திலே கொண்டுவராமல், அதைக் கித்தியனாகிய ஓபேத்ஏதோமின் வீட்டிலே சேர்த்தான்.]*

*[தேவனுடைய பெட்டி ஓபேத்ஏதோமின் வீட்டிலே அவனிடத்தில் மூன்றுமாதம் இருக்கையில், **கர்த்தர்** ஓபேத்ஏதோமின் வீட்டையும் அவனுக்கு உண்டான எல்லாவற்றையும் ஆசீர்வதித்தார்.]*

103 சகோதரன் மூர், எனக்காக வேதத்தை வாசித்ததற்காக, உங்களுக்கு நன்றி. இப்பொழுது, அதை என்னாலேயே படிக்க முடியவில்லை என்பதற்கு வருந்துகிறேன், ஆனால் என்னால்— என்னால் அதைப் படிக்க முடியவில்லை.

104 இப்பொழுது நீங்கள் என்னோடு மாற்கு 7:7-க்கு திருப்ப விரும்புகிறேன். நாம் பரிசுத்த மாற்கு 7-ம் அதிகாரத்தில் முதல் ஏழு வசனங்களை வாசிப்போம்.

*எருசலேமிலிருந்து வந்த பரிசேயரும், வேதபாரகரில் சிலரும் அவரிடத்தில் கூடிவந்தார்கள்.*

*அவன் தன்னுடைய சீஷர்களில் சிலர் கறைபட்ட, அதாவது கழுவப்படாத கைகளால் அப்பம் புசிப்பதைக் கண்டபோது, அவர்கள் குறை கண்டனர்.*

*ஏனெனில் பரிசேயர் முதலிய யூதர் அனைவரும் முன்னோர்களின் பாரம்பரியத்தைக் கைக்கொண்டு—கைக்கொண்டு, அடிக்கடி கைகழுவினாலொழியச் சாப்பிடமாட்டார்கள்.*

*கடையிலிருந்து வரும்போதும் ஸ்நானம்பண்ணாமல் சாப்பிடமாட்டார்கள். அப்படியே செம்புகளையும் கிண்ணங்களையும் செப்புக்குடங்களையும் மணைகளையும் கழுவுகிறதுமல்லாமல், வேறு அநேக ஆசாரங்களையும் கைக்கொண்டுவருவார்கள்.*

*அப்பொழுது, அந்தப் பரிசேயரும் வேதபாரகரும் அவரை நோக்கி: உம்முடைய சீஷர்கள் முன்னோர்களின் பாரம்பரியத்தை மீறி, ஏன் கை கழுவாமல் சாப்பிடுகிறார்கள் என்று கேட்டார்கள்.*

*அவர் அவர்களை நோக்கி: மாயக்காரராகிய உங்களைக் குறித்து தீர்க்கதரிசனம் உரைத்திருக்கிறபடி, மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதித்து, வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள் என்றும்,*

*எழுதியிருக்கிறபிரகாரம், மாயக்காரராகிய உங்களைக்குறித்து, ஏசாயா நன்றாய்த் தீர்க்கதரிசனம் சொல்லியிருக்கிறான்.*

நாம் ஜெபிப்போமாக.

105 அன்புள்ள தேவனே, இப்பொழுது உம்முடைய வார்த்தையைக் கனப்படுத்தும், அது என்ன நோக்கங்களுக்காக வைக்கப்பட்டிருக்கிறதோ அதை நிறைவேற்றுவதாக. அதைப் பேசுவதற்கு எங்களைக் கருவிகளாகவும், உம்மிடத்திலிருந்து கேட்க எங்களுடைய காதுகளையும், அதைப் பெற்றுக்கொள்ள எங்களுடைய இருதயங்களையும் உபயோகியும். நாங்கள் தேவனுடைய மகிமைக்காக இயேசுவின் நாமத்தில் வேண்டிக்கொள்கிறோம். ஆமென்.

106 இப்பொழுது, ஒரு சில நிமிடங்களுக்கு என்னுடைய பொருள் இது…நான்…

107 நாம் இந்தக் காலையில் தேசிய தொலைபேசி இணைப்பில் இருக்கிறோம். மேலும், என் அருமை நண்பர் ராய் பார்டர்ஸ், நேற்றிரவு நடந்த சம்பவத்தால் மிகவும் வருத்தமடைந்து, இதைக் கேட்டுக் கொண்டிருக்கிறார் என்றும் எனக்குத் தெரியும். நாம் வானொலியில்…இல்லை நேற்றிரவு இந்த இணைப்பைக் கேட்டதை நான் மறந்துவிட்டேன். ராய் அவர்களே, நீங்கள் எங்கிருந்தாலும்,

நீங்கள் சான் ஜோஸில் உள்ள சபையில் அல்லது சகோதரன் மக்யூஸ் அவர்களுடைய சபையில் இருந்தால், அல்லது நீங்கள் எங்கிருந்தாலும், அஞ்சாதீர்கள், என் சகோதரரே, எல்லாம் சரியாகிவிடும். அமைதியாக இருங்கள், நீங்கள் அப்படியே… அவர் அதை எனக்குத் தெரியப்படுத்துவார், ராய்; கவலைப்படாதே மகனே, தேவனில் விசுவாசமாயிரு.

108 இந்தக் காலையில் என்னுடைய பொருள்: *தேவனுடைய சித்தமாயில்லாமல் தேவனுக்கு ஒரு சேவை செய்ய முயற்சித்தல்.* இப்பொழுது, இது ஒரு விநோதமான பாடப் பொருளாகும், கர்த்தர் இதை இப்பொழுது நமக்கு வெளிப்படுத்துவார் என்று நான் நம்புகிறேன். நினைவிருக்கட்டும், “தேவனுடைய சித்தமில்லாமல் தேவனுக்கு ஒரு சேவை செய்ய முயற்சித்தல்.” இப்பொழுது, அது மிகவும் விசித்திரமாகத் தென்படுகிறது. ஆனால், இதில், ஒருகால் தேவனால் நமக்கு உதவி செய்ய முடியும்.

109 இந்தக் காலையில் நான் மற்றொரு காரியத்தைக் கூற விரும்புகிறேன், அதாவது என்னுடைய நண்பர் ஒருவர் எங்களுக்கு மத்தியில் இருப்பதற்காக நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம், ஒரு மிக அருமையான நண்பர், ஒரு வாலிப நபர். இப்பொழுது வானொலியிலோ அல்லது தொலைபேசி இணைப்பிலோ இருப்பவர்களில் அநேகர், இது யார் என்பதை அறிந்திருக்கலாம். இன்றைக்கு அவருடைய பிறந்த நாள், தொண்ணூற்று மூன்று வயதாகும், சகோதரன் பில் டாக் இங்கே எனக்கு முன்பாக அமர்ந்திருக்கிறார், தொண்ணூற்று மூன்று வயது.

110 அநேக ஆண்டுகளுக்கு முன்னர் மருத்துவர், “அவரால் ஜீவிக்க முடியாது” என்று கூறினார். அவர் இப்பொழுது இங்கே அமர்ந்திருப்பதை நான் கவனித்தேன். பிராணவாயு கூடாரத்தின் கீழ், அவருடைய அருமையான மனைவி என்னை அழைத்து, “சகோதரன் பிரான்ஹாம், உங்களுடைய பழைய நண்பர், பில், உயிரோடிருப்பதை நீங்கள் காண்பீர்கள் என்று நீங்கள் எதிர்பார்த்தால், நீங்கள் உடனடியாக வந்துவிடுவது நல்லது” என்று கூறினார்.

111 நான்…என்னுடைய டயர்களில் ஒன்று பக்கவாட்டில் வெட்டப்பட்டிருந்தது, என் காரின் சக்கரம் சரியாகப் பொருத்தப்படாமல் இருந்தது, மேலும் அவரிடம் செல்ல முயன்றபோது என் காரின் டயர் ஒன்றும் கிழிந்துவிட்டது. நான் இப்பொழுதுதான் ஒரு—ஒரு—ஒரு நிலையத்திலிருந்து, பெட்ரோல் நிலையத்திலிருந்து வந்துகொண்டிருந்தேன், ஓஹையோவில் நான் நிறுத்தியிருந்த கழிவறையிலிருந்து அவரிடம் வர முயற்சித்து, வெளியே நடந்து வந்தபோது, நான் ஒரு தரிசனத்தைக் கண்டேன். அங்கே சகோதரன் டௌ, தன்னுடைய கரத்தை நீட்டியவாறு சபையில் நின்றுகொண்டிருந்தார்; அது மாறியது, நீங்கள் வீதியில்

வந்து என்னுடைய கரத்தைக் குலுக்கினதை நான் காண்கிறேன். “அவரிடம் போய், ‘**கர்த்தர் உரைக்கிறதாவது**’ என்று சொல்” என்றது.

112 அப்பொழுது அவருக்குச் சுமார் தொண்ணூறு வயது. அவருக்கு இருதய ரத்தக்குழாய் தடுப்புடன் கூடிய மாரடைப்பு ஏற்பட்டு, முழு இருதய செயலிழப்பு ஏற்பட்டது. மிகவும் சாதுரியமான மருத்துவர். அந்த மனிதன்...அவர் விரும்பவில்லை...இல்லை, நான் அதைக் கூறமாட்டேன். அவர் விரும்புகிற எந்த வைத்தியரையும் அழைத்துக் கொள்ளக்கூடிய ஒரு மனிதனாயிருக்கிறார். அவர் ஒரு அருமையான யூத வைத்தியரை உடையவராயிருந்தார், அவர் என்னை வரவேற்பறையில் சந்தித்து, “அவர் உயிரோடிருக்க வாய்ப்பேயில்லை” என்றார்.

113 நான் உள்ளே சென்று, பிராணவாயு கூடாரத்தின் கீழ் என் கையை நழுவி, “பில், நான் பேசுவதை நீங்கள் கேட்கிறீர்களா?” என்று கேட்டேன். அவர் தலையை அசைத்தார். நான், “**கர்த்தர் உரைக்கிறதாவது**, ‘நீர் இப்பொழுது மரிக்கப் போவதில்லை’” என்றேன்.

114 அதிலிருந்து ஒரு வாரம் கழித்து, நான் என்னுடைய செய்தியைப் பிரசங்கிக்க பிரசங்க பீடத்திற்கு வந்தபோது, இங்கே சகோதரன் டௌ கட்டிடத்தினூடாக நடந்து வந்தார். மேலும் நான் ஃபர்ஸ் உணவகத்திற்குச் சென்றபோது, எதிர்...அதாவது லூயிஸ்வில்லில் எதிரே உள்ள ப்ளூ போர் உணவகத்திற்குச் சென்றபோது, அவர் காரிலிருந்து இறங்கி, தெருவில் நடந்து வந்து, தன் கையை நீட்டிக்கொண்டிருந்தார்; அது கர்த்தருடைய வார்த்தையின்படியே துல்லியமாக இருந்தது. அது மூன்று அல்லது நான்கு ஆண்டுகளுக்கு முன்பு; இங்கே அவர் இங்கே ஷ்ரீவ்போர்ட்டில் வந்து அமர்ந்திருக்கிறார் (தேசத்தைக் கடந்து செல்கிறார், இப்பொழுது விமானத்தில் அல்ல, காரில்), ஹு-ஹு, இன்று காலை இங்கே அமர்ந்திருக்கிறார். “பிறந்த நாள் வாழ்த்துக்கள், சகோதரன் டௌ” அது தேசம் முழுவதிலுமிருந்து, எல்லாவிடங்களிலிருந்தும் வருகிறது. “தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக!”

115 திரித்துவக்காரனாயிருந்த பிறகு, நான் அவருக்கு ஞானஸ்நானம் கொடுத்தேன், அவர்...என்னுடைய முதல் கூட்டங்களில் ஒன்றில், நான் அவருக்கு ஞானஸ்நானம் கொடுத்தேன், சகோதரன் பாங்க்ஸ் உட் அவர் தன்னுடைய ஆடைகளை அணிய அனுமதிக்க வேண்டியதாயிருந்தபோது (நீங்கள் பார்ப்பது போல, அவர் ஒரு நல்ல உருவம் கொண்ட மனிதர்), அவர் குளத்திற்குள் சென்றபோது, அவருக்கு ஏறக்குறைய எண்பத்தைந்து அல்லது தொண்ணூறு வயதிருக்கும்போது, கர்த்தராகிய இயேசுவின் நாமத்தில் நான் ஞானஸ்நானம் கொடுத்தேன். அவர் ஏதோ ஒரு பாதுகாப்பைக் கண்டறியும் வரையில் அவரால் ஒருபோதும் சரியாக உணர முடியவில்லை என்று அவர் கூறினார். அதன்பின்னர் அவர் ஒரு பிறந்த நாளைப் பெற்றுக் கொண்டார், அங்கே அவர் ஒருபோதும்

முதிர்வடையவே மாட்டார். அது உண்மை, அந்த மகத்தான தேசம். அவர் கர்த்தருடைய வருகையைக் காண ஜீவிக்க வேண்டும் என்றும் கூட எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்; அது செய்யப்பட முடியும். ஆனால் அவர் நித்திரை அடைந்தால், அவர்...அந்த நேரத்தில் நாம் விழித்திருக்கும்போது, அவர் முதலில் வருவார். சரி. எனவே, சகோதரன் டௌ, இப்பொழுது அதைத் தவறவிட வழியேக் கிடையாது. நீங்கள் சரியாக அந்த வரிசையில் இருக்கிறீர்கள். என் சகோதரனே, அங்கேயே தரித்திருங்கள், தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. இப்படிப்பட்ட ஒரு நல்ல மனிதனுக்காகவும், இத்தனை ஆண்டு காலமாக அவருக்கு அளித்ததற்காகவும் நான் கர்த்தருக்கு நன்றி கூறுகிறேன்.

116 நாளாகமப் புத்தகத்தில், "தேவனுடைய சித்தமில்லாமல் தேவனுக்கு ஒரு சேவை செய்ய முயற்சித்தல்" என்று கூறப்பட்டுள்ளது. தேவன் இராஜாதிபத்தியம் படைத்தவர், முதலில் நாம் அதைப் புரிந்து கொள்ள வேண்டும். நாம் ஏன் ஒரு எழுப்புதலைக் கொண்டிருக்க முடியாது என்று ஜனங்கள் இன்றைக்கு யோசித்துக்கொண்டிருக்கின்றனர். நீங்கள் தேவனுடைய இராஜாதிபத்தியத்தை விசுவாசிக்கிறீர்களா? பாருங்கள், வேதம் இந்த விதமாகப் பேசுகிறது.

117 நாம் முயற்சிக்கிறோம்...நான் என்னுடைய அருமையான சகோதரர்கள் குழுவிடம், பாப்டிஸ்டு சகோதரர்களோடு அண்மையில் விவாதித்துக் கொண்டிருந்தபோது, அவர்கள், "சகோதரன் பிரான்ஹாம், நாங்கள் வார்த்தையை எடுத்துக் கொள்ளும்போது மாத்திரமே எங்களுக்கு ஒரு எழுப்புதல் இருக்க முடியும், வார்த்தைக்கு வார்த்தை, பக்கத்திற்கு பக்கம், எழுத்துக்கு எழுத்து" என்று கூறினர்.

118 நான், "நானும் கூடப் பக்கத்திற்கு பக்கம் விசுவாசிக்கிறேன்" என்றேன். அவர் கூறினார்...நான், "அவர்கள் நீண்ட காலமாக அதைச் செய்ய முயற்சித்துக் கொண்டிருக்கிறார்கள்" என்றேன்.

119 அவர், "ஆனால் கிரேக்க மொழி என்ன கூறுகிறதோ, அந்த வார்த்தையின் கிரேக்க வியாக்கியானத்தை நாம் கண்டறிய வேண்டும்" என்றார்.

120 நான், "நான் அதிகமாக வாசித்திருக்கவில்லை, ஆனால் சபையின் வரலாற்றையும், *நிசாயா ஆலோசனை சங்கத்தின்* வரலாற்றையும் படித்திருக்கிறேன், *நிசாயா ஆலோசனை சங்கத்திற்கு முந்தின காலம், நிசாயா பிதாக்கள்* போன்றவைகளில் அவர்கள் *அங்கே* கிரேக்க மொழியைக் குறித்து தர்க்கித்துக் கொண்டிருந்தனர். அது இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு. ஒருவன், 'இதன் பொருள் *இதைப்* பொருட்படுத்துகிறது' என்றும், ஒருவன், 'இதன் பொருள் *அதைக்* குறிக்கிறது. இந்தக் கிரேக்க வார்த்தையின் அர்த்தம் *இதுவேயாகும்*'" என்கிறான்.

121 நம்முடைய மொழியைப் போன்றே; *பாருங்கள்* என்ற வார்த்தை. *பாருங்கள்* என்ற வார்த்தையை உபயோகித்தால், நீங்கள் “ஒரு நீர்நிலை,” “நான் புரிந்துகொள்கிறேன்,” அல்லது அநேக காரியங்களை அர்த்தப்படுத்தலாம். *சலிப்படையலாம்,* “ஒரு துளையை ஏற்படுத்திருக்கலாம், நடந்து செல்லலாம்,” அல்லது— அல்லது “நீங்கள் எனக்குச் சலிப்பை ஏற்படுத்தினீர்கள்,” அல்லது “நீங்கள் என் தங்குமிடக் கட்டணத்தைச் செலுத்தினீர்கள்,” அல்லது அது எந்தவொரு...அநேக காரியங்களைப் பொருட்படுத்தலாம். அந்தச் சிறிய உயிரெழுத்துக்கள் போன்றவை, முழு அர்த்தத்தையும் மாற்றிவிடுகின்றன. எனவே நீங்கள் அதைப் போன்று அதை ஒருபோதும் செய்யமாட்டீர்கள். தேவன் அதை அந்த விதமாக எழுதினார், ஏனென்றால்...

122 எல்லா வார்த்தையும் ஏவப்பட்டிருக்கிறது. அவர், “பிதாவே, இவைகளை ஞானிகளுக்கும் கல்விமான்களுக்கும் மறைத்து,” (ஆமென்) “பாலகருக்கு வெளிப்படுத்தினபடியால் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன்.” என்று கூறினார். நான் நேற்று மாலை கூறினதுபோல, அது அவரைக் குறித்த ஒரு வெளிப்பாடாய் உள்ளது, “அதைப் பாலகருக்கு வெளிப்படுத்துவேன்.”

123 அதற்கு நான், “ஐயா, அது கிரியை செய்யாது” என்றேன். நான், “தேவன், இராஜாதிபத்திய தேவன் அதை அனுப்பும் வரையில் ஒரு எழுப்புதல் ஒருபோதும் உண்டாகாது; அதன்பிறகு, தன் பெயரைக்கூட கையெழுத்திடத் தெரியாத, கிரேக்கம் இருக்கட்டும், நல்ல ஆங்கிலம் கூடத் தெரியாத ஒரு சிறு முட்டாளை அவர் அழைத்து, அதைக் கொண்டே அதைச் செய்ய வைக்கக்கூடும்” என்றேன்.

124 பெந்தெகொஸ்தே நாளில் பேதுரு பிரசங்கித்தபோது, அவர் அதைத்தான் செய்தார் என்பதை நீங்கள் அறிவீர்கள், அவனால் தன் பெயரைக் கூடக் கையெழுத்திட முடியவில்லை, அறியாமையும் கல்வியறிவற்றவனாக இருந்தான். ஆனால் தேவனோ நம்முடைய அறிவுப்பூர்வமான சிந்தனைக்கு அப்படிப்பட்ட வித்தியாசமான விதத்தில் காரியங்களைச் செய்கிறார். அதுவே அதைத் தேவனாக்குகிறது. அவர் ஒரு கூட்ட வேத பண்டிதர்களையும், கௌரவம் வாய்ந்தவர்களையும், மற்றும் பலரும், உடையவராயிருந்தால், அவர்கள், “அந்தப் புத்திசாலி காய்பா, நீங்கள் பாருங்கள், அவன் அதைச் சரியாகக் கூறினான்” என்று கூறுவார்கள். ஆனால் தேவன் அங்குச் சென்று தங்களுடைய பெயரைக் கூடக் கையொப்பமிட முடியாத மீனவர்களைக் கொண்டு வந்தார், அதைத்தான் அவர் எடுத்துக் கொண்டார். அது தேவன், அவர் ஒன்றுமற்ற ஒன்றை எடுத்து, அதிலிருந்து தம்முடைய சொந்த கனத்திற்காக ஏதோ ஒரு காரியத்தை உண்டாக்குகிறார். அவர் குழப்பமுற்றிருந்த ஒன்றை எடுத்து ஒரு ஏதேனை உண்டாக்கினார். ஹூ-ஹூ, அது தேவன்.

125 இப்பொழுது, எவரேனும் ஒரு எழுப்புதலுக்கான வழிமுறைகள் இருக்கின்றன என்றால், அவர் மாண்புமிகு சகோதரர் பில்லி கிரஹாம் ஆவார். ஆனால் இயக்கவியல் சரிதான், ஆனால் இயக்கவியல் அதை அசைக்காது, அதை இயக்க இயங்கு சக்தி தேவைப்படுகிறது. உங்களால் ஒரு மோட்டார் வாகனத்தை உருவாக்கி, அதில் அருமையான இருக்கைகளை வைத்து, அருமையான உந்துத்துண்டுகளை உருவாக்கி, அது என்ன செய்ய முடியும் என்பதை விஞ்ஞானத்தின் மூலம் நிரூபிக்க முடியும்; ஆனால் இயங்கும் சக்தி அங்கிருந்தாலொழிய, அவள் ஒரு மரித்துப்போன பொருளாகவே இருக்கிறாள்.

126 எனவே, வேல்ஷ் எழுப்புதலில், நம்முடைய பெந்தேகோஸ்தே சபைக்கு முன்னர் நடந்த நம்முடைய எழுப்புதல்களில் ஒன்று, எதனால் இந்த எழுப்புதல் துவங்கினது என்பதை யாரும் அறியாதிருந்தனர், ஒரு கூட்ட ஜனங்கள் மாத்திரமே இருந்தனர்.

127 இப்பொழுது, நாம் எல்லாவற்றையும்...நம்முடைய நண்பர் பில்லி கிரஹாம், பிரஸ்பிடேரியன்கள், லூத்தரன்கள், பெந்தேகோஸ்துக்கள், மற்றும் ஒவ்வொரு காரியத்தையும் ஒன்று சேர்த்து, நகரத்திற்குள்ளாகச் சென்று, அங்கே ஆயிரக் கணக்கானோர் ஒரு பெரிய கூட்டம் கூடி, (இரண்டு வாரங்களில்) முப்பதாயிரம் பேர் வந்து தங்களுடைய இருதயங்களை கிறிஸ்துவுக்கு கொடுப்பார்கள்; நீங்கள் இன்னும் இரண்டு வாரங்கள் கழித்து பின்னோக்கிப் பார்த்தால், நீங்கள் ஒன்றையும் பெற்றிருக்க மாட்டீர்கள். பாருங்கள், அதுதான் இயக்கவியல். ஆனால் தேவன் தம்முடைய இராஜாதிபத்திய கிருபையினால் ஏதோ ஒரு சிறு முட்டாளிடம், ஒரு சிறு பையனிடம் பேசட்டும். அவருடைய ஆவி நகரத்திற்குள் விழட்டும், புருஷர் வேலைக்குச் செல்ல முடியாது, ஸ்திரீகளால் பாத்திரங்களைக் கழுவ முடியாது, வேலைக்காரி படுக்கையை அமைக்க முடியாது, தங்கள் கரங்களை ஆகாயத்தை நோக்கி உயர்த்தியவாறு கூச்சலிட்டு அழுவர். அதுதான் எழுப்புதல், அது தேவனுடைய சித்தத்தில் உள்ளது.

128 வேல்ஸ் எழுப்புதலின் போது, சபையைச் சேர்ந்த சில பிரபுக்கள், அந்த எழுப்புதலின் செயல்முறைகள் எல்லாம் என்னவென்பதைப் புரிந்துகொள்வதற்காக வேல்ஸுக்குச் சென்றதாகக் கூறப்பட்டது. அவர்கள் தங்களுடைய உயரமான தொப்பிகளோடும், தங்களுடைய வட்டமான கழுத்துப் பட்டையோடும் கப்பலை விட்டு இறங்கினபோது, ஒரு சிறு காவலன், தன் தடியை *அப்படிச்* சுழற்றியபடி ஊதலை ஊதிக் கொண்டு தெருவில் நடந்து வருவதைக் கண்டார்கள், அவர்கள், "என்னுடைய நல்ல மனிதனே, வேல்ஷ் எழுப்புதல் எங்கே என்று நீர் எனக்குக் கூற முடியுமா?" என்று கேட்டனர்.

129 அதற்கு அவர், "ஆம், என் சகோதரர்களே, நீங்கள் அதன் நடுவில் நின்று கொண்டிருக்கிறீர்கள்!" என்றார். ஹு-ஹூ, ஹு-

ஹூ, ஹு-ஹூ. அவர், "*நானே* வேல்ஷ் எழுப்புதல் என்று நீங்கள் புரிந்து கொள்ளுங்கள்" என்றார், "ஏனென்றால் வேல்ஷ் எழுப்புதல் எனக்குள் இருக்கிறது" என்றார்.

130 அதுதான் ராஜாதிபத்தியம்! அதைத்தான் தேவன் செய்கிறார், ஒரு எழுப்புதலை அனுப்ப அவருக்கு மாத்திரமே உரிமையுண்டு. இயக்கவியலை ஒன்றிணைக்கவில்லை, அது இயங்கும் சக்தியை—இயங்கும் சக்தியை அனுப்பும்படியான தேவனுக்கான ஜெபமாயுள்ளது.

131 அவர் தம்முடைய வார்த்தையை முன்குறிக்கப்பட்டவர்களிடத்தில் மட்டுமே வெளிப்படுத்துகிறார். இப்பொழுது, நான் *முன்குறித்தல்* என்ற வார்த்தையை உபயோகிக்கும்போது…இப்பொழுது, விசேஷமாக நாம் ஆர்மீனியர்களுக்கும், கால்வீனிஸ்டுகளுக்கும் இடையே இரண்டும் கலந்த கூட்டமாக இருக்கும்போது, அது பொது இடத்தில் உபயோகிப்பதற்கு ஒரு மோசமான வார்த்தையாய் உள்ளது. மேலும் ஒரு…எனக்கு அவை யாவும் தெரியும் என்று நீங்கள் நினைக்க வேண்டாம் என்று நான் கேட்டுக் கொண்டேன், ஆனால் அவை இரண்டுமே வேதவாக்கியத்தின்படி தவறாயிருக்கின்றன. தேவன் எனக்காக என்ன செய்தார் என்பது கிருபையாயுள்ளது, கிரியைகள் என்பது நான் அவருக்குச் செய்வது. பார்த்தீர்களா? அப்படியானால் நீங்கள் அதைப் பெற்றுக் கொண்டீர்கள். நீங்கள் அந்தக் கிளைகளில் ஏதேனும் ஒன்றில் ஏறினால், நிச்சயமாகக் கிளையின் நுனியில் மாட்டிக்கொண்டு திரும்பி வர முடியாமல் போய்விடும். எபேசியரின் புத்தகம் அதை ஒன்றாக இணைத்துள்ளது என்று நான் நினைக்கிறேன்.

132 இப்பொழுது, ஆனால் நான் *முன்குறிக்கப்பட்ட* என்ற வார்த்தையைப் பயன்படுத்தும்போது, நான் அப்படித்தான் என்று நினைக்காதீர்கள்…அதைச் செய்வதற்கு எனக்குத் தெரிந்த ஒரே வார்த்தை அதுதான்…அது தேவனுடைய முன்னறிவாயிருக்கிறது, பாருங்கள், அவர் அறிந்திருந்தார். அவர்—அவர் கூற முடியாது… எல்லோரும் இரட்சிக்கப்படுவதற்காக அவர்—அவர் மரித்தார், அவர் இரட்சித்தார், ஆனால் தம்முடைய முன்னறிவினால் யார் இரட்சிக்கப்படுவார்கள், யார் இரட்சிக்கப்படமாட்டார்கள் என்பதை அவர் அறிந்திருந்தார். பார்த்தீர்களா? அதைத்தான் அவர் அறிந்திருக்கிறார், நான் அதை அறியேன், நீங்களும் அதை அறியமாட்டீர்கள், எனவே நாம் நம்முடைய சொந்த இரட்சிப்பிற்காகப் பயத்தோடும் நடுக்கத்தோடும் கிரியை செய்கிறோம்.

133 இப்பொழுது, ஆனால் தேவன் தம்முடைய வார்த்தையை வைத்திருக்கிறார், அது எல்லா காலங்களிலும் உள்ளது. தம்முடைய முன்னறிவின் காரணமாக, அவர் ஆதிமுதல் செய்துவந்த சில காரியங்களைச் சபையிலும் மக்களிடத்திலும் நிலைநிறுத்தினார்.

மேலும் *அந்தத்* காலத்திற்குப் பிரசங்கிக்கப்படும் நற்செய்தியானது, அந்தக் குறிப்பிட்ட மக்களுக்கு மட்டுமே வெளிப்படுத்தப்படுகிறது, மற்றவர்கள் அதைப் புரிந்து கொள்கிறதில்லை. புரிகிறதா? “பிதாவே, இவைகளை ஞானிகளுக்கும் கல்விமான்களுக்கும் மறைத்து, பாலகருக்கு வெளிப்படுத்தினபடியால் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன்.” பாருங்கள், அது முன்குறித்தல். “நான் *உம்மைத்* தெரிந்து கொள்வேன், *உம்மைத்* தெரிந்து கொள்ள மாட்டேன்” என்று நீங்கள் சொல்வதன் மூலம் அவர் அதைச் செய்யவில்லை. அவருடைய முன்னறிவினால் நீங்கள் என்ன செய்வீர்கள் என்பதை அவர் அறிந்திருந்தார்.

134 அவர் எல்லையற்றவராயிருப்பதனால்…அவர் முடிவற்றவர் என்று நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? அவர் அப்படியில்லையென்றால், அவர் தேவனாக இருக்க முடியாது. அப்போது, நீங்கள் நினைக்கிறீர்கள், எல்லையற்றவராக இருப்பதால்: பூமியில் என்றென்றும் இருக்கப்போகும் ஒவ்வொரு ஈயையும், அந்த வண்டுகள் எத்தனை முறை தங்களுடைய கண்களைச் சிமிட்டும், ஒவ்வொரு பூச்சியிலும் எவ்வளவு கொழுப்பு இருந்தது, ஒவ்வொரு புல்லின் மீதும் அது எப்போதும் அமர்ந்திருக்கும் என்பதை அவர் அறிந்திருந்தார்; அது முடிவற்றதாயுள்ளது. நாம் முடிவுற்றவர்கள், நாம் இருளில் இடறுகிறோம். தேவன் நம்மை ஆடுகளுக்கு ஒப்பிட்டார், எனவே நமக்கு ஒரு தலைவர் இருக்க வேண்டும். அந்தத் தலைவர் மனிதனல்ல, அந்தத் தலைவர் பரிசுத்த ஆவியாய், நம் மத்தியில் கிறிஸ்துவின் ஆவியாய் இருக்கிறார். “இன்னும் கொஞ்சக் காலத்திலே உலகம் என்னைக் காணாது.” அவருடைய சரீரம் தேவனுடைய சிங்காசனத்திற்கு எழுப்பப்பட்டது, அங்கே ஆவியானவர் சிங்காசனத்தில் *வீற்றிருந்தார்;* இப்பொழுது கிறிஸ்து சிங்காசனத்தில் வீற்றிருக்கிறார், இயேசு. “இன்னும் கொஞ்சக்காலத்திலே உலகம் என்னைக் காணாது, நீங்கள் என்னைக் காண்பீர்கள், ஏனென்றால் நான் உலகத்தின் முடிவுபரியந்தம் உங்களோடும், உங்களுக்குள்ளும் இருப்பேன்” என்றார். கிறிஸ்துவின் தேவனுடைய சிங்காசனம் உங்களுடைய இருதயத்திற்குள் நிறுவப்பட்டுள்ளது; அவர் தேவனுடைய சிங்காசனத்தில் வீற்றிருக்கிறார், ஆனால் ஆயிர வருட அரசாட்சியில் அவர் தம்முடைய சொந்த சிங்காசனத்தில் வீற்றிருக்கிறார்; இந்த மனிதனை, அவருடைய குமாரனை, தாவீதின் குமாரனை, அவருடைய சிங்காசனத்தில் வீற்றிருக்கும்படி எழுப்புவதாக அவர் ஆணையிட்டார்.

135 இப்பொழுது, இந்தக் காரியங்களை அவர் நியமித்திருக்கிறவர்களுக்கு தம்முடைய முன்னறிவினால் இந்தக் காரியங்களை வெளிப்படுத்துகிறார், இல்லையென்றால் அவர்கள் அதைக் புரிந்துகொள்ளமாட்டார்கள். அங்கேயே நின்று, அதை நேராக நோக்கிப் பார்த்தும், அதைக் காண முடியவில்லை.

136 புதரில் இருக்கும் ஒரு பசுவின் அந்தப் புகைப்படத்தை எத்தனை பேர் பார்த்திருக்கிறோம், அதைப் பார்த்துக் கொண்டேயிருக்க வேண்டுமல்லவா? நீங்கள் அதை எப்போதாவது பார்த்திருக்கிறீர்களா? அல்லது, ஒரு புதரில் அல்லது வானத்திலா அல்லது மேகங்களிலோ கிறிஸ்துவின் புகைப்படத்தைப் பார்த்தீர்களா? பாருங்கள், நீங்கள் அதை ஒரு குறிப்பிட்ட கோணத்தில் மட்டுமே பார்க்கும் வகையில் அந்த ஓவியர் அதை அவ்வளவு செம்மையாக அமைத்துள்ளார். பாருங்கள், அப்படியானால், நீங்கள் அதை ஒருமுறை கண்டால், அதைத் தவிர வேறெதையும் உங்களால் காண முடியாது. ஒவ்வொரு முறையும் நீங்கள் நோக்கிப் பார்க்கும்போது, அது அங்குள்ளது. எத்தனை பேர் அந்தப் புகைப்படங்களைப் பார்த்திருக்கிறீர்கள்? பாருங்கள், நிச்சயமாகவே நீங்கள் பார்த்திருப்பீர்கள்.

137 பாருங்கள், அந்தவிதமாகத்தான் கிறிஸ்து, அவரே, சுவிசேஷம், செய்தியும் உள்ளது. இந்த நேரத்துக்கான செய்தியை நீங்கள் ஒருமுறை காணும்போது, அதைத் தவிர வேறு எதையும் உங்களால் காண முடியாது. அவ்வளவுதான். நீங்கள் செய்தியை ஒருமுறை காணும்போது, பாருங்கள், பாருங்கள், மற்ற எல்லாமே போய்விட்டது, அதில் எஞ்சியிருப்பது ஒரு நிரப்பியாகவே உள்ளது!

138 அது நோவாவின் காலத்தில் இருந்தது. நோவாவும் அவனுடைய குழுவினரும்...எப்படி பாருங்கள்...அவர்கள் செய்தியைக் கண்டபோது, வேறெதுவும் பொருட்படுத்தவில்லை. மோசேயின் குழுவினர் அதைக் கண்டபோது, வேறு எதுவும் முக்கியமாகத் தெரியவில்லை. யோவானின் குழு அதைக் கண்டபோது, வேறெந்த காரியமும் ஒரு பொருட்டல்ல. இயேசுவின் குழுவினர் அதைக் கண்டபோது, வேறெதுவும் ஒரு பொருட்டல்ல. அப்போஸ்தலருடைய குழு அதைக் கண்டபோது, வேறெந்த காரியமும் ஒரு பொருட்டல்ல. லூத்தரின் குழுவினர் அதைக் கண்டபோது, வெஸ்லியின் குழுவினர் அதைக் கண்டபோது, பெந்தேகோஸ்தே குழுவினர் அதைக் கண்டபோது, வேறு எதுவும் ஒரு பொருட்டாக இருக்கவில்லை, அவர்கள் எல்லாவற்றிலிருந்தும் விலகிச் சென்றனர். ஏன்? தம்முடைய முன்னறிவினால் இந்தக் காரியங்கள் சம்பவிக்கும்படி அவர் முன்குறித்தார்.

139 அவர் தம்முடைய முன்னறிவினால் தம்முடைய சொந்த நபரைத் தெரிந்து கொள்கிறார். அவர் இங்கே ரோமர் 8-ல் கூறினது போல, அதாவது ஏசா...தேவனுடைய தெரிந்துகொள்ளுதல் நிச்சயமாய் நிற்கும்படியாக. பரிசுத்த பெற்றோருக்கு இரட்டையர்களாகப் பிறந்த ஏசாவும் யாக்கோபும், அவருடைய தெரிந்துகொள்ளுதல் உறுதியாகவும் உண்மையாகவும் நிலைத்திருக்கும்படியாகவும், அவர், “நான் ஏசாவை வெறுக்கிறேன், யாக்கோபை சிநேகிக்கிறேன்” என்று கூறினார். பார்த்தீர்களா? மனிதனுக்குள் என்ன உள்ளது என்பதை அவர் அறிந்திருக்கிறார், ஆதி முதல் அது

என்னவாயிருந்தது என்பதை அவர் அறிந்திருந்தார். ஆகையால் அவரால் ஒவ்வொரு காரியத்தையும் சரியாக நேரத்திற்கு ஏற்பச் செய்ய முடியும். நாம் எல்லோரும் பதட்டமாகி, திகைத்துப் போகிறோம்; நீங்கள் அவரை ஒருபோதும் திகைத்துப் போனதாகக் கண்டதில்லை. அவர்கள்...புரிகிறதா? எல்லாமே சரியாக இயங்கிக் கொண்டிருக்கிறது, சரியாக, கடிகாரம் ஓடிக்கொண்டிருக்கிறது.

140 இவைகள் சம்பவிக்க வேண்டியவைகள், குட்டை முடியையுடைய இந்தப் பெண்கள் யாவரும், இந்தப் புருஷர்கள் தங்களுடைய...தங்களுடைய மனைவிகளைப் போன்ற தலைமுடியை உடையவர்களாக இருக்கிறார்கள். அவர்கள், முற்றிலுமாக, முடிகளைச் சுருட்டி கொள்ளச் செய்யும் கருவியை வைத்து, இங்கே முன்னால் சுருட்டிக் கொண்டிருப்பதை நான் காண்கிறேன். என்னே ஒரு தாறுமாறாட்டம்! அதுவே சாத்தானின் ஏதனின் விளைவுகளாகும். அவளைப் போலவே செய்கிறான்: அவள் தன்னுடைய கணவனைப் போலத் தன்னுடைய தலைமுடியை கத்தரிக்க முயற்சிக்கிறாள்; அவளுடைய கணவன் தன்னுடைய தலைமுடியை தன்னுடைய மனைவியைப் போலவே வளரவிடுகிறான். அவள் அவனுடைய ஆடைகளை அணிந்திருக்கிறாள், அவனும் அவளுடைய உள்ளாடைகளை அணிந்திருக்கிறான். பாருங்கள், அங்குதான் உங்கள் காரியமே உள்ளது. அவள் ஆண்மைத்தன்மை கொண்டவளாய் இருக்கிறாள், அவன் பெண்மைத்தன்மை கொண்டவனாய் இருக்கிறான். பாருங்கள், இது சாத்தானின் ஏதேனாயுள்ளது, ஆதியில் தேவன் உண்டாக்கினதற்கு முரணாக உள்ளது. அதுதான் சத்தியம்.

141 நான் துவங்கவில்லையென்றால், நாம் இதற்குள் ஒருபோதும் செல்லவேமாட்டோம். ஆனால் இந்தக் காரியங்கள், அவர் அதைச் செய்வதற்கான வழி, யார் அதைச் செய்வார், அது அவருடைய சொந்த தெரிந்துகொள்ளப்பட்ட வழி, அவர் தெரிந்துகொள்கிறார். அந்தவிதமாகவே அது செய்யப்பட வேண்டும் என்று அவர் விரும்புகிறார்.

142 டூசானில் உள்ள நம்முடைய போதகர் சகோதரன் பியரி கிரீனை நான் கேட்டபோது, அன்றொரு இரவு தேவன் காரியங்களை ஏதோ ஒரு வழியில் உண்டாக்கினார் என்பதைக் குறித்து பிரசங்கித்தார் (அவருடைய பாடப் பொருள் என்னவென்பதை நான் மறந்துவிட்டேன்.), ஆனால் அவர், "அந்தவிதமாகத்தான் தேவன் அதை விரும்புகிறார், அந்தவிதமாகத்தான் தேவன் அதைச் செய்கிறார்" என்றார். சரி, அது உண்மை.

143 இப்பொழுது, அவர் தவறாயிருக்கிறார் என்று நம்மில் யார் அவரிடத்தில் கூறப்போகிறது? தேவனுக்கு முன்பாக நின்று, "கர்த்தாவே, நீர் செய்வது தவறு, நான் விரும்பும் விதத்திலும், வேத பண்டிதர் *இன்னார்-மற்றும்-இன்னார்* கூறினவிதமாகவே அது செய்யப்பட வேண்டும்" என்று சொல்ல யாருக்குத் துணிவு

வரும்? அப்படிப்பட்ட ஒரு காரியத்தைக் கூற, யாருடைய மனநிலைதான் அவ்வளவு மோசமாகப் போயிருக்கும்? இல்லை, நீங்கள் வெளியே வந்து அதைக் கூறமாட்டீர்கள், ஆனால் நீங்கள் அதை நினைக்கிறீர்களே!

144 "கள்ளக் கிறிஸ்துக்கள் எழும்புவார்கள்" என்ற என்னுடைய *அந்திக்கிறிஸ்துவின்* செய்தியைப் போன்றே உள்ளது. இப்பொழுது, அவர் கள்ள *இயேசுக்கள்* என்று கூறவில்லை. பாருங்கள், கர்த்தருடைய வார்த்தையில், "இயேசு" என்று அழைக்கப்படுவதாக யாரும் இருந்திருக்க மாட்டார்கள். ஆனால் கள்ளக் *கிறிஸ்து* என்றால் "அபிஷேகம் பண்ணப்பட்டவர்கள்" என்று பொருள்.

145 ஓ, அவர்கள் ஒவ்வொருவரும், "தேவனுக்கு மகிமை, அவரால் *இதைச்* செய்ய முடியும், *அதைச்* செய்ய முடியும்!" என்ற அபிஷேகத்தைப் பெற்றுள்ளதாக நினைக்கிறார்கள். ஆனால், அவரை வார்த்தையின் பேரிலான சோதனையில் ஈடுபடுத்திப் பாருங்கள், அவர் எதில் வருகிறார் என்று, அதாவது இந்த வேளைக்கான செய்தியில், பாருங்கள்.

146 அவர்கள் இயேசுவின் காலத்தில் அபிஷேகத்தை உடையவர்களாயிருந்தனர், ஆனால் அவர்மேல் இல்லை.

147 அவர்களுக்குச் நேரத்தில் அபிஷேகம் இருந்தது…மோசேயின் காலத்தில் தாத்தானும் கூட அபிஷேகத்தைப் பெற்றிருந்தான். அவன், "இப்பொழுது, நீர் மாத்திரமே எங்கள் மத்தியில் பரிசுத்தமானவன் என்று நினைக்க வேண்டாம், தேவனுக்கு ஏராளமான பரிசுத்தவான்கள் உண்டு. நாங்கள் இங்கே ஒரு ஸ்தாபனத்தை துவங்குவோம், ஒரு குழு மனிதர்கள்" என்றான்.

148 தேவன் மோசேயிடம், "உன்னை அவனிடத்திலிருந்து பிரித்துக்கொள்" என்றார், அவர் பூமியைத் திறந்து அவர்களை விழுங்கினார். அவர் தம்முடைய மூல வார்த்தையை மோசேக்கு, அவருடைய தீர்க்கதரிசிக்கு அளித்திருந்தார்; அவர் அதைச் செய்த ஒரே வழி அதுதான், மேலும் அவர் அதைச் செய்யப் போகும் ஒரே வழியும் அதுதான். அவர் தம்முடைய திட்டத்தை மாற்றுகிறதில்லை, பாருங்கள்.

149 எனவே நம்முடைய கருத்துக்கள் தவறாக இருக்கின்றன, அவருடைய கருத்துக்கள் எப்பொழுதுமே சரியானதாகவே இருக்கின்றன. அவர் "தவறு" என்று அவரிடத்தில் கூற முயற்சிக்காதீர்கள். யார் மிகவும் தகுதியானவர் என்று நாம் நினைத்தாலும், யார் மிகவும் தகுதியானவர் என்று சொல்வதற்கு நமக்கு உரிமை இல்லை. இப்பொழுது, அங்குதான் நீங்கள் ஸ்தாபனத்தை நுழைகிறீர்கள்.

150 ஆவியினால் நிரப்பப்பட்ட ஒரு சகோதரன் ஒரு பட்டணத்திற்குள் சென்று, ஒரு அமைப்பை-…ஒரு—ஒரு நல்ல மக்கள் குழுவை உருவாக்குவான். அந்த மாநாட்டில் அவர்கள் சந்திப்பார்கள், எல்லா

பரிசுத்த சகோதரர்களும் ஒன்று சேர்ந்து, உங்களுக்குத் தெரியும், "உங்களுக்குத் தெரியுமா? குட்டி *ஜோன்ஸ்* இங்கே இருக்கிறார் என்று நான் நம்புகிறேன்" என்று கூறுவார்கள் (அவன் அவர்களுக்குள் ஒரு சிறு நபர்) "அவருக்கு அந்த அருமையான பெரிய கூடாரம் இருக்க வேண்டும் என்று நான் நினைக்கிறேன். அது சரியென்று நீங்கள் நினைக்கவில்லையா?" என்று கேட்கிறார்கள். இல்லை, என்னே. அங்கே அவர் செல்கிறார். அதன்பின்னர் சபையோர் சிதறடிக்கப்பட்டனர். பார்த்தீர்களா? இந்த வேறுபிரிதல்! தேவன் வேறுபிரிதலைச் செய்கிறார். அவர் ஒருவரே அதைச் செய்கிறார். ஆனால் அவர்கள் எல்லோரும், ஒவ்வொருவரும், *இந்தச்* சிறு நபரைக் கொண்டு சென்று, அவனை *இங்கே, இந்த* ஒருவனை *இங்கே* வைக்க விரும்புகிறார்கள். அதுவே மனிதனுடைய கருத்தாகும்.

151 மனிதன் திறவுகோல்களை உடையவனாயிருக்கிறான், ஆனால் தேவன் திறவுகோல்களை உண்மையாகவே வைத்திருக்கிறார். அவர்கள் சீஷர்களுக்கு, பரிசுத்த சபைக்கு, திறவுகோல்களை அளித்தனர்; யூதாஸ் மீறுதலினால் விழுந்துபோனபோது, அவர்கள் அதை முதன்முறையாக உபயோகித்ததைக் கவனியுங்கள். அவர்கள் ஒன்று கூடி சீட்டுப் போட்டனர்; பரிசுத்த சகோதரர்கள். அவர்கள் பரிசுத்த சகோதரர்கள் அல்ல என்று யார் கூற முடியும்? அவர்கள் பரிசுத்தமாயிருக்கவில்லை என்று யார் கூறுகிறார்கள்? ஆனால் அவர்கள் சீட்டுப் போட்டனர், அது மத்தியாவின் மேல் விழுந்தது. அவன்...அவன் என்ன செய்தான்? ஒன்றுமில்லை. ஆனால் பவுல் தெரிந்து கொள்ளப்பட்ட ஒருவனாயிருந்தான்! ஆமென். அது தேவனுடைய தெரிந்துகொள்ளுதலாயிருந்தது: ஒரு சிறிய, கொக்கி மூக்குக்காரன், பரியாசக்காரன், அதிக கோபம் கொண்ட யூதன். மத்தியா அல்ல, அந்த டி.டி. உங்களுக்குத் தெரியும், அவன்—அவன்...அது பவுல். தேவன் பவுலைத் தெரிந்துகொண்டார்; சபையானது மத்தியாவைத் தெரிந்துகொண்டது. புரிகிறதா? தேவனுடைய "தவறு" என்று கூற உங்களுக்கு உரிமையில்லை. என்ன செய்ய வேண்டும் என்பதை அவர் அறிந்திருக்கிறார், மனிதன் எதினால் உண்டாக்கப்பட்டிருக்கிறான் என்பதை அவர் அறிந்திருக்கிறார்.

152 யார் எப்பொழுதாவது...அந்தச் சபையானது எப்போதாவது பவுலைத் தெரிந்தெடுத்தா? ஓ, இல்லை, ஒருபோதும் இல்லை. மேலும், "அந்த நபர் தான் எங்கள் எல்லோரையும் சிறையில் அடைக்கிறான்" என்றனர்.

153 ஆனால் தேவனோ, "அவன் எனக்காக என்ன பாடுபடுவான் என்பதை நான் அவனுக்குக் காண்பிப்பேன்" என்றார். என்னவென்று அவருக்குத் தெரியும்.

154 சரி, நாம் யார் சரியென்று நினைத்தாலும், யார் சிறந்த தகுதியுள்ளவர் என்பதை தேவன் அறிந்திருக்கிறார், ஏனென்றால்

அவர் மனிதனுடைய இருதயத்தை அறிந்திருக்கிறார், அவர் அறிந்திருக்கிறார்.

155 எழுப்புதல் அல்லது இவைகள் சம்பவிக்க வேண்டும் என்று நாம் நினைக்கும் நேரத்தில் இவைகள் நடப்பதில்லை. “இப்பொழுது இதுவே இந்தத் தருணம், தேவனுக்கு மகிமை!” என்று நாம் நினைக்கிறோம். நான் நம்முடைய குழுக்களிலும், வர்த்தக புருஷர்களிடையிலும், அது போன்றவற்றிலும் கூறப்படுவதைக் கவனிக்கிறேன்: “அல்லேலூயா, ஒரு மகத்தான எழுப்புதல் உடனே வரப்போகிறது!”

156 வஞ்சிக்கப்பட வேண்டாம், “அவன் ஏற்கனவே வந்துவிட்டான், அவர்கள் அவனுக்குச் செய்ய வேண்டியதைச் செய்தார்கள்.” பார்த்தீர்களா? ஆனால் ஒரு எழுப்புதல் உண்டு என்று அவர்கள் நினைக்கிறார்கள். அது நடக்கிறதா? இல்லை! அது முடிந்துவிட்டது, அது மரித்துவிட்டது, அது முடிந்துவிட்டது. ஹூ-ஹூ. கவனியுங்கள், இது தீவட்டிகளை- ஆயத்தப்படுத்தும் நேரம், வெளியே வந்து உள்ளே செல்லுதலாய் இருக்கிறது. “கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்கள் புது பெலன் அடைவார்கள்.”

157 இங்கே நம்முடைய பாடப்பொருளில் கவனியுங்கள், கவனியுங்கள், தாவீது, இஸ்ரவேலின் ராஜா, அவன் தான் தேவனுடைய பெட்டியை அதனுடைய ஸ்தானத்திற்கு திரும்பக் கொண்டு வரும் வெளிப்பாட்டைப் பெற்றிருந்தான்; சவுலின் நாட்களில் அவர்கள் அதை ஒருபோதும் கலந்தாலோசிக்கவில்லை, ஏனெனில் சவுல் பின்வாங்கிப் போய் விட்டிருந்தான். எனவே அவர்கள் உடன்படிக்கைப் பெட்டியைப் பற்றி ஒருபோதும் கலந்தாலோசிக்கவேயில்லை, சவுலின் நாட்களில், அவன் பின்வாங்கிப் போய்த் தேவனை விட்டு அகன்று போனான். எனவே தாவீது, துரிதமாக, ஆவியின் ஏவுதலோடு...இப்பொழுது இதைக் கவனியுங்கள், நீங்கள் இதைச் சரியாகப் புரிந்து கொள்ளவில்லையென்றால், இது மிகவும் ஆபத்தான ஒரு பொருளாகும். நாம் குழந்தைகளாக இருப்பதற்கு பதிலாகப் புருஷராய் இருக்க வேண்டிய நேரம் வந்து கொண்டிருக்கிறது என்பதை நான் உணருகிறேன். ஹூ-ஹூ. நாம் பாலுக்குப் பதிலாகப் பலமான இறைச்சியைப் புசிக்க வேண்டும்.

158 இஸ்ரவேலின் இராஜாவாகிய தாவீதைக் கவனியுங்கள், இராஜாவானவன் புதிதாக இராஜாவாக அபிஷேகம் பண்ணப்பட்டிருந்தான்; அல்லது தெரிந்து கொள்ளப்பட்ட இராஜா, சவுல்...சாமுவேல் தேவனுடைய சித்தத்தினால் அவனை அபிஷேகம் பண்ணினான்; அவன் முற்றிலுமாகத் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட இராஜாவாயிருந்தான், என்பதில் சந்தேகமேயில்லை. இதோ அவர் இருக்கிறார், ஆவியின் ஏவுதல் அவனைத் தாக்குகிறது. அது தாவீதுக்கு வெளிப்படுத்தப்பட்டது. அவன் வெளிப்பாட்டைப் பெற்றுக்கொண்டான், வேறு யாரும் அதைக் குறித்து ஒன்றுமே

கூறவில்லை. "நாம் போய் உடன்படிக்கைப் பெட்டியைக் கொண்டு வருவோம், ஏனென்றால் நாம் இங்கே உடன்படிக்கைப் பெட்டியை நம்மோடு வைத்திருக்க வேண்டும் என்பது தேவனுடைய சித்தமாயுள்ளது, நாங்கள் இந்தப் உடன்படிக்கைப் பெட்டியினூடாகத் தேவனிடத்தில் கலந்தாலோசிக்கிறோம்" என்று கூறினான். மிக மிகத் தீரமான காரியம். நீங்கள் அப்படி நினைக்கவில்லையா? சரி.

159 நினைவிருக்கட்டும், ஆனால், அவன் ராஜாவாயிருந்தபோது, வெளிப்பாட்டைப் பெற்று, அவன் தன்னுடைய ஸ்தானத்தை மீறிவிட்டான். நாத்தான் என்னும் பெயர் கொண்ட ஒரு தீர்க்கதரிசி தேசத்தில் இருந்தான், அவன்தான் வெளிப்பாட்டைப் பெற்றுக்கொள்ள நியமிக்கப்பட்டிருந்தான். பேசப்பட வேண்டிய எந்தக் காரியமும் இருந்தால், அவன், "கர்த்தர் தம்முடைய ஊழியக்காரராகிய தீர்க்கதரிசிக்கு அதை வெளிப்படுத்தும் வரைக்கும் அவர் ஒரு காரியத்தையும் செய்கிறதில்லை" என்றான். ஆனால், நீங்கள் பாருங்கள், தாவீது ராஜாவாயிருந்தபோது, அவன்மேல் அபிஷேகம் இருந்தது...இப்பொழுது, அது வேதவாக்கியமா? அவன்மேல் அபிஷேகம் பெற்று, ஒரு உண்மையான வெளிப்பாட்டைப் பெற்றுக் கொண்டான்; ஆனால் அது தவறாயிருந்தது. ஏனென்றால் நாத்தான் அந்தக் காலத்தின் தீர்க்கதரிசியாயிருந்தான்; நாத்தானுக்கு வெளிப்பாடு ஒருபோதும் வரவில்லை; தாவீதுக்கு வெளிப்பாடு வந்தபோது, அவன் அதைக் குறித்து நாத்தானிடம் கலந்தாலோசிக்கக் கூட இல்லை. அவன் என்ன செய்ய நினைத்தானோ, அதைச் செய்யத்தான் போகிறான். ஹூ-ஹூ.

160 ஆனால் 13-ஆம் அதிகாரத்தில் தாவீது யாரை கலந்தான் என்பதைக் கவனியுங்கள், "ஆனால் அவன் ஆயிரம் பேர்களுக்கும், நூறு பேர்களுக்கும் தலைவர்களைக் கலந்தாலோசித்தான்," தன் சபையினரிடம் திரும்பினான். பார்த்தீர்களா? "இப்பொழுது, நாம் அவ்வாறு செய்ய வேண்டும் என்று நீங்கள் நினைக்கவில்லையா...?" அதுவல்ல அது. இப்பொழுது, அவன் தேவனுக்கு ஒரு சேவை செய்ய முயற்சித்துக் கொண்டிருந்தான், ஆனால் அவன் அதைச் செய்யும்படி நியமிக்கப்படவில்லை; பாருங்கள், ஏனென்றால் தேவனுக்கு ஒரு வழி இருந்தது.

161 தேவன் ராஜாவினிடத்தில் அவனுடைய புண்ணைக் குறித்தும், சுகமடைவதைக் குறித்தும் அவனிடத்தில் பேசியிருக்க முடியும், ஆனால் அவர் அதைச் செய்யவில்லை, அவர் அதைச் செய்ய ஒரு நியமிக்கப்பட்ட வழியை உடையவராயிருந்தார், அது அவருடைய தீர்க்கதரிசியாயிருந்தது. எனவே அவர் ஏசாயா தீர்க்கதரிசியினிடத்தில் பேசி, என்ன சம்பவிக்கும் என்று எசேக்கியாவிடம் திரும்பிச் சென்று கூறும்படி கூறினார்.

162 இப்பொழுது, எசேக்கியா தேவனோடு முகமுகமாய்ப் பேசிக்கொண்டிருந்தான், உண்மையாகவே தேவனால்

எசேக்கியாவிடம் பேச முடிந்தது, ஆனால் அவர் குறிப்பிட்ட வழிகளை ஏற்படுத்தினார்! உங்களுக்கு அது புரிகிறதா? தேவன் தம்முடைய சொந்த ஒழுங்கு முறைகளைச் செய்கிற காரியங்களைச் செய்கிறார்: எழுப்புதல்களை அனுப்புதல், பேசுதல், உரையாடுவது, அது என்னவாயிருந்தாலும் சரி. அவர் அதைச் செய்யத் தம்முடைய வழியை உடையவராயிருக்கிறார், அதை எப்படிச் செய்ய வேண்டும் என்று அவருக்குக் கூற நம்மில் எவரும் இல்லை. அவர் அதைச் செய்ய விரும்புகிற விதமாகவே அதைச் செய்கிறார்.

163 ஆகையால், நீங்கள் பாருங்கள், தாவீது, ஏவப்பட்டு... இப்பொழுது, அபிஷேகம், கள்ள அபிஷேகம் என்று நான் கூறினது உங்களுக்கு நினைவிருக்கிறதா? பரிசுத்த ஆவியானவர் வந்து ஒரு நபரை அபிஷேகிக்க முடியும் என்பதை நினைவில் கொள்ளுங்கள், ஆயினும் அது தேவனுடைய சித்தத்திற்கு புறம்பாக இருக்கலாம். இதோ, அது இங்கே அதைச் சரியாக நிரூபிக்கிறது. பார்த்தீர்களா? நாம் அதைச் செய்கிற தேவனுடைய வழியினூடாகச் செல்ல வேண்டும், நம்முடைய வழிகளில் அல்ல, அதைச் செய்கிற தேவனுடைய வழியினூடாகச் செல்ல வேண்டும். காரணம், தாவீது ஒரு இராஜாவாக அபிஷேகம் பண்ணப்பட்டிருந்தபடியால், (இயேசு கிறிஸ்துவுக்கு ஒரு மாதிரி) தேவனுடைய ஆவியினால் அபிஷேகம் பண்ணப்பட்டான், ஆனால் அது தேவனுடைய வழியாயிருக்கவில்லை.

164 சபையார் யாவருக்கும், "அது அவர்களுக்குப் பிரியமாயிருந்தது" என்று வேதம் கூறியுள்ளது. கவனியுங்கள், ஆயிரம் பேர்களுக்கும், நூறுபேர்களுக்கும் தலைவர்களும், ஆசாரியர்களும், வேத சாஸ்திரிகளும் கூட அது "அற்புதமானது" என்று எண்ணினர். அங்குதான் உங்களுடைய வேதாகமப் பள்ளிகள் உள்ளன, அது "அற்புதமானது" என்று அவர்கள் எண்ணினர். எல்லா ஜனங்களும் கூட, ஆசாரியர்களும், மற்றும்— மற்றும் அவர்கள் எல்லோருமே இராஜாவின் அபிஷேகம் சரியானது என்று ஒப்புக்கொண்டனர். கவனியுங்கள்! ஆனால் தேவன் தம்முடைய வார்த்தையை அதனுடைய காலத்தில் *அவர்களுக்கு* வெளிப்படுத்துவதாக வாக்களித்திருக்கவில்லை. தேவன் தம்முடைய வார்த்தையை வெளிப்படுத்தும் தம்முடைய வழியை உடையவராயிருந்தார், ஆனால் *அவர்களுக்கு* அல்ல. அது தேவனுக்கு முரணாக இருந்தது என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

165 அது இம்லாவின் குமாரனாகிய மிகாயாவின் நாட்களில் நடந்தது போன்றதாகும். அந்தக் கதை உங்களுக்கு நினைவிருக்கிறதா? யூதாவும் இஸ்ரவேலும் பிரிக்கப்பட்டனர், அவர்கள் இரு வேறு இராஜ்ஜியங்களை உடையவர்களாயிருந்தனர், ஆகாப் ஒரு இராஜ்ஜியத்தின் ராஜாவாயிருந்தான். யோசபாத் யூதாவின் இராஜ்— இராஜ்ஜியத்தின் தலைவனாயிருந்தான் என்று நான் நினைக்கிறேன். ஆகாப் எருசலேமின் இஸ்ரவேலின் மேல் இருந்தான்.

166 கவனியுங்கள், அப்பொழுது இங்கே ஒரு கூட்ட அன்னியர் வருகிறார்கள் தேவன் இஸ்ரவேலருக்கு அளித்திருந்த தேசத்தின் ஒரு பாகத்தைப் பறித்துக்கொண்டு, அங்கேயிருந்த இந்தப் பெலிஸ்தியர், இல்லை சீரியர், அவர்கள் அந்த நிலத்தை வைத்திருந்தனர், மேலும் இஸ்ரவேலுக்குச் சொந்தமான அந்த நிலத்திலிருந்து தங்கள் சொந்தக் குழந்தைகளுக்கு உணவளித்து வந்தனர். எனவே அவர்களுடைய சொந்த பிள்ளைகளையும், தங்களுடைய சொந்த குடும்பங்களையும் போஷிக்க அவர்களுக்கு அந்த நிலம் தேவைப்பட்டது. தேவன் அவர்களுக்கு அளித்தார்...அது தேவனால் அவர்களுக்கு அளிக்கப்பட்ட உரிமைகளாயிருந்தது.

167 எனவே ஆகாப் யோசபாத்தை அழைத்து, "வா" என்றான். அவன், "அங்கே நம்முடைய சத்துரு என்ன செய்கிறான் என்பதைப் பாருங்கள். தேவனுடைய ஜனங்களாகிய நாம், இந்தத் தேசத்தை நாம் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று தேவனால் அளிக்கப்பட்ட ஒரு உரிமையைக் கொண்டு, அது நமக்குச் சொந்தமானது, தேவன் தம்முடைய தீர்க்கதரிசியாகிய யோசுவா மூலமாக இந்தத் தேசத்தைப் பிரித்தார், அது நம்முடையதாக இருக்க வேண்டும், அது நமக்கும், நம்முடைய பிள்ளைகளுக்கும் சொந்தமானதாயிருக்கிறது. இங்கே கம்யூனிஸ்டுகள் அதைக் கைப்பற்றிவிட்டார்களா? நாம்...நாம் மிகவும் பசியாயிருக்கிறோம். அவர்கள் தேவனால் அளிக்கப்பட்ட நம்முடைய உரிமைகளைப் பெற்றுள்ளனர். நாம் அங்குச் சென்று நம்முடைய நிலத்தைத் திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று நீங்கள் நினைக்கவில்லையா? நீங்கள் உங்களுடைய சேனைகளில் சேர்ந்து கொள்ளுங்கள், நீங்கள் மெத்தோடிஸ்டுகள், பிரஸ்பிடேரியன்கள், மற்றும் எல்லோருமே, பிரஸ்பிடேரியன்கள், லூத்தரன்கள், இப்படியே, இங்குள்ள எல்லாரும் இப்பொழுது உலக சபை ஆலோசனை சங்கத்தை எடுத்துக் கொள்வோம், நாம் யாவரும் ஒன்று சேர்ந்து, நாம் அந்தக் காரியத்தை எடுத்துக் கொள்வோம்" என்றான். (நான் இப்பொழுது ஒரு உவமையைக் கூறி, பேசிக்கொண்டிருக்கிறேன்.) "நாம் போய் அதைப் பெற்றுக் கொள்வோம்."

168 "ஏன்," அவன், "நிச்சயமாக, நாம் எல்லோரும் ஒன்றாயிருக்கிறோம்" என்றான். ஹூ-ஹூ.

169 இப்பொழுது, வேதம், "இரண்டு பேர் ஒருமனப்பட்டிருந்தாலொழிய ஒருமித்து நடந்து போவார்களோ?" என்று கூறியுள்ளது. பார்த்தீர்களா?

170 அங்கே அந்த மகத்தான மனிதன், அந்த மகத்தான பெந்தேகோஸ்தே மனிதன், யோசபாத், தவறான கூட்டத்தோடு கலந்தான். இன்றைக்கு நம்முடைய பெந்தேகோஸ்தேக்களுக்கும் அதுதான் சம்பவித்துள்ளது. அங்கே சில உண்மையான மனிதர்கள் இருக்கிறார்கள், ஆனால் அவர்கள் அந்த ஸ்தாபனக் கூட்டத்தில்

கலந்திருக்கிறார்கள். அந்தக் காரியத்திலிருந்து வெளியே வாருங்கள்! அது கர்த்தரால் சபிக்கப்பட்டது!

171 இப்பொழுது கவனியுங்கள்! அதோ அவர், "ஆம், அது நியாயமாகத் தென்படுகிறது" என்றார். மேலும், "எங்களுடைய இரதங்கள் உம்முடையவைகள்; நம்முடைய ஜனங்கள். எல்லாவற்றிற்கும் மேலாக, நாம் எல்லோரும் யூதர்கள். நிச்சயமாக, நாங்கள் உம்மோடு வருவோம்" என்றனர். ஆனால், "நாம்—நாம் முதலில் கர்த்தரிடம் கலந்தாலோசிக்க வேண்டும் என்று நீங்கள் நினைக்கிறீர்களா?" என்று கூற போதுமான மார்க்கம் யோசபாத்தில் விடப்பட்டிருக்கிறது. பார்த்தீர்களா? "அது ஒரு நல்ல யோசனையாக இருக்கும் என்று நான் நினைக்கிறேன்."

172 ஏன், ஆகாப், "நிச்சயமாக." "ஏன், ஓ, நிச்சயமாக, நான் அதைக் குறித்து சிந்தித்திருக்க வேண்டும்" என்றான்.

173 "சரி, தேவனுடைய மனிதன் என்ற ஒருவன் எங்காவது இருக்கிறானா? உங்களுக்கு ஒரு தீர்க்கதரிசி உண்டா?" என்று கேட்டான்.

174 "ஆ, நான் அவைகளில் நானூறு பேரை வைத்துள்ளேன். நான் இங்குள்ள முழு ஆலோசனை சங்கத்தையும், முழு ஸ்தாபனத்தையும் கொண்டிருக்கிறேன். அவர்கள் எபிரெய தீர்க்கதரிசிகள்" என்றான்.

175 இப்பொழுது நினைவிருக்கட்டும், அவர்கள் "*தீர்க்கதரிசிகள்*, எபிரெய தீர்க்கதரிசிகள்" என்று வேதம் கூறியுள்ளது, அஞ்ஞான தீர்க்கதரிசிகள் அல்ல, எபிரெய தீர்க்கதரிசிகள்; அவற்றின் ஒரு பள்ளி, ஒரு வேத சாஸ்திர கருத்தரங்கு.

176 "சரி, அவர்களை மேலே கொண்டு வாருங்கள்!"

177 தீர்க்கதரிசியின் மனதில் மதிப்பைப் பெறும்படியாக ராஜாக்களும் உடை உடுத்திக்கொண்டு அவனுக்கு முன்பாக நின்றனர். இதோ, மாவட்ட மன்ற உறுப்பினர்களின் பெரும் தலைவரான சிதேக்கியா என்று நான் நினைக்கிறேன், அல்லது அவன் என்னவாக இருந்தாலும் சரி, அவர்கள் மத்தியில் வந்தான். அவன் தனக்குத் தானே இரண்டு பெரிய கொம்புகளை உண்டாக்கிக் கொண்டான், அவன், "நான் தேவனிடத்திலிருந்து கேள்விப்பட்டிருக்கிறேன். **கர்த்தர் உரைக்கிறதாவது**, 'இந்தக் கொம்புகளினால் நீர் சீரியரை தேசத்திலிருந்து துரத்திவிடுவீர்'" என்றான்.

178 "ஓ, மகிமை!" அது அற்புதம், அருமை என்று எல்லோரும் எண்ணினர்.

179 இப்பொழுது அது சரியானதற்கும் தவறானதற்கும் இடையேயுள்ள அந்தச் சவரக்கத்தியின் முனைக்கு எவ்வளவு நெருக்கமாக இருக்கிறது என்பதைக் கவனியுங்கள். மேலும் நினைவில் கொள்ளுங்கள், அது சரிக்கும் தவறுக்கும் இடையிலான வேறுபாட்டிற்கு நடுவே, கூர்மையான சவரக்கத்தியைப் போல

ஒருநாள் கீழிறங்கும் வரை, ஏதேனும் ஒரு பக்கத்தில் விழும். அது தேவனுடைய ஒவ்வொரு வார்த்தையாயும் இருக்க வேண்டும்; கிட்டத்தட்ட ஒவ்வொரு வார்த்தையல்ல, ஆனால் ஒவ்வொரு வார்த்தையாயுமே! அது இன்றைக்கு லூத்தரன்களுக்கு அல்ல, மெத்தோடிஸ்டுகளுக்கு அல்ல, பெந்தெகொஸ்தேயினருக்கு அல்ல, ஆனால் அந்த மெருகேற்றப்பட்ட காலத்திற்கு, அந்திக்கிறிஸ்துவின் அபிஷேகமானது மிகவும் பரிபூரணமாயிருக்கிற இந்தக் காலத்தில், அது தெரிந்து கொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கும், அவர்கள் அதைக் கவனிக்கவில்லையென்றால், அவர்கள் தவறான பக்கத்தில் விழுந்து விடுவார்கள். கவனியுங்கள்! கவனமாக இருங்கள்! நாம் இப்பொழுது ஒரு பெந்தேகோஸ்தே காலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கவில்லை. நாம் அந்தக் காலத்தைக் கடந்திருக்கிறோம், நாம் லூத்தரன் சபைக் காலத்தைக் கடந்தது போன்றே…பாருங்கள்?

180 கவனியுங்கள். இப்பொழுது தீர்க்கதரிசிகள் யாவரும் தீர்க்கதரிசனம் உரைத்தனர், அவர்களில் நானூறு பேர் நன்கு போஷிக்கப்பட்டு, நன்கு அமைக்கப்பட்ட, எபிரெய தீர்க்கதரிசிகள், "**கர்த்தர் உரைக்கிறதாவது**, 'புறப்பட்டுப் போங்கள், கர்த்தர் உங்களோடு இருக்கிறார்'" என்று ஒருமனதோடு சாட்சி பகர்ந்தனர்.

181 யோசபாத், "சரி, அது—அது சரிதான். ஆனால்," என்று கூறி, "உங்களிடம் வேறொருவன் இருக்கிறானா?" என்று கேட்டான்.

182 "மற்றொருவனா? நாம் இங்கே முழு ஸ்தாபனத்தையும் பெற்றுள்ளோம், நாங்கள் முழு ஆலோசனை சங்கத்தையும் இங்கே கூட்டி வரச் செய்துள்ளோம். நமக்கு ஏன் மற்றொருவன் தேவை?" என்று கேட்டான்.

183 அதற்கு அவன், "ஆ, ஆனால் வேறொருவர் இருக்கலாம் என்று நான் நினைத்தேன்" என்றான்.

184 அவன், "ஓ, ஆம், வேறொருவன் உண்டு, ஆனால் அவன் இந்த ஆலோசனை சங்கத்தைச் சார்ந்தவனல்ல" என்றான். ஹூ-ஹூ. "அவன் புறம்பாக்கப்பட்டவன். அது இம்லாவின் குமாரனாகிய மிகாயா, நான் அவனை வெறுக்கிறேன்" என்றான். பார்த்தீர்களா? மேலும், "அவர்கள் அவனை ஐக்கியத்தில் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள், அவன் துவக்கத்திலேயே ஒரு சாதாரண புறக்கணிக்கப்பட்டவன். அவன் தொடர்ந்து தீர்க்கதரிசனம் உரைக்கிற ஒவ்வொரு காரியத்தையும், அவன் என்னுடைய வேதபாட கருத்தரங்கை ஒரு போதும் ஊக்குவிக்கமாட்டான்" என்றான். ஹூ-ஹூ. "அவன் இந்த எல்லா பொல்லாங்கான காரியங்களையும் செய்கிறான், அவன் வித்தியாசமாக இருக்க வேண்டும் என்பதற்காகவே எப்பொழுதும் எனக்கு எதிராகப் பொல்லாங்காய் தீர்க்கதரிசனம் உரைக்கிறான்."

185 "ஓ," யோசபாத், "ராஜா அதைப் போன்ற ஒரு காரியத்தைக் கூற அனுமதிக்க வேண்டாம். ஆனால் இந்த மனிதன் என்ன கூற

வேண்டும் என்று நான் கேட்க விரும்புகிறேன்” என்றான்.

186 அதற்கு அவன், “சரி, நாம் அவனைக் கண்டு பிடிப்போம்” என்றான். எனவே அவர்கள் வனாந்திரத்திற்கு எங்கோ அனுப்பிவிட்டு, அவர்கள் ஒரு மனிதனை அனுப்பினர்.

187 அவனிடம், “இப்போது நீ திரும்பிச் செல்லும் வழியில், நான் உன்னிடம் ஒன்று சொல்ல விரும்புகிறேன். நீங்கள் மீண்டும் ஸ்தாபனத்திற்குள் வர விரும்புகிறீர்களா?” என்று கேட்டான். பார்த்தீர்களா? “நீங்கள் அவர்கள் அனைவருடனும் மீண்டும் ஐக்கியம் கொள்ள விரும்புகிறீர்களா? நீங்கள் விரும்பினால், மாவட்ட போதகர் கூறுகிற அதே காரியத்தை, பேராயர் கூறுகிற அதே காரியத்தைக் கூறுங்கள், அவர்கள் உங்களைத் திரும்பக் கொண்டு வருவார்கள். இப்பொழுது அதைச் செய்ய வேண்டிய தருணம் வந்துவிட்டது” என்றான்.

188 ஆனால் அபிஷேகம் பண்ணப்பட்ட ஒரு உண்மையான தேவனுடைய தீர்க்கதரிசி தேவனுடைய வார்த்தையின் பேரில் சமரசம் செய்து கொள்வதை உங்களால் கற்பனை செய்து பார்க்க முடிகிறதா? நிச்சயமாக முடியாது!

189 அவன், “கர்த்தரின் ஜீவனைக் கொண்டு, தேவன் கூறுகிறதை மாத்திரமே நான் கூறுவேன்!” என்றான். நமக்கு ஒரு இம்லாவின் குமாரன் தேவை. “கர்த்தரின் ஜீவனைக் கொண்டு, அவர் என்ன கூறுகிறாரோ அதை மாத்திரமே நான் கூறுவேன்.” அது உண்மை, “*அவர்* என்ன கூறுகிறார்.”

190 எனவே அவர்கள் அங்கே ஜனங்களுக்கு முன்பாக, எல்லா தீர்க்கதரிசிகளுக்கும் முன்பாகச் சென்றபோது, அவர்கள், “இப்பொழுது, நீர் கூறுகிற அவர்கள்...” என்றனர்.

191 அவன், “இன்றிரவு பொறுங்கள், கர்த்தர் என்னக் கூறப் போகிறார் என்று நான் பார்க்கட்டும்” என்றான். எனவே, அந்த இரவு, கர்த்தர் அவனுக்கு ஒரு தரிசனத்தில் தோன்றி, என்ன கூற வேண்டும் என்று அவனிடம் கூறினார்.

192 அடுத்த நாள் காலையில் அவன், “இம்லா, நீர் என்ன சொல்லுகிறீர்?” என்று கேட்டான். அவர்கள் எல்லோரும் வெளியே நின்று கொண்டிருந்தபோது...அதாவது நான் குறிப்பிடுவது “இம்லாவின் குமாரனாகிய மிகாயா, நீர் இப்பொழுது என்ன சொல்லுகிறீர்? ஆசாரியர்கள் அனைவரும், தீர்க்கதரிசிகள் அனைவரும், ராஜாக்கள் அனைவரும், மற்றும் அனைவரும் இங்கே ஒன்றாகக் கூடியிருக்கிறோம், ஒவ்வொரு காரியமும் ஒன்றாக இங்கே அமைக்கப்பட்டுள்ளது. இப்பொழுது இந்த மகத்தான ஆலோசனை சங்கத்தில் நீர் என்ன கூறுகிறீர்?” என்று கேட்டான்.

193 “போங்கள்,” என்று கூறி, “ஆனால் இஸ்ரவேலர் மேய்ப்பன் இல்லாத ஆடுகளைப் போலச் சிதறடிக்கப்பட்டதைக் கண்டேன்” என்றான்.

194 அப்பொழுது ஆகாப், “நான் உங்களுக்கு என்ன சொன்னேன்! அந்தத் துரோகியானவன் எனக்கு எதிராகப் பொல்லாங்காய் மாத்திரமே தீர்க்கதரிசனம் உரைக்க முடியும்!” என்றான்.

195 தேவன் அதே காரியத்தைக் கூறிக்கொண்டிருக்கும்போது, அவனால் வேறெந்த காரியத்தையும் எப்படி கூற முடியும்? ஒரு தீர்க்கதரிசி பேசுகிற தேவனுடைய வாயாக இருக்க வேண்டும், அவனுடைய சொந்த சிந்தனையை அல்ல. அவனுடைய... நீங்கள் பாருங்கள், அவன் முற்-...தேவனுக்கு முற்றிலும் கீழ்ப்படிந்து, எந்த ஒரு காரியத்தையும் சேதப்படுத்த விரும்பாமல், ஆனால் தேவன் என்ன கூறுகிறாரோ அதையே அவன் கூற வேண்டியதாயுள்ளது, ஏனென்றால் அவனே அதைக் கட்டுப்படுத்த முடியாது. பார்த்தீர்களா?

196 அவன், “இப்பொழுது, நான் உங்களிடம் கூறவில்லையா?” என்று கேட்டான்.

197 அப்பொழுது அந்தக் கொம்பையுடைய அந்தப் பெரிய மனிதன் எழுந்து வந்து, அவனை வாயில் அடித்து, அவன், “தேவனுடைய ஆவி என்னை விட்டுப் புறப்பட்டபோது, அது எந்த வழியாய் சென்றது?” என்று கேட்டான். வேறு வார்த்தைகளில் கூறுவோமானால், நான் அதை விளக்க முயற்சிக்கிறேன், “இங்கே பார்...இங்கே பார், மிகாயா, நான் உன்னிடம் ஒன்று சொல்ல விரும்புகிறேன். நான் வேதத்தில் ஒரு நிபுணர் என்பதை நீ உணருகிறாயா? எனக்கு அபிஷேகம் உண்டு என்பதை நீ உணருகிறாயா?” என்று கேட்டான். அல்லது “அபிஷேகம்” என்று நாம் இன்றைக்கு கூறலாம். “நான் அதைப் பெற்றுள்ளேன் என்பதை நீ உணருகிறாயா?”

198 அதற்கு இம்லா, “நான் அதைச் சந்தேகிக்கவில்லை” என்றான்.

199 அவன், “ஆனால் கவனி! தேவனுடைய ஆவியானவர் என்னிடத்தில் கூறினது, இங்கே என்னுடைய நானூறு பேரும் சாட்சி பகர்ந்தனர், அதாவது நாம் ‘சீரியர்களை தேசத்திலிருந்து துரத்தப்போகிறோம்.’ நம்முடைய மகத்தான ராஜா கொல்லப்படப்போகிறார் என்று கூற நீ யார்?” என்று கேட்டான். அவன், “தேவனுடைய ஆவியானவர் அதை என்னிடம் கூறினார்” என்றான்.

200 நீங்கள் அதைப் புரிந்து கொள்ளும்படியாக நான் அதை விவரித்துக் கூறட்டும். மேலும் மிகாயா, “ஐயா, கடந்த இரவு தரிசனத்தில் நான் தேவன் சிங்காசனத்தின் மேல் வீற்றிருப்பதைக் கண்டேன். பரலோகத்தின் எல்லா சேனைகளும் அவரைச் சூழ்ந்திருப்பதை நான் கண்டேன், உ-ஊ, அவர்கள் பரலோகத்தில் ஒரு ஆலோசனையை நடத்திக் கொண்டிருந்தனர். அவர்கள், ‘யாரை அனுப்பி அகாபை வஞ்சிக்க முடியும்? என்று கேட்டார்கள். ஏனென்றால் இங்கே சிங்காசனத்தின் கீழே ஒரு தீர்க்கதரிசி

இருக்கிறான், ஒரு உண்மையான தீர்க்கதரிசி, அவனுடைய பெயர் எலியா என்பதாகும். அவன் என்னுடைய வார்த்தையைக் கொண்டு தீர்க்கதரிசனம் உரைத்தான் "அந்தப் பொல்லாத ஆகாப், அவன் நாபோத்தை கொன்று போட்டதால், அந்தப் துன்மார்க்கனின் இரத்தத்தை நாய்கள் நக்கும்" என்று கூறி, நாம் அதை நிறைவேற்ற வேண்டும், ஏனென்றால் அது **கர்த்தர் உரைக்கிறதாவது** என்பதாக ஏற்கனவே உரைக்கப்பட்டிருக்கிறதே! அது நிறைவேற வேண்டும், அங்கே இருக்க வேண்டும். நாம் எப்படி அதைச் செய்யப் போகிறோம்?'" என்று கூறுவதை நாம் காணலாம்.

201 "அதன்பின்னர் இழக்கப்பட்டவர்களின் ஊர்ந்து செல்லும் ஸ்தலங்களிலிருந்து, ஒரு ஆவியானது அசைவாடி வந்து, அவன், 'நான் ஒரு வஞ்சகன். என்னால் உமக்கு ஒரு சேவையைச் செய்ய முடிந்தால், நான் அங்கே போய் அவனுடைய தீர்க்கதரிசிக்குள் உள்ளே நுழைந்து கொள்வேன்'" என்றான். அவர்கள் மிகவும் ஸ்தாபனமாயிருந்தபடியால், அவர்கள் ஒரு காரியத்தை மாத்திரமே புரிந்துகொள்வார்கள், அது ஒரு சிறு உணர்ச்சிவசப்படுதல். "'நான் அவர்கள் ஒரு பொய்யைத் தீர்க்கதரிசனமாய் உரைக்கச் செய்வேன். உம்முடைய உண்மையான தீர்க்கதரிசிக்கு செவிகொடுப்பதற்குப் பதிலாக நான் ஆகாப் அந்தப் பிரபுக்களுக்குச் செவிகொடுக்கச் செய்வேன்; அவன் கூறுகிற ஒவ்வொரு காரியத்தையும் உம்முடைய வார்த்தையைக் கொண்டு சோதித்துப் பார்ப்பான், அவன் *அவனுடைய* தரிசனங்களை வார்த்தையைக் கொண்டு சோதித்துப் பார்ப்பான், அவன் செய்கிற ஒவ்வொரு காரியத்தையும் வார்த்தையைக் கொண்டு சோதிப்பான், அது வார்த்தையோடு இல்லாவிடில், அவன் அதற்குச் செவிகொடுக்கமாட்டான். ஆனால் அது…என்னால் இந்த மற்றவர்களை வஞ்சிக்க முடியும், நான்… அவர்கள்…ஆகாப் அவர்களுடைய பாதுகாப்பின் பேரில் அந்த மகத்தான ஐக்கியத்தில் மிகுந்த நம்பிக்கை கொண்டுள்ளான், எனவே அவர்கள் ஒன்றாகச் சுற்றிச் செல்கிறார்கள், அவர்கள் ஒன்று சேருவார்கள். நான் ஆகாப் அவர்களுக்குச் செவிகொடுக்கும்படிச் செய்து, வெளியே அனுப்பி வைப்பேன். அவ்வாறே நாங்கள் அதைச் செய்வோம்.'"

202 "தேவன், 'உன்னால் அதைச் செய்ய முடியும், நீ உண்மையாகவே ஒரு வஞ்சகன்; நீ கீழே செல்'" என்றார்.

203 அதன்பின்னர் சிதேக்கியா அவனை வாயில் அடித்து, "நீ எங்கேயிருந்தாய்…?" என்று கேட்டான்.

204 அவன், "நீ உட்புற அறையில் உட்காரும்போது, நீ அதைக் கண்டு கொள்வாய்" என்றான். ஹூ-ஹூ.

205 அவன், "போங்கள்!" என்றான் சிதேக்கியா ராஜாவினிடத்தில் கூறினான். "போய்ச் சமாதானத்தோடு திரும்பி வாருங்கள்!" என்றான்.

206 ஆகாப், “அந்த நபரைப் பிடித்துச் சிறையில் போடுங்கள். அவனைச் சங்கிலியால் பிணைத்திடுங்கள், அவனுக்கு இடுக்கத்தின் அப்பத்தையும் இடுக்கத்தின் தண்ணீரையும் கொடுங்கள். நான் இங்கிருந்து என்னுடைய வெற்றியோடு திரும்பி வரும்போது, ‘இந்த எழுப்புதல் நிச்சயம் சம்பவிக்கும்’ என்று என்னுடைய தீர்க்கதரிசிகள் என்னிடத்தில் கூறியுள்ளனர்” என்று கூறி, “அந்த நபரை நான் கவனித்துக் கொள்வேன்!” என்றான்.

207 மிகாயா அந்த மனிதனிடம் கூறின கடைசி வார்த்தைகளைக் கவனியுங்கள்: “நீர் சமாதானத்தோடே திரும்பிவருகிறது உண்டானால், தேவன் என்னைக்கொண்டு பேசினதில்லை.” ஆமென்.

208 பாருங்கள், தேவன் காரியங்களைச் செய்யும் தம்முடைய வழியை உடையவராயிருக்கிறார். இந்த மனிதர்கள் தேவனுக்கு ஒரு சேவை செய்வதாக எண்ணினர். கவனமாக இருங்கள்! உணர்ச்சிவசப்படுதல் அல்ல, உற்சாகம் அல்ல, கற்பனைகள் அல்ல, ஆனால் அது “**கர்த்தர் உரைக்கிறதாவது**” என்பதாய் இருக்க வேண்டும், சரியாக இருக்க வேண்டும். சரி, பரவாயில்லை...இந்தக் காரியங்களை நாம் அவ்வண்ணமே கண்டறிகிறோம்.

209 இப்பொழுது கவனியுங்கள், தாவீது இந்த மகத்தான பிரகடனம் செய்தபோது, அது நல்லது என்றும், ஒரு நல்ல காரியம் செய்வது போன்றும் தென்பட்டது. அதன்பின்னர் நாம் அதைக் கண்டறிகிறோம் (நான் உங்களைக் களைப்படையச் செய்கிறேனா? மற்றொன்றைப் பெற்றுக்கொள்ள நான் மிகவும் தாமதமாகிவிட்டேனா?) அவர்கள் இந்த மகத்தான அறிவிப்பை அறிவித்திருந்தனர், அவர் தீர்க்கதரிசியினிடத்தில் கலந்தாலோசிக்கவில்லை.

210 இப்பொழுது, ஆமோஸ் 3:7-ஐ எவரும் அறிவர் தேவன் முதலில் தம்முடைய தீர்க்கதரிசிக்கு அதை வெளிப்படுத்தும் வரையில் அவர் எந்தக் காரியத்தையும் ஒருபோதும் செய்யமாட்டார் என்று வாக்குப்பண்ணியிருக்கிறார். சபைக் காலங்களினூடாக நாம் சீர்திருத்தக்காரர்களை உடையவர்களாயிருந்து வருகிறோம்; ஆனால் கடைசி நாட்களில் தேசத்தில் ஒரு தீர்க்கதரிசி இருப்பான் என்று மல்கியா 4-ல் வாக்குப்பண்ணப்பட்டிருக்கிறது (ஏனெனில் அது அந்த மாதிரிக்குப் பொருந்த வேண்டும், பாருங்கள்) முடிவு நேரம் வருவதற்கு முன்பு.

211 முதலாவதாக இயேசு வருவதற்கு முன்பு, எலியா வந்தான், மல்கியாவின் எலியா 3. மத்தேயு 11, “நீங்கள் இதைப் புரிந்து கொள்ளக் கூடுமானால், ‘இதோ, நான் என்னுடைய—என்னுடைய தூதனை எனக்கு முன்பாக அனுப்புகிறேன்’” என்று அவ்வண்ணமாய் கூறுகிறது. இப்பொழுது, அவர் தீர்க்கதரிசனம் உரைத்திருக்கிறார், எல்லா வேத சாஸ்திரிகளும் அதை விசுவாசிக்கிறார்கள்: கடைசி நாளில் எலியாவின் ஆவியும் கூட வரப்போகிறது. அது ஐந்து முறை வர வேண்டும், தேவன் அந்த ஆவியை உபயோகிக்கிறார்:

எலிசா, எலியா, யோவான் ஸ்நானன், மற்றும் புறஜாதி சபைக்கு, அதன்பின்னர் யூதர்களுக்கு வெளிப்படுத்தின விசேஷம் 11-ம் அதிகாரம். அது தேவனுடையது கி-ரு-பை, வி-சு-வா-ச-ம், இ-யே-சு, இயேசு, ஐந்து என்ற எழுத்து. நான்கு மணிக்கு நிறுத்த முடியாது, அது ஐந்து மணிக்குச் செல்ல வேண்டும். பார்த்தீர்களா? கவனியுங்கள்!

212 இப்பொழுது, அவர் அதை வாக்குத்தத்தம் செய்துள்ளார், எனவே அதுவே இன்றைக்கும், சோதோம் கொமோராவுக்கும் சரியாக வேதத்தில் அமைந்துள்ளது. எலியா அல்ல...அது எலியாவல்ல; அது எலியாவின் மேல் இருந்த தேவனுடைய ஆவியாய் இருந்தது; எலியா ஒரு மனிதன் மட்டுமே. இப்பொழுது, நாம் எலியாக்களின் அங்கிகளையும், எலியாவின் மேலங்கிகளையும், எலியாக்களின் ஒவ்வொரு காரியத்தையும் உடையவர்களாயிருக்கிறோம். ஆனால் இந்நாளின் எலியா கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவாயிருக்கிறார். மத்தேயு பதினேழாம் அதிகாரத்தின்படி-...அவர் வர வேண்டும், லூக்கா 17:30ல், மனுஷகுமாரன் தம்முடைய ஜனங்களுக்குள் தம்மை வெளிப்படுத்துவார். ஒரு மனிதன் அல்ல, தேவனே! ஆனால் அது ஒரு தீர்க்கதரிசியினூடாக வரும். இப்பொழுது, அவர் ஒரே நேரத்தில் இரண்டு பெரிய தீர்க்கதரிசிகளை உடையவராயிருந்ததில்லை, ஒருபோதும், உலகத்தில் இல்லை. பார்த்தீர்களா? எவ்வளவுதான்... இரண்டு—இரண்டு தலைகள் இருக்க முடியாது...அது ஒரு தலையாகத்தான் இருக்க வேண்டும். தேவன் ஒரு மனிதனை தம்முடைய கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வர வேண்டும். பார்த்தீர்களா? ஒரே தேவன் உண்டு; பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவர், ஆனால் அவை எல்லாவற்றின் மீதும் ஒரே தேவன் இருந்தார். கவனியுங்கள், அந்த உத்தியோகங்களையே உபயோகித்தார். எனவே அவர் எலியாவுடன், எலியாவின் ஆவி; அவர் அந்த ஆவியைப் பயன்படுத்தினார், ஆனால் அதே தேவன் தம்முடைய வார்த்தையை நிறைவேற்ற எல்லா நேரத்திலும் அதைக் கட்டுப்படுத்திக் கொண்டிருந்தார்.

213 இப்பொழுது இதில் கவனியுங்கள், தாவீது தான் எல்லாவற்றையும் ஒழுங்குபடுத்தியிருப்பதாக எண்ணினான். அவன் ஏவப்பட்டிருந்தான். பரிசுத்த ஆவியானவர் எப்படி ஒரு மனிதனை அபிஷேகிக்க முடியும் என்று பார்த்தீர்களா? ஆனால் அது அபிஷேகத்தின் ஒழுங்கில் இருக்க வேண்டும். வெளிப்புற ஆவி பரிசுத்த ஆவியினால் அபிஷேகம் செய்யப்படலாம், ஆனால் ஆத்துமாவோ கீலைப் போலக் கருமையாக இருக்கலாம். களைக்கு ஜீவனைக் கொடுக்கிற...கோதுமைக்கு ஜீவனைக் கொடுக்கிற அதே தண்ணீரில்தான் களைகளும் வளருகின்றன; ஆனால் அந்தக் களையின் அடிப்பாகத்தில், அது ஒரு களையின் ஜீவனாய் உள்ளது. அது களிகூர்ந்து, மலர்ந்து, ஜீவனைப் பெற்று, கோதுமை செய்கிற ஒவ்வொரு காரியத்தையும் செய்கிறது, ஆனால்

அதனுடைய *ஆத்துமாவோ களையாயிருக்கிறது*. பார்த்தீர்களா? கள்ளப் போதகர்கள் எழும்பி, எல்லாவிதமான திரித்துவக் கொள்கைகளையும் மற்றெல்லா காரியங்களையும் போதித்து, பரிசுத்த ஆவியினால் அபிஷேகம் பண்ணப்பட்டு, உண்மையான சுவிசேஷத்தைப் போல முடிந்தளவு அற்புதங்களை நிகழ்த்த முடியும். ஆனால் இங்கே வார்த்தையினால், அதுதான் அதைச் செய்கிறது. நான் என்ன கூறுகிறேன் என்று புரிகிறதா? இப்பொழுது, இதைப் போதிப்பது சரியாயிருக்கும் என்று, நான் யூகிக்கிறேன், நான்—நான் இந்தக் காலையில் இங்கே இந்த விடுதியில் உள்ள ஒரு ஸ்தாபனமற்ற கூடாரத்தில் இருக்கிறேன்.

214 கவனியுங்கள், நாம் என்ன கூறுகிறோம் என்பதைக் கவனியுங்கள். இப்பொழுது, பாருங்கள், கவனியுங்கள். உண்மையான எழுப்புதல் கொண்டிருந்த எல்லா உணர்ச்சிகளையும் தாவீது உடையவனாயிருந்தான். கவனியுங்கள்! அவர்கள் கூச்சலிட்டனர், அவர்கள் சத்தமிட்டனர், அவர்கள் நடனமாடினர், அவர்கள் உண்மையாகவே அந்த அபிஷேகத்திலிருந்து ஏதோ ஒன்றைப் பெற்றுக் கொண்டனர். நிச்சயமாகப் பெற்றுக் கொண்டனர்! எல்லாமே ஒரு உண்மையான எழுப்புதலைப் போன்றுள்ளது, ஆனால் நீங்கள் கவனியுங்கள், தேவன் அதில் இருக்கவில்லை. தேவன் அதில் இருக்கவில்லை. அவர் அந்தத் தேசத்தில் ஒரு தீர்க்கதரிசியை உடையவனாயிருந்தார். அவர்கள் அதை அறிந்திருக்க வேண்டும். பார்த்தீர்களா? தாவீது அதை அறிந்திருக்க வேண்டும்.

215 இன்றைக்கு ஏதோ ஒன்று, நாம் பெரிய ஸ்தாபனங்கள், நம்முடைய காலத்தின் சிலுவைப்போர் போன்ற எல்லா இயக்க முறைமைகளையும் பெற்றுள்ளோம், ஆனால் விளைவு அப்பொழுது இருந்தது போலவே மாறிக்கொண்டிருக்கிறது; நம்முடைய மகத்தான சிலுவை யுத்தங்களின் பலன்களையும், நம்முடைய பெரிய அருமையான புத்திக்கூர்மையையும், நம்முடைய பெரிய கட்டிடங்களையும், நம்முடைய பெரிய…ஆயிரக்கணக்கான கட்டிடங்களும், அங்கத்தினர்களைச் சேர்த்துக் கொண்டு மற்ற காரியங்களைச் செய்தால், அது அதேவிதமாகவே மாறிவிடுகிறது, எல்லாமே தோல்வியடைந்து விட்டது. நான் வித்தியாசமாக இருக்க இதைக் கூறவில்லை, நான் இந்தக் காலையில் அருகில் நின்று கொண்டிருக்கிற தேவனுடைய புத்தகத்திற்கு முன்பாக நேர்மையாய் இருக்க வேண்டும் என்பதற்காகவே இதைக் கூறுகிறேன். பார்த்தீர்களா? எல்லாமே தோல்வியடைகிறது, அதே விளைவுகள்தான்.

216 இப்பொழுது தேவனும் (அவருடைய நேரத்திலும் காலத்திலும்) அவருடைய தீர்க்கதரிசிகளை பொறுப்படுத்தாதபோது என்ன நடந்தது என்று பார்ப்போம், இன்றைக்கு நாம் செய்வது போன்றே வேத சாஸ்திரம், பாதிரிமார்கள், ஸ்தாபனங்களின் பேரில் சார்ந்து

இருப்பது. இப்பொழுது கூர்ந்து கவனியுங்கள். அது எல்லாமே குழப்பமடைந்துவிடுகிறது. உண்மையான தேவனுடைய ஆவி அங்கே இருக்குமானால், அது அதை வார்த்தைக்குள்ளாக வழிநடத்தும்; வார்த்தையில் ஒரு இடத்தில் மாத்திரமல்ல, முழு வார்த்தையும் முழு காலத்திற்கும் உள்ளது. பார்த்தீர்களா?

217 பெந்தெகொஸ்தே நாளில், ஆவியானவர் அதை நேராக யோவேல் 2:38-க்கு வழிநடத்தினார். பார்த்தீர்களா? லூத்தரின் நாளில், அது அதை அதற்குள்ளாக வழிநடத்தியது; வெஸ்லி; இந்தக் கடைசி பெந்தேகோஸ்தே அசைவில்; ஆனால் இது வேறொரு காலமாயுள்ளது, இது மணவாட்டி வெளியே வரும் அழைப்பாய் உள்ளது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு பெந்தேகோஸ்தேவில் அல்ல, அல்லது அதன் மறுநிகழ்வு, அல்லது வருகை. பெந்தேகோஸ்தே…

218 பரிசுத்த ஆவியானவர் லூத்தரிடம் இருந்தார். பரிசுத்த ஆவியானவர் வெஸ்லியில் இருந்தார்; அது தேவனுடைய வார்த்தை அபிஷேகம் பண்ணப்பட்டதாயுள்ளது. பரிசுத்த ஆவியானவர் அந்தக் காலத்தின் ஜனங்களுக்குத் திரும்பி வந்து, அவர்கள் வரங்களைத் திரும்பப் பெற்றுக்கொள்ளத் துவங்கினர். அவர்கள் தங்களைத் தேவனுக்கு ஒப்புக்கொடுத்ததன் மூலம், பரிசுத்த ஆவியானவர் அவர்கள் மூலமாக அந்நிய பாஷைகளில் பேசினார் என்பதை அவர்கள் கண்டறிந்தனர். அவர்கள் வியாதியஸ்தர் மேல் தங்களுடைய கரங்களை வைத்தனர், அவர்கள் சுகமடைந்தனர். அவர்கள் ஆவியில் நடனமாடினார்கள். பார்த்தீர்களா? அது சபையை ஒழுங்கிற்குள் கொண்டு வந்த சீர்திருத்த காலமாகும். சபையின் கடைசி ஒழுங்கு வரங்களைச் சபைக்குள் வைப்பதாகும்; லூத்தர் நீதிமானாக்குதலை வைத்தது போல, வெஸ்லி பரிசுத்தமாக்கப்படுதலை வைத்தது போல, பெந்தேகோஸ்தே வரங்களை வைத்தது போல. ஆனால் அவர்கள் என்ன செய்தனர்? கோதுமை தண்டுக்கு இயற்கை அமைத்த அதே தவறை, அவர்கள் ஸ்தாபனமாக்கினர், அது தேவனுக்கு விரோதமாயும், தேவனுக்கு முரண்பட்டதாயுமுள்ளது.

219 இப்பொழுது, நாம் அதைக் கண்டறிகிறோம்…அதன்பின்னர் இந்தத் தண்டுகளைச் சேகரிக்கிறவர்கள் ஒன்று சேரும்போது, அவர்கள் தங்களுடைய சொந்த கருத்தை உருவாக்குகிறார்கள். அது ஒரு பொருட்டல்ல…அவர்கள் அதை அழைக்கிறபடி “புதிய விவகாரம்”, அசெம்பிளீஸ் ஆஃப் காட் சபையிலிருந்து புறப்பட்டு வந்தபோது, அவர்கள் என்ன செய்தனர்? அவர்களால் அதை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. அது எவ்வளவு சத்தியமாயிருந்தாலும், இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் ஞானஸ்நானம், அவர்கள் ஏற்கனவே பொது ஆலோசனை சங்கமாக இருந்தனர். மனிதன் அதைக் கைப்பற்றியிருந்தான், ஆவியானவர் அவர்களை விட்டுச் சென்றிருந்தார். சரியே! அதன்பின்னர் இது

வருகிறது…நான் உங்களுடைய சிறந்த தலைவர்கள் சிலரிடத்தில் பேசியிருக்கிறேன்; அவர்கள், "சரி, நாங்கள் இப்பொழுது என்ன செய்ய வேண்டும்?" என்று கேட்கிறார்கள். அவர்கள் தங்களை சங்கடப்படுத்திக் கொள்வார்கள். அது சத்தியம் என்பதை அவர்கள் அறிந்துகொள்ளும்போது; அவர்கள் அவ்வாறு அறியவில்லை என்றால், அவர்கள் ஆவிக்குரிய பிரகாரமாகக் குருடாயும், வேதத்தை அறியாதவர்களுமாயிருக்கிறார்கள். இப்பொழுது அதை மோசமாகக் கூறவில்லை, அதைப் பயபக்தியுடன் கூறுகிறேன். காரணம், இந்தப் பட்டங்களை உபயோகித்து ஞானஸ்நானம் பண்ணப்பட்டதாக வேதாகமத்தில் ஒரு இடமே இல்லை, "பிதா, குமாரன், பரிசுத்த ஆவி." ரோமன் கத்தோலிக்க சபையாகிய உலக ஆலோசனை சங்கம் நிறுவப்படும் வரை அது ஒருபோதும் உபயோகிக்கப்படவில்லை. அவர்களுடைய சொந்த உபதேசம் அதேக் காரியத்தையே சாட்சி பகருகிறது. அது ஒரு கத்தோலிக்க கொள்கை! ஒரு வேதாகம உபதேசம் அல்ல, ஆனால் ஒரு கத்தோலிக்க கொள்கை. மெத்தோடிஸ்டுகளாகிய நீங்கள் உங்களுடைய வேத போதனைகளையும் மற்றுமுள்ள ஒவ்வொரு காரியத்தையும் அவர்கள் பெற்றிருந்ததைப் போன்றே வெளியே கொண்டு வந்தீர்கள், அதிலிருந்து படிப்படியாக வெளியேறினீர்கள். ஆனால் இப்பொழுது நீங்கள் பெந்தெகொஸ்தேவிற்கு வந்தபோது, அந்தக் கோட்பாடுகளில் சிலவற்றை பரப்பினபோது, நீங்கள் இன்னமும் அவைகளைப் பற்றிக் கொண்டிருக்கிறீர்கள்.

220 ஆனால் இப்பொழுது மணவாட்டி- அழைப்பு, இப்பொழுது ஏழு முத்திரைகள் திறக்கப்பட்டு, இப்பொழுது சீர்திருத்தக்காரர் விட்டுச் சென்ற முழுமையான காரியங்கள் திறக்கப்பட வேண்டும்; மல்கியா 4 மாத்திரமே அதைச் செய்ய முடியும், ஏனென்றால் அவ்வாறு செய்வதற்கு தேவனிடத்திலிருந்து நேரடியாக வெளிப்படுத்துதல் தேவைப்படுகிறது. அது உண்மையே! அது ஒரு குழுவிற்கு வர முடியாது, ஒருபோதும் வந்ததில்லை. ஒரு மனிதன்! அதைத்தான் தேவன் தம்முடைய வருகையின் நிழலில் தம்முடைய மணவாட்டிக்கு ஒரு எலியேசரை வாக்குத்தத்தம் செய்தார். பார்த்தீர்களா?

221 குருமார்கள், போதகர்கள் போன்றவர்கள் தங்களுடைய சொந்த ஆவியின் ஏவுதலைப் பெற்று, உண்மையாகவே அபிஷேகிக்கப்பட்டதைக் கவனியுங்கள். தாவீது அபிஷேகம் பண்ணப்பட்டான். வேதம் அவ்வண்ணமாய் கூறியுள்ளது. ஆனால், நீங்கள் பாருங்கள், அவன் தவறான ஆதாரத்தினூடாகச் சென்றான், அவன் தவறான வழியில் சென்றான். **கர்த்தர் உரைக்கிறதாவது**, "இது இதற்கான நேரமா? இது இதற்கான பருவமா? இது தேவனுடைய சித்தமா?" என்று அறிந்துகொள்வதற்கான தேவனுடைய பரிசுத்த வழியைப் பயன்படுத்துவதற்குப் பதிலாக, அவன் தமது அபிஷேகத்தைத் தவறான வழியில், அதாவது மக்களுக்கும்

அவர்களின் எண்ணங்களுக்கும், தலைவர்களுக்கும் அவர்களின் எண்ணங்களுக்கும் செலுத்தினான்.

222 அப்படியானால் அவன் ஒரு உண்மையான தேவனுடைய தீர்க்கதரிசியாக இருந்தால், அவன் முதலில் தேவனுக்கு முன்பாகச் சென்று, “பிதாவே, அது என்ன?” என்று கேட்பான், நாத்தான் பிற்காலத்தில் தாவீதுக்கு செய்தது போல.

தாவீது, “நான் கேதுரு மரத்தினால் செய்யப்பட்ட வீட்டில் குடியிருக்க, என் தேவனுடைய உடன்படிக்கைப் பெட்டியை இங்கே கூடாரத்தின் கீழிருக்கிறது சரியா?” என்று கேட்டான்.

223 நாத்தானைப் பாருங்கள், “தாவீதே, உன் இருதயத்தில் உள்ள யாவையும் செய், ஏனென்றால் தேவன் உன்னோடு இருக்கிறார். நீர் தேவனுடைய அபிஷேகம் பண்ணப்பட்ட பாண்டமாயிருக்கிறாய்” என்றான்.

224 ஆனால் அது ஒரு தீர்க்கதரிசியாயிருந்தபடியால், அவனுடைய தவறு, தேவனுடைய கடமை அவருடைய தீர்க்கதரிசிக்குக் கட்டுப்பட்டது. அன்றிரவு அவர் அவனுக்குத் தரிசனமாகி, “என் தாசனாகிய தாவீதிடம் போய்ச் சொல், அவனுடைய தைரியத்தை நான் பாராட்டுகிறேன், இதற்காக நான் அவனை நேசிக்கிறேன், ஏனென்றால் அவன் என்னுடைய சொந்த இருதயத்திற்கு ஏற்ற ஒரு மனிதனாயிருக்கிறான், என்னுடைய உடன்படிக்கைப் பெட்டியானது அந்தவிதமாக இருக்கும்படியான நேரமாயுள்ளது என்பதை நான் அறிவேன். ஆனால் நான்...அது சம்பவிப்பதற்கான தருணம் இதுவல்ல. அவனுடைய மகன் அதைச் செய்ய நான் அனுமதிப்பேன். ஆனால் அவன் அதைச் செய்ய நான் அனுமதிக்கமாட்டேன்” என்றார்.

225 அதன்பின்னர் இங்கே நாத்தான், **“கர்த்தர் உரைக்கிறதாவது,** தாவீது, நீ பெற்றிருந்த அந்த மகத்தான வெளிப்பாடு நீ உடன்படிக்கை பெட்டியை மேலே கொண்டு வந்தபோது இருந்ததைப் போன்றே அவ்வளவு தவறானதாயுள்ளது” என்றான். (ஹூ-ஹூ! ஹூ-ஹூ! பார்த்தீர்களா?) “நீ அதைச் செய்யாதே. அதை முயற்சிக்க வேண்டாம்! ஆனால் தேவனோ, ‘உன்னுடைய மகன்தான் அதைச் செய்ய வேண்டும்’ என்று கூறினார்” என்றான். அங்கே! பார்த்தீர்களா? அங்குதான் காரியம்!

226 ஆபிரகாம் பூமியில் ஒரு நகரத்தைத் தேடியது போலவே, தாவீதும் அதை முன்னதாகவே காண முடிந்ததால், அதைச் சொல்ல அபிஷேகம் செய்யப்பட்டான். ஆபிரகாம், அந்த நகரத்தில் என்றோ ஒரு நாள் இங்கே ஜீவிக்கப்போகிறான் என்பதனால் அவன் அதற்காக எதிர்பார்த்துக் கொண்டிருந்தான் என்பதை நீங்கள் அறிவீர்கள். அவன் அதைத் தேடிச் சுற்றித்திரிந்தான். அவன் பார்த்த அதே இடத்தில், அப்பொழுது அது அவனுக்கு மேலே இருந்தது, அவன் ஆயிர வருட அரசாட்சியில்

திரும்பி வந்து அந்த நகரத்தில் வாழ்வான். ஆனால் அவன் ஒரு தீர்க்கதரிசியாயிருந்தபடியால், அவன் நியமிக்கப்பட்டு, ஏவப்பட்டிருந்தான், எங்கோ ஒரு நகரம் உண்டு என்பதை அவன் அறிந்திருந்தான், அவன் அதற்காக எதிர்நோக்கிக் கொண்டிருந்தான். ஆனால், நீங்கள் பாருங்கள், அதைக் குறித்த முழு வெளிப்பாடும் அவனுக்கு மறைக்கப்பட்டிருந்தது. அது அவனுடைய காலத்துக்கானதாயிருக்கவில்லை. [ஒலிநாடாவில் காலியிடம்—ஆசி.]…வானத்திலிருந்து அது தேவனிடத்திலிருந்து இறங்கி வருகிறதை யோவான் கண்டான். அதுதான் நகரமாயிருந்தது.

227 பாருங்கள், ஒவ்வொரு காரியமும் அதனதன் காலத்தில் இருக்க வேண்டும். நீங்கள் உங்களுடைய கோதுமையை வசந்த காலத்தில் பயிரிட்டு…இல்லை இலையுதிர் காலத்தில் விதைத்து, அதை அடுத்த கோடை காலத்தில் அறுக்கிறீர்கள். பார்த்தீர்களா? அது தண்டின் வழியாக மேலே வந்து, அதன்பின்னர் பட்டுக் குஞ்சத்தினூடாக மேலே வந்து, பதருக்குள்ளாக வந்து…அது பருவ காலத்தில் இருக்க வேண்டும். எல்லா இயற்கையும் தொடர்ச்சியாக இயங்குகிறது. தேவனுடைய ஆவி இயற்கையை உண்டுபண்ணியது, தேவனும் இயற்கையும் யாவும் தொடர்ச்சியாக உள்ளன. தேவாலயத்தில் வைக்கப்பட்டிருந்த எல்லாக் காரியங்களுமே அவன் பரலோகத்தில் கண்டதற்கு முன்னடையாளமாயிருந்தன.

228 ஒரு மரம் போராடி ஜீவிக்க முயற்சிப்பதை நீங்கள் காண்கிறீர்கள், அது இறக்காத ஒரு மரம் உண்டு என்று பொருள்படுகிறது. ஒரு மனிதன் உயிருக்குப் போராடிக் கொண்டிருப்பதை நீங்கள் காண்கிறீர்கள், அது எங்கோ மரிக்காத ஒரு கூடாரம் காத்துக் கொண்டிருக்கிறது என்பதையே காண்பிக்கிறது. “இந்த பூமிக்குரிய கூடாரம் அழிந்து போனாலும், நமக்கு ஏற்கனவே ஒன்று காத்திருக்கிறது.” நல்ல பரலோகப் பிதா ஒரு நாள் அந்தத் திரைக்குப் பின்னால் நடந்து சென்று அதைக் காணும்படி என்னை அனுமதித்தார். எத்தனை பேர் அதைக் கேட்டீர்கள்…?… பார்த்தீர்களா? காலத்தின் திரைக்கு அப்பால் நோக்கிப் பார்க்கிறேன். நான் உங்கள் யாவருக்கும் பிரசங்கித்துக் கொண்டிருப்பது போன்றே அங்கே அது இருந்தது, அவர்கள் அங்கே நின்றனர். பலிபீடத்தின் கீழுள்ள ஆத்துமாக்கள், “எவ்வளவு காலம்?” என்று கதறுகின்றன. வெறும் கட்டுக்கதையல்ல, புத்திசாலித்தனம் கொண்ட யாரோ ஒருவர்: “கர்த்தாவே, எதுவரைக்கும்?” பார்த்தீர்களா? தொண்ணூற்று மூன்று வயதில் அமர்ந்துள்ள சகோதரன் பில் டௌவைப் போன்றே, நாம் அதை இப்பொழுது நம்முடைய வயதில் உணருகிறோம். அந்த வாலிபனுக்காக மீண்டும் ஏதோ ஏக்கம் உள்ளது. ஏதோ ஒன்று…நீங்கள் எதையும் கொடுப்பீர்கள். எப்படியாய் நான் இருக்க விரும்புகிறேன். சகோதரன் ஜேக், மற்றும் நாம் எல்லோருமே. சகோதரன் ஹியர்ஹோல்ஸர், இங்கே அந்த வாலிப பருவத்திற்குள் திரும்பிச் செல்லுங்கள். நாம் எதற்காக

அதைச் செய்ய விரும்புகிறோம்? வாலிபமாயிருந்து மீண்டும் சுற்றித் திரிவதா? இல்லை, ஐயா! ஏனென்றால் நாங்கள் நேசிக்கிற இந்தத் தேவனை மகிமைப்படுத்த நமக்கு அதிக நேரம் இருக்கும் என்று நாங்கள் உணருகிறோம்.

229 என்னுடைய அருமை சகோதரர்களே, நான் இந்தக் காலையில் இந்தச் செய்தியை வைத்திருக்கிறேன், நதிக்கு அப்பால் உள்ள ஒரு தேசத்தை அவர்கள் என்றென்றும் இனிமையானதாக அழைக்கிறார்கள். அங்கே நாம் அவரைக் காலங்களிலும், எல்லா காலங்களிலும், நித்தியத்திலும் மகிமைப்படுத்துவோம். நாம் ஏன் அதை உணருகிறோம்? ஏனென்றால் ஆழமானது ஆழத்தை நோக்கிக் கூப்பிடுகிறது. ஆழத்தின் அழைப்பு இருக்கும் வரை, அந்த அழைப்பிற்கு பதிலளிக்க ஒரு ஆழமான இடம் இருக்க வேண்டும், இல்லையென்றால் அழைப்பு இருக்காது. ஒரு சிருஷ்டிப்பு உண்டாவதற்கு முன்பு, சிருஷ்டிப்பை சிருஷ்டிக்க முதலில் ஒரு சிருஷ்டிகர் இருக்க வேண்டும், இல்லையேல்...அது இருக்கிறது என்பதற்கு அத்தாட்சியைக் காண்பிக்கிறது.

230 இந்த ஆசாரியர்களைக் கவனியுங்கள், அனைவரும் ஒழுங்கில் இல்லை. அபிஷேகத்தைக் கவனியுங்கள், சரி, அபிஷேகத்தில் தவறொன்றுமில்லை. பெந்தேகோஸ்தேயினராகிய உங்களுக்கும் அவ்வாறேயுள்ளது, ஆனால் நீங்கள் இப்பொழுது எந்தப் பாதையில் சென்று கொண்டிருக்கிறீர்கள் என்பதைக் கவனியுங்கள். பெந்தெகொஸ்தே முதற்கொண்டு இந்நாள் மாறிவிட்டது, வேறு ஏதோ காரியம் நடந்து கொண்டிருக்கிறது. தேசத்தில் ஒரு தீர்க்கதரிசியே இல்லாமலிருந்தால், ஒரு வேளை தாவீது சரியாக இருந்திருப்பான். அது உண்மை. ஆனால் நாத்தான் ஒரு தீர்க்கதரிசியாயிருக்க தேவனால் சாட்சி பகர்ந்து, ரூபகாரப்படுத்தப்பட்டு, நியமிக்கப்பட்டவன்.

231 கவனியுங்கள்! வேதாகமத்தில் உள்ள உடன்படிக்கைப் பெட்டியானது எப்பொழுதுமே நமக்கு வார்த்தைக்கு ஒரு மாதிரியாக உள்ளது, ஏனென்றால் அது உடன்படிக்கை பெட்டியில் இருந்தது தேவனுடைய வார்த்தையாயிருந்தது. மேலும்...அவர்கள் உடன்படிக்கை பெட்டியைக் கொண்டு வந்தனர் என்பதைக் கவனியுங்கள், அவர்கள் அதை எப்படி செய்தனர் என்று பாருங்கள். அது தேவனால் நியமிக்கப்பட்டிருந்த அதனுடைய மூல நிலையில் வைக்கப்படவில்லை. இப்போது, தேவன் இங்கே நியாயப்பிரமாணத்தில்...அது எப்படிச் செய்யப்பட வேண்டும் என்றும், இந்த உடன்படிக்கைப் பெட்டியை எப்படி நகர்த்த வேண்டும் என்றும், அதை யார் நகர்த்த வேண்டும் என்றும் சொல்லியிருக்கிறார். ஆனால் தாவீதோ, தன்னுடைய அபிஷேகத்தின் கீழ்...

232 என் சகோதரனே, இதை நீங்கள் தவறவிடாதீர்கள். என் சகோதரிகளே, பெண் பிரசங்கிமார்களாக அது போன்றிருக்க விரும்புகிறவர்களே, நீங்கள் இதைத் தவறவிடாதீர்கள்.

உங்களுடைய அபிஷேகம் எவ்வளவுதான் இருந்தாலும், நீங்கள் தேவனால் அருளப்பட்ட ஸ்தானத்தை அடைய வேண்டும். தாவீதின் அபிஷேகம் சரியாயிருந்தது, ஆனால் அதைச் செய்வதில் அவன் உற்சாகமடைந்து, எல்லைக் கோட்டைத் தாண்டிவிட்டான். அவன் என்ன செய்தான்? அவன் எல்லைக் கோட்டைத் தாண்டிச் சென்றான். உடன்படிக்கைப் பெட்டியை அதன் அசல் இடத்தில் வைப்பதற்குப் பதிலாக, அவன் அதை ஒரு புதிய வண்டியில் ஏற்றிச் சென்றான்; லேவியர்களின் இருதயங்கள் மீது சுமக்கச் செய்யாமல் கொண்டு சென்றான். அது இருதயத்தின் மேல் உள்ள லேவியர்களின் தோள்பட்டையில் சுமந்து செல்ல வேண்டியதாயிருந்தது. வார்த்தை சிந்தையில் இல்லை, அது இருதயத்தில் உள்ளது! “ஒரு புதிய வண்டியில் அல்ல.” அது என்னவாயிருந்தது? சில…புதுமையான ஏதோ ஒரு காரியத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி, தாவீது அங்கிருந்த ஒவ்வொரு ஸ்தாபனத்தையும் குறித்து பேசினான். தேவனுடைய வார்த்தையானது…ஸ்தாபனப் பிரிவுகளைச் சேர்ந்த மாநில மூப்பர்கள் அல்லது பேராயர்கள் போன்றவர்களால் கொண்டு செல்லப்பட வேண்டியதல்ல. அது மனிதனுடைய இருதயத்தில் பரிசுத்த ஆவியின் அபிஷேகமாயுள்ளது, ஏதோ ஒரு மத சம்பந்தமான இயக்கத்தில் அல்ல. பரிசுத்த ஆவியானவர் புருஷர்களும், ஸ்திரீகளும் கீழ்ப்படியும்படியான தேவனுடைய அன்பின் பொக்கிஷமாக இருக்கிறார். பார்த்தீர்களா?

233 அவருடைய ஊழியக்காரர்களின் தோள்களின் மேல் இருந்தது, அவருடைய ஊழியர்கள் லேவியர்கள். அதைத் தங்களுடைய இடது தோளில் வைத்து, அந்தப் உடன்படிக்கைப் பெட்டியை இந்தவிதமாகச் சுமந்தனர், ஏனென்றால் அது அவர்களுடைய இருதயத்தின் மேல் இருந்தது. அவர்கள் தங்களுடைய இருதயத்தில் வார்த்தையின் பாரத்தை உடையவர்களாயிருந்தனர். ஆமென்! இப்பொழுது நீங்கள் உங்களுடைய ஸ்தாபனத்தின் பாரத்தை உங்களுடைய இருதயத்தின் மேல் வைத்திருக்கின்றீர்கள், உங்களுடைய சபையின் பாரத்தைப் பெற்றுள்ளீர்கள்: நீங்கள் *இதைக்* கட்டப் போகிறீர்களா அல்லது *அதைச்* செய்யப் போகிறீர்களா அல்லது வேறு ஏதாவது ஒன்றைச் செய்யப் போகிறீர்களா. மக்கள் தேவனுடைய வார்த்தையை மட்டுமே காண்பார்கள், வேறெதையும் காணமாட்டார்கள் என்ற கர்த்தருடைய வார்த்தையின் பாரத்திற்குப் பதிலாக, உங்கள் சபைக்கு இன்னும் எத்தனை பேரைச் சேர்க்கப் போகிறீர்கள் என்ற பாரத்தைச் சுமக்கிறீர்கள். ஆனால் நீங்கள் அதை இப்பொழுது ஒரு புதிய வண்டியில் ஏற்றிவிட்டீர்கள். பார்த்தீர்களா? அவர்கள் அதை இங்கே உலக ஆலோசனை சங்கத்திலும் கூடத் தோளில் சுமந்து கொண்டு வருகின்றனர். நான் குற்றப்படுத்த விரும்பவில்லை, இப்பொழுது தேவன் எனக்கு உதவி செய்வாராக. நான் உங்களுக்குச் சத்தியத்தை மாத்திரம் கூறுகிறேன்.

234 இப்பொழுது, கோட்பாடுகளினாலும், உலக ஆலோசனை

சங்கங்களினாலும் பாதிக்கப்பட்டு, அந்த வார்த்தை, அந்தக் காலத்தின் உண்மையான வார்த்தை புறக்கணிக்கப்பட்டது, ஏனென்றால் அவர்கள் ஏராளமான உணர்ச்சிவசப்படுதலை உடையவர்களாயிருந்தனர். ஆனால் தாவீது, அபிஷேகம் பண்ணப்பட்ட ராஜா...அவன் இராஜாவாயிருந்தான், ஆனால் அவன் அபிஷேகம் பண்ணப்பட்ட *இராஜாவாயிருந்தான்.* நீங்களோ, "நான் ஒரு ஊழியக்காரன், அபிஷேகம் பண்ணப்பட்டவன்" என்று கூறலாம். அப்படியானால் ஒரு ஊழியக்காரனாக நிலைத்திருங்கள், ஒரு தீர்க்கதரிசியாக இருக்க முயற்சிக்காதீர்கள். பார்த்தீர்களா? நீங்கள் சுவிசேஷகராயிருந்தால், சுவிசேஷகராகவே இருங்கள்.

235 ஏசாயாவின் நாட்களில், வாலிப ராஜாவாகிய வாலிப தீர்க்கதரிசியாகிய...உசியாவை நினைத்துப் பாருங்கள். உசியா ஒரு மகத்தான மனிதன், அபிஷேகம் பண்ணப்பட்ட மனிதன், தேவன் அவனை ஆசீர்வதித்தார்; அவன்தானே ஆசீர்வதிக்கப்பட்டவன். ஆம், நான் இங்கே ஒரு சமயம் அதன் பேரில் பிரசங்கித்தேன். ஒரு நாள் அவன் மிகவும் உயர்ந்த நிலையை அடைந்து, அவன் ஒரு ஆசாரிய உத்தியோகத்தை எடுத்துக் கொள்ளலாம் என்று எண்ணி, அவன் அக்கினியை எடுத்துக்கொண்டு கர்த்தருக்கு முன்பாகப் சென்றான். மேலும்...அந்த ஆசாரியர்கள் அவனிடத்தில், "உசியா, அதைச் செய்யாதே!" என்று கூறினர். ஆனால் அவன் மேட்டிமை கொண்டான். தீர்க்கதரிசியால் அவனுக்கு ஒன்றையும் கூற முடியவில்லை. ஆசாரியர்கள் அவர்களுடைய ஒழுங்கை அறிந்திருந்தனர், அவர்கள் தங்களுடைய ஒழுங்கைக் காத்துக்கொண்டிருந்தனர், அவர்கள், "உசியாவே, அது உன்னுடைய கட்டளையல்ல. அதைச் செய்யாதே!" என்றனர்.

236 பாருங்கள், அவன் அவர்களை "வாயை மூடு" என்றான். அவன் ஒரு ஆசாரிய வேலையை ஏற்று, பலி செலுத்த அக்கினியோடு உள்ளே சென்றான்; அவன் அபிஷேகம் பண்ணப்பட்ட ராஜாவாயிருந்தான், ஒரு ஆசாரியனாயிருக்கவில்லை. அப்பொழுது அந்த ஆசாரியர்கள் அவனிடம், "நீர் ஒரு அற்புதமான இராஜா, நீர் அபிஷேகம் பண்ணப்பட்டவர், உம்மைக் கொண்டு தேவன் எங்களை ஆசீர்வதித்திருக்கிறார். ஆனால் நீயோ ஒரு இராஜா, ஒரு ஆசாரியன் அல்ல" என்று சொல்ல முயற்சித்துக் கொண்டிருந்தனர்.

237 ஒரு தீர்க்கதரிசி என்ன செய்ய வேண்டுமென்று போதகர்களாகிய நீங்கள் ஒருபோதும் கூறக் கூடாது அல்லது சுவிசேஷகர்களாகிய நீங்கள் ஒரு போதகரிடம் கூறக் கூடாது. பாருங்கள், ஒவ்வொருவருக்கும் அவரவருக்கான உத்தியோகம் பரிபூரணமாக அடையாளம் காணப்பட்டிருந்தது.

238 எனவே அவன் அக்கினியோடு உள்ளே சென்று, குஷ்டரோகத்தால் பிடிக்கப்பட்டு மரித்துப்போனான்.

239 இப்பொழுது இங்கே தாவீது ராஜா இருக்கிறான். தாவீது இங்கே அதேக் காரியத்தைச் செய்ய முயற்சிக்கிறான். அவன் அதைத் தன்

மேல் ஏற்றுக்கொண்டான். “பாருங்கள், அது அருமையாயுள்ளது, அது போக வேண்டும்.” ஜனங்களைச் சுற்றும் முற்றும் பார்த்து, “சேனாதிபதியே, நீர் என்ன கூறுகிறீர்? உன்னிடம் பத்தாயிரம் பேர் இருக்கிறார்கள்” என்றான்.

240 “தேவனுக்கு மகிமை, தாவீது, நான் ஆவியை உணருகிறேன்.” ஓ, அவன் செய்தான்! அவன் அதை உணர்ந்தான். “தாவீது, நீ என்ன நினைக்கிறாய்? நீ அதை உணர்கிறாயா?”

241 “தேவனுக்கு மகிமை, அது முழுவதும் என்மேல் உள்ளது! நாம் அதைச் சரிபார்த்து, அது சரியா என்று பார்ப்போம், நாம் பார்ப்போம். அந்த உடன்படிக்கை பெட்டி யாருக்கு சொந்தமானது?” என்று கேட்டான்.

242 “எங்களோடு! நம்மிடையே இருக்க வேண்டியது.”

243 “நாம் யாரிடத்தில் கலந்தாலோசிக்க வேண்டும்? நிச்சயமாக, உடன்படிக்கை பெட்டி.” அந்த நிலம் முன்பு பெலிஸ்தர்களுக்குச் சொந்தமாக இல்லாமல், இஸ்ரவேலர்களுக்குச் சொந்தமாக இருந்தது போலவேதான் இதுவும். அது உண்மை, அவர்கள் அதைச் சேர்ந்தவர்கள். “நானும் கூட அபிஷேகத்தை உணருகிறேன்.”

244 நூறுபேருக்கு தலைவர்களும், சபையார் அனைவரும், “தேவனுக்கே மகிமை!” என்றனர். அவர்கள் கைதட்டி, அவர்கள் கூச்சலிட்டு, அவர்கள் நடனமாடி, மேலும் கீழுமாகக் குதித்தனர்.

245 அவர்கள் ஆவியை உடையவர்களாயிருந்தனர், ஆனால் பிதாவானவர் என்ன நினைத்துக்கொண்டிருந்தார் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்? “நான் எப்படியாய் நாத்தானை, அந்தத் தீர்க்கதரிசியை அங்கே அனுப்பியிருக்கிறேன்! அவர்கள் என்ன செய்ய வேண்டும் என்று அவர்களுக்குத் தெரியும், தாவீதுக்கும் தெரியும், ஆனால் இப்பொழுதோ அவன் முழு உற்சாகத்தோடு தன்னுடைய எல்லைக் கோட்டைத் தாண்டி வந்து *இதைச்* செய்யச் சென்றிருக்கிறான்.”

246 சரி, கவனியுங்கள், “அதைத் தோள்களின் மேல் சுமந்து செல்லுங்கள்” என்பது தேவனுடைய மூல திட்டமாயிருந்தது. ஐந்து *கட்டாயங்கள்* உண்டு. நீங்கள் இவைகளைக் குறித்துக்கொள்ள நான் விரும்புகிறேன், நீங்கள்…நீங்கள் எழுதிக்கொண்டிருப்பதை நான் காண்கிறேன்.

மேலும் இப்போது பத்து மணிக்கு இருபது நிமிடங்கள் ஆகிறது, எனவே கூடுமானால் பதினொரு மணிக்குள்ளாக நான் கூற முயற்சிப்பேன். என்னால் முடிந்தளவு துரிதமாக முடிக்கவுள்ளேன்.

தேவனுக்கு ஒரு சேவை செய்வதில் ஒரு மனிதன் எவ்வளவு உத்தமமாய் இருந்தாலும் அது ஒரு பொருட்டல்ல; எவ்வளவு உத்தமமாயிருந்தாலும், எவ்வளவு அபிஷேகம் பண்ணப்பட்டிருந்தாலும், எவ்வளவுதான் ஒரு பிரஸ்பிடேரியன்,

பாப்டிஸ்டு, பெந்தேகோஸ்தேவாக இருந்தாலும் அது ஒரு பொருட்டல்ல; நீங்கள் ஒரு பேராயராகவோ, உதவிக்காரராகவோ, நீங்கள் என்னவாயிருந்தாலும், மேய்ப்பனாக, சுவிசேஷகராக, தீர்க்கதரிசியாக, அது என்னவாயிருந்தாலும், அது ஒரு பொருட்டல்ல; முதலில் கவனிக்கப்பட வேண்டிய ஐந்து கட்டாயங்கள் உள்ளன. எவ்வளவுதான் அபிஷேகம் இருந்தாலும், அது எவ்வளவு நன்றாகத் தென்பட்டாலும், ஜனங்கள் எப்படி சத்தமிட்டாலும் அது ஒரு பொருட்டல்ல, ஆவியானவர் செய்கிற ஒவ்வொரு காரியத்திலும் ஒரு *கட்டாயம்* உண்டு.

247 இப்பொழுது, என் சகோதரர்களே, நீங்கள் உங்களுடைய காகிதத்தை ஆயத்தப்படுத்திக் கொண்டிருக்கையில், ஏன் என்று இப்பொழுது உங்களால் புரிந்துகொள்ள முடிகிறதா? இப்பொழுது நினைவிருக்கட்டும், நீங்கள் யாவரும் சிந்தித்து, உங்கள் மத்தியில் போதிக்கப்பட்டு, அல்ல…(பாருங்கள், நான் தேசம் முழுவதும் பேசிக் கொண்டிருக்கிறேன்)…அதாவது அந்நிய பாஷைகளில் பேசுவதில் எனக்கு நம்பிக்கையில்லை என்று. நான் அந்நிய பாஷைகளில் பேசுவதை விசுவாசிக்கிறேன், ஆனால் நீங்கள் பரிசுத்த ஆவியைப் பெறாமலேயே அந்நிய பாஷையில் பேச முடியும். I கொரிந்தியர் 13, “நான் மனுஷர் பாஷைகளையும் தூதர் பாஷைகளையும் பேசினாலும், நான் இன்னும் ஒன்றுமற்றவனாயிருக்கிறேன்” என்று கூறுகிறது. பார்த்தீர்களா? அது பரிசுத்த ஆவியின் அபிஷேகமாயிருக்கிறது, அது உங்களுக்குள்ளாக இருக்கிற ஆத்துமாவுடன் எந்தச் சம்மந்தமுமில்லை. நீங்கள் அந்நிய பாஷைகளில் பேசி வார்த்தையை மறுதலிக்க முடியும். அது செய்யப்பட்டதை நான் கண்டிருக்கிறேன், நீங்களும் கூட அதைக் காண்கிறீர்கள். பார்த்தீர்களா? ஒரு பெண் சுவிசேஷத்தை பிரசங்கிக்க முடியும்…புரிகிறதா? அவர்களால் எல்லாவற்றையும் செய்ய முடியும்…அவர்கள் தங்களுடைய தலைமுடியைக் கத்தரித்துக் கொண்டாலும், இன்னமும் சத்தமிட்டுக் கொண்டும், அந்நிய பாஷையில் பேசுகிறார்கள், இன்னும் மற்ற ஒவ்வொரு காரியத்தையும் செய்கிறார்கள். ஹூ-ஹூ, அது முற்றிலும் உண்மை. நீங்கள் வார்த்தையின் சத்தியத்தோடு இணைய வேண்டும்.

248 கவனியுங்கள்! ஒரு மனிதன் எவ்வளவு உத்தமமாயிருந்தாலும், அவன் எவ்வளவு மகத்தாகத் தேவனால் பயன்படுத்தப்பட்டாலும் அது ஒரு பொருட்டல்ல, அவன் என்னவாயிருந்தாலும் அது ஒரு பொருட்டல்ல, அவன் இப்படியிருக்க வேண்டும்: இருக்க வேண்டும்…அவன் பேசிக்கொண்டிருக்கிற காரியம் சரியான நேரத்தில் வேதம் கூறுகிறதாயிருக்க வேண்டும். யாரோ ஒருவர், “பாருங்கள், அங்கே முன்பிருந்த மோசே” என்று கூறலாம். மோசே என்ன செய்தான் என்பதை நான் அறிவேன், ஆனால் இன்றைக்கு தேவன் செய்து கொண்டிருப்பது அதுவல்ல. “சரி, முப்பது ஆண்டுகளுக்கு முன்பு, லூத்தர் கூறினார்…” அது

அருமையாயிருக்கலாம், ஆனால் இன்றைக்கு அவர் செய்து கொண்டிருப்பது அதுவல்ல. “சரி, நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு, பெந்தேகோஸ்தே விழுந்தது.” ஆனால் இன்றைக்கு அவர் செய்து கொண்டிருப்பது அதுவல்ல. பார்த்தீர்களா? அது சரியான நேரத்தில் இருக்க வேண்டும்.

249 அது வேதத்தின்படி இருக்க வேண்டும். அது இரண்டாவது, பருவகாலமாக இருக்க வேண்டும். மூன்றாவதாக, அது தேவனுடைய வார்த்தை உரைத்த விதத்தின்படியே இருக்க வேண்டும்.

250 நீங்களோ, “தேவனுக்கு மகிமை! பெந்தெகொஸ்தே நாளில் செய்தது போலவே, பரிசுத்த ஆவியானவர் என்மேல் இறங்கினார், அல்லேலூயா” என்று கூறுகிறீர்கள். ஆனால் அது இன்றைக்கு வித்தியாசமாயிருக்கலாம். அது தாவீதின் மேலும் இறங்கினது, அது இறங்கவில்லையா? நிச்சயமாக, அது இறங்கினது. உசியாவின் மேல் இறங்கினது, ஆனால் அது தவறாயிருந்தது! பாருங்கள், நீங்கள் இப்பொழுது அதைக் காட்டிலும் ஆழமாகச் செல்ல வேண்டும். பார்த்தீர்களா? நீங்கள் அதைக் காட்டிலும் ஆழமாகச் செல்ல வேண்டும். இப்பொழுது, புண்படுவதை உணர வேண்டாம், பயபக்தியாயிருங்கள்.

251 கவனியுங்கள், அது தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட மனிதனுக்கும் கூட வர வேண்டும். ஒரு ஸ்தாபன தெரிந்துகொள்ளுதல் அல்ல, ஜனங்களின் தெரிந்துகொள்ளுதல் அல்ல, ஆனால் தேவனுடைய தெரிந்துகொள்ளுதலின்படியே. அது தேவனிடத்திலிருந்து வந்த ஒரு மகத்தான வெளிப்பாட்டின் செய்தியாயிருந்தால், அது அவருடைய தீர்க்கதரிசிக்கு வர வேண்டும். இப்பொழுது, உங்களுக்கு அதைக் குறித்த வேதவாக்கியம் வேண்டுமானால், அது ஆமோஸ் 3:7-ல் உள்ளது. பார்த்தீர்களா? இப்பொழுது, அது அவசியம்.

252 அது இருக்க வேண்டிய ஐந்து காரியங்கள் உள்ளன: அது பருவ காலத்தில் இருக்க வேண்டும். அது நடக்கும் என்று தேவன் கூறியிருந்த நேரத்தில் அது இருக்க வேண்டும். அது தேவனுடைய வார்த்தையில் எழுதப்பட வேண்டும். அது தேவனுடைய காலத்தில் இருக்க வேண்டும், பாருங்கள். அது தேவனுடைய தெரிந்து கொள்ளுதலினால் இருக்க வேண்டும்.

253 அவருடைய வார்த்தையை வியாக்கியானிக்க தேவனுக்கு நாம் யாரும் தேவையில்லை, தேவன் தம்முடைய சொந்த வியாக்கியானி. அவருக்கு நம்முடைய வேதபாட கருத்தரங்குகள் தேவையில்லை. அவருக்கு நம்முடைய ஞானம் தேவையில்லை, அது அர்த்தமற்றது. புரிகிறதா? ஏவாள் அதைப் பெற்றிருந்தாள், ஹு-ஹூ, தன்னுடைய ஞானத்தினால் வியாக்கியானத்தை தவறவிட்டாள்.

254 “ஓ, பையனே, அந்தப் ஆள் ஒரு புத்திசாலியான மனிதன்” என்று கூறலாம். பாருங்கள், அது ஒரு காரியத்தையும்

பொருட்படுத்துகிறதில்லை. நிச்சயமாக. ஆகாப் ஒரு புத்திசாலியான மனிதனாயிருந்தான். பெல்தெஷாத்சார் ஒரு புத்திசாலி மனிதன். சாத்தான் மிகவும் தந்திரமுள்ளவனாகவும், கொடூரமானவனாகவும், தந்திரமுள்ளவனாகவும் இருந்தான், உங்களில் எவருமே அவனை எதிர்த்து நிற்க முடியாது, ஒருவருமே இல்லை.

255 நான்...யாரிலும் சார்ந்திருக்கவில்லை...ஞானம் அல்ல, தேவன் பேரில் சார்ந்திருக்கிறேன். பார்த்தீர்களா? தேவன் எப்படி இருக்கிறார்? அவரே வார்த்தையாயிருக்கிறார். அப்படியானால் தேவன் தம்முடைய சொந்த வார்த்தையை எப்படி வியாக்கியானிக்கிறார்? இப்பொழுது கூர்ந்து கவனியுங்கள், இந்தக் காரியங்களைத் தவறவிடாதீர்கள். தேவன் தம்முடைய சொந்த வார்த்தையை எப்படி வியாக்கியானிக்கிறார்? இங்கே *ஒன்றை* மாத்திரமல்ல, ஆனால் அந்தப் பருவத்திற்கான அவை *யாவற்றையும்* நிறைவேற்றுவதன் மூலமேயாகும்.

256 "நோவா வெளியே சென்று பிரசங்கம் செய், நீ ஏவப்பட்டிருக்கிறாய்" என்று கூறவில்லை. ஆனால், "ஒரு பேழையைக் கட்டி, அதில் கதவுகளைப் வைத்து, அதை *இந்த* விதமாகவும், *அந்த* விதமாகவும் பொருத்து" என்று கூறப்பட்டுள்ளது. அவன் கதவைக் கீழே வைப்பதற்கு பதிலாக மேலே வைத்தால் என்னவாகும்? அவன் ஜன்னலைக் கீழேயும், கதவை மேலேயும் வைத்தால் என்னவாகும்? பார்த்தீர்களா? அது நேரத்தின்படி போதிக்கப்பட வேண்டும், ஏனென்றால் தேவன் அதைச் சரியாக உபயோகிக்கப் போகிறார். அது அந்தவிதமாக இருக்க வேண்டும், அது ஆவியின் ஏவுதலினால் வர வேண்டும்.

257 ஒருமுறை ஒருவன் சொன்னதைக் கேட்டேன், "ஒருவர் நோயாளிகளுக்காகப் ஜெபிக்கிறான் என்பதை நான் நம்புகிறேன், அது அருமையானது தான் என்று நான் நம்புகிறேன். ஆனால் ஒரு தீர்க்கதரிசியாயிருக்கிறபடியால்," என்று கூறி, "அவர் தேவனுடைய தீர்க்கதரிசி என்று நான் நினைக்கிறேன்; ஆனால் ஒரு போதகராக, ஏன், அவர் ஒரு 'இயேசு மாத்திரமே'" என்று கூறினான். என்ன ஒரு... அவனை நீங்கள் எப்படிப்பட்ட ஒரு நபர் என்று அழைப்பீர்கள்? ஒரு மனிதன் எதைக் குறித்து பேசிக்கொண்டிருக்கிறான் என்பதை அவன் அறியாதிருக்கிறான்.

258 *தீர்க்கதரிசி* என்ற வார்த்தையே, "அவன் தேவனுடைய வார்த்தையை வெளிப்படுத்துகிறவன்" என்று பொருள்படுகிறது. அதற்கு வியாக்கியானம் மாத்திரமே வருகிறது. அதனால்தான் இன்று, எலியா தீர்க்கதரிசியின் வடிவில் நமக்கு அனுப்பப்படவிருக்கும் அந்த மாபெரும் நபரின் தேவை நமக்கு மிகவும் அதிகமாக இருக்கிறது, ஏனெனில், அது தேவன் வாக்களித்த நாளும், நேரமும், காலமும் இதுதான் என்பதை நிரூபித்து, நமக்கு வெளிப்படுத்தப்படும் தேவனுடைய வெளிப்பாடாக இருக்கும். அவனுக்கு விரோதமாகப் பேசப்படும் என்பதை நினைவில்

கொள்ளுங்கள், எப்பொழுதும் இருந்து வந்துள்ளது, எப்பொழுதும் அவ்வாறே இருக்கும். புறக்கணிக்கப்பட்டது, பதர் இழுப்பது போல...முதலில் அவன் ஏற்றுக் கொள்ளப்படுவான், ஏனென்றால் பதரானது கோதுமையை சூரியனை நோக்கிச் செல்லும் வரையில் மாத்திரமே பிடித்து வைத்திருக்கிறது. பெந்தேகோஸ்தே செய்தியை மாத்திரமே அடைக்கலமாக்கி, அது சிதறிப்போகும் வரைக்கும், அதற்கு ஒரு திறந்த வாசலைக் கொடுக்கும், அப்பொழுதே பதர் நீக்கப்பட்டு, கோதுமை குமாரனின் சமூகத்தில் முதிர்ச்சியடையும், பாருங்கள்.

259 அங்கே எந்த ஸ்தாபனமும் இருக்காது என்பதை நினைவில் கொள்ளுங்கள். இங்குள்ள சகோதரன் ஜேக் ஒரு சரித்திர ஆசிரியர், இங்குள்ள உங்களில் அநேகருமே. அங்கே ஒருபோதும் ஒரு எழுப்புதல் இருந்ததேயில்லை, ஆனால் எழுப்புதல் முடிந்து ஏறக்குறைய மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு அவர்கள் அதன்பேரில் ஒரு ஸ்தாபனம் உண்டாக்கிக் கொண்டனர். அது சரியா? இந்தக் கடைசி நாட்களில் தேவனுடைய இந்தக் கடைசி மகத்தான அற்புத அசைவு, அது இருபது ஆண்டுகள் ஆகிவிட்டன; அது ஒரு ஸ்தாபனத்திலிருந்து கோடிக்கணக்கான மைல்கள் தூரத்தில் உள்ளது, எல்லா நேரத்திலும் அதிக தூரம் விலகிச் சென்று; பதர் விலகிச் செல்கிறது, எந்த ஒத்துழைப்பும் இல்லை, அதனோடு ஒன்றுமே இல்லை. பார்த்தீர்களா? அது எப்போதும் அதனிடமிருந்து விலகிச் செல்கிறது. இனி எதுவும் இருக்க முடியாது, அது இப்போது ஒரு கோதுமை. ஆனால் நாம் மிகவும் பசுமையாக இருக்கிறோம். ஹூ-ஹூ. அது சரிதான். மென்மையடைய வேண்டுமென்றால் குமாரனின் பிரசன்னத்தில் தங்கியிருக்க வேண்டும், அவ்வளவுதான். பசுமை நிறைந்துள்ளது; ஆனால் நமக்கு மத்தியில் இருக்க வேண்டிய நேர்மை, புனிதத்தன்மை ஆகியவை நம்மிடம் இல்லை, ஜீவனுள்ள தேவனுடைய ஆவியானவர் தம்முடைய வார்த்தையில் அசைவாடி, அதே சமயத்தில் காரியங்களை நமக்குக் காண்பித்துக் கொண்டிருக்கிறார் என்பதை அறிந்துகொள்ளும்படியாகவே உள்ளது.

260 போலியான பாவனை செய்பவர்கள் எழும்பினர். அதன் நோக்கம் என்ன? வஞ்சிக்க. அவர்கள் அவ்வாறு செய்வார்கள் என்று வேதம் கூறியுள்ளது. “யந்நேயும் யம்பிரேயும் மோசேக்கு எதிர்த்து நின்றதுபோல, இவர்களும் கடைசி நாட்களில் எதிர்த்து நிற்பார்கள்.” பார்த்தீர்களா? அவர்களும் அதேக் காரியத்தைச் செய்து, சரியாக, அப்படியே ஆள்மாறாட்டம் செய்கிறார்கள். பார்த்தீர்களா? கவனமாக இருங்கள்! வேதாகமத்தின் உபதேசத்தைக் கவனியுங்கள். அந்த அடையாளங்களைப் பின் தொடரும் செய்தியைக் கவனியுங்கள்! இப்பொழுதும் அதே பழைய செய்திப் உள்ளதா? அதை மறந்துவிடுங்கள்!

261 தேவன் தம்முடைய ஜனங்களின் கவனத்தை கவர்ந்திழுக்க

அற்புதங்களையும் அடையாளங்களையும் அனுப்பினார். இயேசு வந்தபோது நோயாளிகளைக் குணமாக்குவது போன்ற காரியங்களைச் செய்தார், அவ்வாறே தீர்க்கதரிசிகளும் செய்தார்கள். அவர்கள், “ஓ, மகிமை, அவர் வருகிறார், அவர் ஒரு பரிசேயனாக இருக்கப்போகிறார். அவர் ஒரு சதுசேயனாக இருக்கப் போகிறார்” என்று எண்ணினர்.

262 ஆனால் அவர், “சர்ப்பங்களே, விரியன் பாம்புகளின் சந்ததியே” என்றார். மேலும், “நீங்கள் உங்கள் பிதாவாகிய பிசாசினால் உண்டானவர்கள், அவனுடைய கிரியைகளையே நீங்கள் செய்வீர்கள்” என்றார். “நீங்கள் மனுஷகுமாரனுடைய மாம்சத்தைப் புசித்து, அவருடைய இரத்தத்தைப் பானம் பண்ணாவிட்டால், உங்களுக்குள்ளே ஜீவன் இல்லை” என்றார். அவர் அதை விளக்கிக் கூறவில்லை. அவர் அதை விளக்க வேண்டியதில்லை. அல்லேலூயா. அது மற்றொரு பருவத்திற்கானதாயிருந்தது. ஹூ-ஹூ. அவர் கூற வேண்டியதைச் சொன்னார், “பிதாவுக்குப் பிரியமாயிருக்கிறதையே நான் எப்பொழுதும் செய்கிறேன், அது அவருடைய வார்த்தையைக் காத்துக்கொள்கிறது. நான் அவ்வாறு செய்யவில்லையென்றால், என்னுடைய ஜீவியமும், என்னுடைய கிரியைகளும் நான் செய்ய வேண்டிய அவருடைய வார்த்தையோடு ஒத்துப்போகவில்லையென்றால், அப்பொழுது என்னை விசுவாசிக்காதீர்கள், நான் அவர் அல்ல; ஆனால் அதை விசுவாசித்தால், நீங்கள் நம்ப முடியாவிட்டால், என் கிரியைகளை நம்புங்கள்,” என்று அவர் கூறினார்.

263 இப்பொழுது செய்யப்பட வேண்டிய இந்தக் *கட்டாயங்களை* கவனியுங்கள்.

264 இப்பொழுது, பாருங்கள், தேவன் அவர்களுக்குத் தம்முடைய அளிக்கப்பட்ட வழியின் மூலம் காரியத்தை வெளிப்படுத்தியிருக்கவில்லை, அவர் அதை ஆவியின் ஏவுதலினால் வெளிப்படுத்தியிருந்தார், ஆனால் அது தவறான பாதையில் இருந்தது. பாருங்கள், ஆவியின் ஏவுதல் அருமையாகச் செல்லும், ஆனால் அது தவறான பாதையில் இருக்குமானால், அது தவறாக அனுப்பப்படும். நீங்கள் ஒரு தோட்டாவை எடுத்து அதை நேரடியாக இலக்கை நோக்கிச் சுடுவது போல, அது இலக்கை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது, ஆனால் சிறு காற்று அதை அடித்துத் தள்ளிவிடும். இப்பொழுது, உங்களுடைய மோட்டார் வாகனத்தில், நீங்கள் சாலையில் மணிக்கு அறுபது, எழுபது மைல் வேகத்தில் செல்லும்போது, சிறு காற்று வீசும்போது, நீங்கள் உங்களுடைய சக்கரங்களைப் மீண்டும் நேராக்கி, அதை மீண்டும் சாலையில் ஓட்டிவிடலாம். ஆனால் உங்களால் ஒரு தோட்டாவை அவ்வாறு செய்ய முடியாது; அதன் சக்கரங்களை நேராக்க அங்கே எதுவும் இல்லை, அது இலக்கைத் தவறவிடுகிறது. பாருங்கள், அது அதனுடைய மூல வழியிலேயே செல்ல வேண்டும்.

265 எனவே தேவனுடைய வார்த்தையானது அதனுடைய மூல வழியிலேயே பயணிக்க வேண்டும். எந்த ஒரு சிறு காற்றும் அதை அடித்துச் செல்லப் போவதில்லை; எந்த ஒரு சிறு ஸ்தாபனமும் அல்லது வேறெதுவுமே அதை அடித்துச் செல்லப் போவதில்லை; எந்த ஒரு சிறு துன்புறுத்தலும் அதை அடித்துச் செல்லப் போவதில்லை: அது குறிப்பிட்ட காரியத்திற்கு இயக்கப்பட்டிருக்கிறதே! அங்கும் கூட அது தாக்கப் போகிறது. அப்பொழுது தேவன், அது அந்த நிலையை அடையும்போது, தேவன் அதை ரூபகாரப்படுத்துவார், “துல்லியமான குறி!” ஹுா-ஹூ, அவர் என்ன செய்வார் என்று கூறினாரோ அதை அப்படியே செய்வார். இதோ அது வேத வாக்கியங்களில் உள்ளது, இது, **“கர்த்தர் உரைக்கிறதாவது,** ‘அது நிறைவேறும்!’” இதோ அது உள்ளது. பார்த்தீர்களா? அங்குதான் காரியம்.

266 இப்பொழுது, தேவன் தமக்கு அளிக்கப்பட்டிருந்த வழியில் அதை வெளிப்படுத்தவில்லை. எனவே அவர்கள் இப்பொழுதுள்ளதைப் போலவே, அவருடைய வார்த்தையிலிருந்து விலகி, பருவகாலத்திற்குப் புறம்பாக அதைச் செய்யச் சென்றனர். மனிதர், எவ்வளவு உத்தமமாய் இருந்தாலும் அது ஒரு பொருட்டல்ல, அவர் அளித்துள்ள வழிக்குப் புறம்பாக ஒரு சேவையை அவருக்குச் செய்ய முயன்றாலும், அவர்கள் அதை எப்பொழுதுமே அலங்கோலப்படுத்துகின்றனர். பிலேயாமைப் போலவே, பிலேயாமும் தேவனுக்கு ஒரு சேவை செய்வதாக எண்ணினான்.

267 தேவன் பொய்யுரைக்கிறார் என்று நீங்கள் நினைக்கிறீர்களா? தேவன் எப்போதாவது தம்முடைய சிந்தையை மாற்றுகிறாரா? பாருங்கள், அவர் செய்தது போன்றே ஜனங்கள் இன்றைக்கு செயல்படுகின்றனர். பெண்கள் தங்களுடைய தலைமுடியை வெட்டக் கூடாது என்று அவர் கூறினபோது, அவர்கள், “நாம் அதை வெட்டலாம், வேத பண்டிதர் *இன்னார்-இன்னார்* நம்மால் வெட்டிக்கொள்ள முடியும் என்று கூறினார். நீங்கள் மிகவும் குறுகிய மனப்பான்மை கொண்டவர் என்று சகோதரன் *இன்னார்- இன்னார்* கூறினார்” என்று கூறுகின்றனர். ஹுா-ஹூ, ஹுா-ஹூ. பார்த்தீர்களா?

268 “சரி, *இது* நடக்க முடியுமா? *இது* நடக்கிறதா?”

269 “ஆம், ஹூ-ஹூ, *இன்னார்-இன்னார்* அவ்வாறு கூறினார்.”

270 தேவன் தம்முடைய சிந்தையை மாற்றுகிறதில்லை.

271 பிலேயாம் ஒரு தீர்க்கதரிசி என்று நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? அவன் அப்படித்தான் இருந்தான் என்று வேதம் கூறியுள்ளது. அவன் ஒரு தீர்க்கதரிசி என்று நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? இப்பொழுது, நினைவில் கொள்ளுங்கள், பாலாக் அவனிடம் வந்து, “கீழே இறங்கி இந்த மக்களைச் சபி, ஏனென்றால் அவர்கள் பூமியெங்கும் பரவியுள்ளனர். அவர்கள் ஒரு ஸ்தாபனமல்ல, ஒரு தேசமும் அல்ல,

அவர்கள் ஒரு சிதறிய கூட்டமாயிருக்கிறார்கள்; நாங்கள் தேசத்தின் கௌரவ விருந்தினர்கள். இப்பொழுது நீ அங்கே போய் அந்த ஜனங்களைச் சபித்துவிடு, அதற்கான கிரயத்தை உனக்கு நான் செலுத்துவேன்" என்றான்.

272 பிலேயாம் தீர்க்கதரிசி என்ன செய்ய வேண்டுமோ அதை அப்படியே செய்தான், அவன், "நான் போகமாட்டேன். நீ இங்கே இரவு முழுவதும் காத்திரு, தேவன் என்ன செய்யக் கூறுகிறார் என்பதை நான் காணட்டும்" என்றான்.

273 எனவே அவன் உள்ளே சென்று, அவன், "கர்த்தாவே, இங்கே என்னோடு சில ஜனங்கள் வந்திருக்கிறார்கள், நான் அங்குச் சென்று அங்குள்ள மற்ற ஜனங்களைச் சபிக்க வேண்டும் என்று விரும்பினான்." மேலும் அவன், "அதைக் குறித்து நான் என்ன செய்ய வேண்டும் என்று நீர் விரும்புகிறீர்?" என்று கேட்டான்.

274 தேவன், "நீ போக வேண்டாம், ஏனென்றால் அவர்கள் என்னுடைய ஜனங்கள்!" என்றார்.

275 பிலேயாம் வெளியே சென்று, "உன் வீட்டிற்குத் திரும்பிப் போ. என்னால் உன்னோடு செல்ல முடியாது, அதைச் செய்ய வேண்டாம் என்று தேவன் என்னிடம் கூறினார்" என்றான். இப்பொழுது, தேவனுடைய மூல வார்த்தை: "போகாதே!"

276 பாருங்கள், அதன்பின்னர் அவர்கள் திரும்பிச் சென்று, "உங்களுக்குத் தெரியும், உங்களுடைய பேராயர் செவிகொடுக்கமாட்டார்" என்றனர்.

277 "சரி," என்று ராஜா கூறினான், "நாம் என்ன செய்வோம் என்று சொல்கிறேன். அவனுக்குச் சிறிது பணம் தேவை, அது அவனைச் சம்மதிக்க வைக்கும் என்று நான் நம்புகிறேன். அல்லது நான் அவனை மாநிலப் போதகராக ஆக்கி, அவனுக்கு ஏதாவது மகத்தான காரியத்தைச் செய்ய வைக்கலாம். நான் அவனைப் பேராயராக நியமிக்கலாம், நான் என்ன செய்ய முடியும் என்பதை நீங்கள் கூற முடியாது. இங்கே, நான் என்ன செய்ய வேண்டும் என்பதை நான் உங்களுக்குக் கூறுவேன். அவனை எப்படியும் சம்மதிக்க வைக்கும்படியான போதிய கல்வியறிவை நீங்கள் பெற்றிருக்கவில்லை; உங்களுடைய *அவனுடைய, அவன் இல்லை, கொண்டு போ, எடுக்க,* மற்றும் *சுமந்து செல்* என்பதும் சரியில்லை. அவன் உனக்குச் செவிகொடுக்கமாட்டான், நாம் உண்மையான கல்வியறிவு பெற்ற, அதிக கௌரவம் வாய்ந்த ஒரு கூட்டத்தை அனுப்புவோம்" என்றான்.

278 அவர்கள் அங்குச் சென்று, "வேத பண்டிதர் பிலேயாம், *வேத பண்டிதர்* பிலேயாம் அவர்களே, உங்களுக்கு வாழ்த்துகள். நான் உங்களுக்கு ராஜாவினிடத்திலிருந்து வாழ்த்துக்களைக் கொண்டு வருகிறேன்" என்றனர்.

279 "காலை வணக்கம், சகோதரரே." பார்த்தீர்களா?

280 “இப்பொழுது, வேத பண்டிதர் பிலேயாம்...” மேலும், ஓ, சொல்லகராதி, அது எப்படி உண்மையாகவே ஊற்றப்பட்டது. மேலும், “இப்பொழுது, ராஜா உன்னை உயர்த்துவேன் என்றும், அவர் உனக்கு மகத்தான கனத்தையும் அளிப்பேன் என்றும் கூறியிருக்கிறார். மேலும், உங்களுக்குத் தெரியும், அவர்கள் இந்தப் பொறுப்பை ஏற்றுக் கொள்ள உங்களுக்கு *இவ்வளவு* பணத்தை மாத்திரமே அளிக்க முன்வந்தனர், ஆனால் ராஜா அதை மூன்று மடங்காக உயர்த்துவதாகக் கூறுகிறார், நீங்கள் வந்து அதை எடுத்துக் கொள்வீர்களானால், அதை நான்கு-மூன்று மடங்காகும்” என்றனர். அப்பொழுது பிலேயாமிற்கு மறுசிந்தனை ஏற்பட்டது. அவனுக்கு முட்டாள்தனமான எண்ணங்கள் தோன்றின, அவன் தன் மனதைக் கலக்கினான்.

281 இப்போது, நினைவில் கொள்ளுங்கள், அபிஷேகம் பண்ணப்பட்ட அவன் அதைக் கொண்டு தேவனை கூப்பிட்டான், ஆனால் அவன் உடனடியாகவே தேவனை மூலத் திட்டத்திலிருந்து விலகிச் செல்லத் தூண்டினான். பெந்தெகொஸ்தேயும் அதைத்தான் செய்தது! ஒருத்துவக்காரராகிய நீங்கள், திரித்துவக்காரராகிய நீங்கள், நீங்கள் புகழுக்காக வித்தியாசப்பட்டிருக்க, நீங்கள் ஸ்தாபனம் உண்டாக்கிக் கொண்டீர்கள், நீங்கள் மரித்துவிட்டீர்கள்! நீங்கள் மீண்டும் எழும்பவேமாட்டீர்கள். ஆனால், நீங்கள் பாருங்கள், நீங்கள் தேவனுடைய மூலத்-...தரித்திருக்க வேண்டும். உங்களை ஒரு ஜனமாக உருவாக்க, அவர் உங்களை அந்தச் சபையிலிருந்து வெளியே எடுத்தார், ஆனால் நீங்கள் ஸ்தாபனம் உண்டாக்கிக் கொண்டு, (என்னை மன்னித்துக் கொள்ளுங்கள்) வெளியே வந்த அதே வாந்திக்குள், நீங்கள் வெளியே வந்த அதே விஷயத்திற்குள் மீண்டும் சென்றுவிட்டீர்கள், “நாய் தான் கக்கினதைத் தின்னவும், பன்றி சேற்றிலே புரளவும் திரும்பினது போல.” நான் அதைக் கூறினதற்காக வருந்துகிறேன், என்னை மன்னிக்கவும், அது இங்கே மேடைக்குச் சரியானதல்ல. பார்த்தீர்களா? நான் அதை மாம்சத்தில் கூறினேன். இப்பொழுது கவனியுங்கள்...அதைத்தான் நான் வாந்தியெடுக்க வேண்டும் என்று கூறுகிறேன். நான் அதை அந்தவிதமாகக் கூறியிருக்க வேண்டும். அந்த வார்த்தை சரியாக இருந்தது, ஆனால் தவறாக உபயோகிக்கப்பட்டது. பார்த்தீர்களா? அது சரியாக உபயோகிக்கப்பட்டது, ஆனால் ஒரு தவறான ஒலி என்று உங்களுக்குத் தெரியும். வாந்தியெடுத்தல், “ஒரு நாய் தான் கக்கினதைத் தின்னவும் திரும்பினது போல.”

282 அசெம்பிளிஸ் ஆஃப் காட், பொது மன்றம், முதலில் பெந்தெகொஸ்தேயை ஸ்தாபித்து, அதற்குள் அவர்களை நுழைத்து, அவர்கள் வெளிப்படுத்துதல்களை ஏற்றுக்கொள்ள முடியாதபடி, ஒருத்துவமே, நீங்களும் அதேக் காரியத்தைச் செய்திருக்கிறீர்கள் என்பதை நீங்கள் அறியவில்லையா? நீங்கள் எப்படி “சர்ப்பத்தின் வித்து, நித்திய பாதுகாப்பு” என்ற செய்தியையும், வெளிவந்துள்ள

இந்த மற்ற காரியங்களையும் பெற்றுக்கொள்ள முடியும்? நீங்கள் அதை உங்களுடைய வாசலில் கூட அனுமதிக்காத அளவிற்கு நீங்கள் மிகவும் இறுக்கமாக ஸ்தாபனமாயிருக்கிறீர்கள், ஹூ-ஹூ, ஹூ-ஹூ, பிலேயாம் செய்த அதே காரியம். ஆனால் தேவன் தம்முடைய சிந்தையை மாற்றவில்லை.

283 எனவே பிலேயாம் அங்குச் சென்று, “கர்த்தாவே, இப்பொழுது பாரும், எனக்கு உண்மையாகவே இப்பொழுது யாரோ ஒருவராக இருக்க ஒரு தருணம் கிடைத்துள்ளது. நான் யாருமற்றவனாய் இருந்து வருகிறேன் என்பதை நீர் அறிவீர், ஆனால் யாரோ ஒருவராக இருக்க எனக்கு ஒரு வாய்ப்பு கிடைத்தது. கர்த்தாவே, இப்பொழுது அதைக் குறித்து நீர் என்னக் கூறுகிறீர்?” என்று கேட்டான். இப்பொழுது, அவன் அதை ஒருபோதும் கூறியிருக்கக் கூடாது! தேவன் என்ன செய்யும்படி கூறினார் என்பதை அவன் சரியாக அறிந்திருந்தான்!

284 அப்படியே, “பிதா, குமாரன், பரிசுத்த ஆவி” என்ற பெயரில் ஞானஸ்நானம் பெற்ற உங்களில் ஒவ்வொருவரும், இந்நாளில் இருக்க வேண்டிய இந்த வேதாகமத்தின் மற்ற பாகங்களின் பேரில், அதை ஏற்றுக்கொள்வதே அதைக் குறித்து என்ன செய்ய வேண்டும் என்பதே நீங்கள் அறிந்துள்ளதாகும்! தேவன், “அது சத்தியம்” என்பதை தெளிவாக ரூபகாரப்படுத்துவதை நீங்கள் காணும்போது, அது தேவன் தம்முடைய சொந்த வார்த்தையை வியாக்கியானப்படுத்துவதாகும். ஆனால் நீங்கள் அதைச் செய்வீர்களா? இல்லை, உங்களுடைய ஸ்தாபனம் உங்களை அதைச் செய்ய அனுமதிக்காது!

285 இந்தக் காலையில் டூசானில் அநேக போதகர்கள் இதைக் கேட்டுக்கொண்டிருக்கின்றனர். சகோதரன் கில்மோர், உங்களுக்கு எதிராக எனக்கு ஒன்றுமில்லை; சகோதரன் ப்ராக், முதல் அசெம்பளி, நட்புச் சபை. புருஷர்களாகிய நீங்கள், அந்த நேரம் முழுவதும் நான் அங்கிருந்தேன், நீங்கள் என்னை உள்ளே வரக்கூட அனுமதிக்கமாட்டீர்கள். நான்...நிச்சயமாக, உங்களால் முடியாது, நீங்கள் இருக்கிறவிதமாகவே தரித்திருக்க முடியாது. நீங்கள் ஸ்தாபனமாக்கப்பட்டிருக்கிறபடியால், நீங்கள் வெளிப்பாட்டை ஏற்றுக்கொள்ள முடியாது. கவனியுங்கள், பொய்யான ஏவுதலின் கீழ் ஊசா இருந்தபடியினால் அவன் கொல்லப்பட்டது போல, அப்படியே பல உண்மையான கிறிஸ்தவர்களும் அந்தப் பழைய, செத்துப்போன சபைகளுக்குத் திரும்பிச் சென்று அவர்கள் தங்களுடைய கரத்தை உடன்படிக்கை பெட்டியின் மேல் வைக்கும்படி நியமிக்கப்படாதிருக்கிற காரணத்தால் தங்கள் அனுபவத்தை இழக்கிறார்கள். இப்பொழுது நீங்கள் அதை விசுவாசிக்கலாம், அல்லது அதை விசுவாசிக்காமல் போகலாம், அது உங்களைப் பொறுத்தது. தேவனே உங்களுடைய நியாயாதிபதியாயிருக்கிறார். தேவன் தம்முடைய வார்த்தையை ஒருபோதும் திரும்பப் பெற்றுக்

கொள்ளவில்லை. அவர் முதல் முறையாக என்ன கூறினாரோ, அதை அவர் ஒவ்வொரு முறையும் கூறுகிறார்.

286 அவர் பிலேயாமிடம், "நீ போகாதே!" என்று கூறினார்.

287 அப்பொழுது பிலேயாம் திரும்பி வந்து, "ஆனால் கர்த்தாவே, நான் போகலாமா?" என்று கேட்டான்.

288 இப்பொழுது பாருங்கள்! தேவன், "போ!" என்றார். இப்பொழுது, அவன் போக அவர் அனுமதி அளித்தார். அனுமதிக்கப்பட்ட தேவனுடைய சித்தமே உண்டு, மூல தேவனுடைய சித்தம் அல்ல. அவன் என்ன ஒரு தொல்லைக்குள்ளானான் என்று நீங்கள் பார்த்தீர்களா?

289 தேவனுடைய வார்த்தைக்குப் புறம்பே எந்த ஸ்தாபனத்தையும் அல்லது எந்தக் காரியத்தையும், அல்லது வேறு எதையேனும் கட்டுகிற எந்த மனிதனும், அது நொறுங்கும் மணல், அது சரிந்துவிடும்! அது எந்தக் காரியத்தைப் போன்றும் நிச்சயமாக மரித்துப் போகும், ஏனென்றால் தேவனுடைய வார்த்தை ஒரு வளர்ந்து வரும் மணவாட்டியின் சரீரமாய் உள்ளது. உங்களால் எல்லாம் காலாக, எல்லாம் கையாக, எல்லாம் தொடையாகப் பெற முடியாது. இந்தக் காரியங்கள் தங்களுக்குரிய காலத்தில் வரும்.

290 பெந்தேகோஸ்தே, நீங்கள் அவை எல்லாவற்றையும் ஒரு காரியமாக்கிவிட்டீர்கள், எனவே நீங்கள் புதிய வெளிப்பாட்டை ஏற்றுக்கொள்ள முடியாது. அந்தக் காரணத்தினால்தான் நீங்கள் இருக்கிற இடத்திலேயே தரித்திருந்து மரிக்கிறீர்கள். அது தொடர்ந்து முன்னேறுகிறது. (அவ்வளவுதான்; உங்களைக் களைப்படையச் செய்ய விரும்பவில்லை.) ஆனால் தேவன் தம்முடைய சிந்தையை மாற்றுகிறதில்லை, அவருடைய முதல் தீர்மானம் முற்றிலும் சரியானதாயிருக்கிறது. எனவே தேவன் தம்முடைய சிந்தையை மாற்றுகிறதில்லை, அவர் உங்களை உங்களுடைய அனுமதிக்கப்பட்ட சித்தத்தில் செல்ல அனுமதிக்கிறார். ஓரல் ராபர்ட்ஸ் கூறுவது போல, "தேவன் ஒரு நல்ல தேவன்." அவர் ஒரு பயங்கரமான தேவனும் கூட!

291 பாருங்கள், நீங்கள், "தேவனுக்கு மகிமை, நான் அந்நிய பாஷைகளில் பேச விரும்புகிறேன்!" என்று கூறுவது போல, நீங்கள் அதைச் செய்ய அவர் அனுமதிப்பார், ஆனால் நீங்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றுள்ளீர்கள் என்பதற்கு அது அடையாளமல்ல.

292 அந்தப் பழைய சந்தேகவாதியான, தோமா சொன்னது நினைவிருக்கிறதா? "என்னிடத்தில் சில அத்தாட்சிகள் இருந்தாலொழிய, அவருடைய ஆணிகளிலும், கரங்களிலும், விலாவிலும் என் விரல்களை நுழைக்க வேண்டும், என்னால்—என்னால்—என்னால்—என்னால் அதை நம்பவே முடியாது." இப்பொழுது, அங்குதான் காரியம், அதே காரியம்.

293 இயேசு, "தோமாவே, இதோ இருக்கிறாய், நீ அதைத்தான் அறிந்துகொள்ள விரும்பினால் உன்னுடைய கரங்களை இங்கே போடு" என்றார். பார்த்தீர்களா? பார்த்தீர்களா? இப்பொழுது, நீங்கள் தோமாவின் பாதையை விரும்பினால், தொடர்ந்து செல்லுங்கள். ஆனால் அவர் என்ன கூறினார்? "ஒருபோதும் காணாதிருந்து, விசுவாசிக்கிறவர்களுக்கு அவர்களுடைய பலன் எவ்வளவு பெரியதாயிருக்கும்."

294 கவனியுங்கள், கவனியுங்கள், இதைச் செய்ததன் மூலம், அவன் உத்தமமான மனிதனின் மரணத்திற்கு காரணமானான், உடன்படிக்கைப் பெட்டியின் மேல் தன்னுடைய கரத்தை வைத்தான், அவன் அதைச் செய்திருக்கக் கூடாது. ஒரு மகத்தான, உத்தமமான மனிதன், அபிஷேகமும் மற்றுமுள்ள ஒவ்வொரு காரியமும் சரியானதாயிருந்தது என்று எண்ணினான், ஆனால் உடன்படிக்கைப் பெட்டி அதனுடைய தவறான வழியில் சென்று கொண்டிருந்தது. வேதம், "காளைகள்" "தடுமாறின," என்று கூறியுள்ளது, லேவியர்கள் அல்ல. காளைகள் தடுமாறி, வண்டி கவிழ்ந்து கொண்டிருந்தது; ஒரு உத்தமமான மனிதன், தன்னுடைய முழு அன்பினால் நிறைந்த இருதயத்தோடு, உடன்படிக்கைப் பெட்டியை நிறுத்தும்படி தன்னுடைய கரத்தை அதன் மேல் வைத்தான், லேவியனைத் தவிர வேறு எந்த மனிதனும் அந்த உடன்படிக்கைப் பெட்டியைத் தொட முடியாததால், அவன் கொல்லப்பட்டான். தேவன் தம்முடைய வார்த்தையை எப்படி காத்துக் கொள்கிறார், அவருடைய பாதையைக் காத்து, அவருடைய ஒழுங்கை எப்படி காத்துக் கொள்கிறார் என்று பார்த்தீர்களா? உசியா குஷ்டரோகத்தால் பீடிக்கப்பட்டான். இதோ தாவீது, மொத்தத்தில் ஒரு மனிதனின் மரணத்திற்கும் ஒரு பெரிய பேரழிவிற்கும் காரணமாக இருந்தான்; ஆவியினால் அபிஷேகம் செய்யப்பட்டிருந்தாலும், அவர்கள் இருவரும் தேவனுடைய வழியிலிருந்து விலகி இருந்தனர். அது சரியா? அவன் மரித்தான். ஓ, சகோதரன் ஜேக் அதை வாசித்தார், அது தாவீதிற்கு மரண பயத்தை உண்டாக்கியது, அந்த இடத்தின் பெயரால் அழைக்கப்பட்டது. பார்த்தீர்களா? அவன் அவனை அங்கே குறித்தான்.

295 எத்தனை முறை ஸ்தாபனங்கள் அதே காரியத்தை உத்தமமான விசுவாசிகளுக்குச் செய்திருக்கின்றன. கத்தோலிக்க சபை, மெத்தோடிஸ்டு, பாப்டிஸ்டு, கிறிஸ்துவின் சபை, பெந்தேகோஸ்தேயினரும் கூட, அதே காரியத்தினால் அநேக ஆவிக்குரிய மரணத்திற்கு காரணமாயிருக்கின்றனர். இக்காரியங்களுடன் அது வரும்போது, அவர்கள் கண்டனர்... மேலும் அவர்களால் அதற்கு மேல் முன்னேற முடியவில்லை, ஏனென்றால் அதைத்தான் அவர்களுடைய ஸ்தாபனம் விசுவாசிக்கிறது.

296 இன்றைக்கு பாருங்கள், பெரிய சிலுவை யுத்தங்கள், அதேக் காரியம். அவர்கள் "முன்பு இருந்ததைக் காட்டிலும் மோசமான

நரகத்தின் இருமடங்கு பிள்ளைகளாக” அவர்களை ஆக்குவதைத் தவிர வேறெதையும் செய்வதில்லை. அது அவர்களுக்கு உண்மையாகவே சத்தியத்தை இன்னும் கடினமாக்குகிறது. இந்தப் பெரிய எழுப்புதல்களில் ஒன்றில், அவைகள் யாவும் உள்ளே வந்து, சிறிது காலம் தொடர்ந்து சென்று, மீண்டும் வெளியே செல்லும்போது, அவர்கள் மீண்டும் இந்த எல்லா பாவத்தையும் செய்யத் துவங்குவார்கள். மற்றொரு எழுப்புதலைக் குறித்து கேள்விப்பட்டால், “ஆ, நான் அந்தக் காரியங்களில் சிலவற்றை பார்த்திருக்கிறேன், நான் முயற்சித்தேன். அதற்கு ஒன்றுமில்லை” என்று சொல்வீர்கள். பார்த்தீர்களா? அவர்களுக்கு அந்தப் பாதைத் தெரியாது. பார்க்கவில்லை.

297 நம்முடைய மகத்தான சுவிசேஷகர் பில்லி கிரஹாம் ஒரு நாள் காலையில் இந்தவிதமாக ஒரு காலைச் சிற்றுண்டியில் அமர்ந்து, அவர், “நான்...” என்று கூறினார், இங்கே அவர் கென்டக்கியில் உள்ள லூயிவில்லில், வேதாகமத்தை வைத்து, “*இதோ* தேவனுடைய முன்மாதிரி உள்ளது” என்று கூறினார். அது உண்மை, அந்த மனிதன் உண்மையைக் கூறினார். அவர், “நீங்கள் போங்கள்...பவுல் ஒரு நகரத்திற்குள்ளாகச் சென்று, ஒருவனை மனமாற்றமடையச் செய்தான், அங்கிருந்து ஒரு வருடம் திரும்பி வந்து, அந்த மனமாற்றமடைந்தவர்களில் முப்பது பேரை அழைத்துக் கொண்டு வந்தார்கள்” என்றார். “ஆனால் நான் ஒரு நகரத்திற்குள்ளாகச் சென்று, முப்பதாயிரம் பேர் மனமாற்றமடையச் செய்கிறேன், ஆறு மாதங்களுக்குப் பிறகு திரும்பி வந்து முப்பது பேரைக் கூடக் காணமுடியவில்லை” என்றார். அதற்கு அவர், “ஒரு காரியம் என்னவென்று உங்களுக்குத் தெரியுமா?” என்று கேட்டார். மேலும், “நீங்கள் சோம்பேறி பிரசங்கிமார்கள்” என்றார், “நீங்கள் உங்களுடைய காலை மேசையின் மேல் வைத்துக்கொண்டு உட்கார்ந்து கொண்டிருக்கிறீர்கள் மேலும்—மேலும் இந்த ஜனங்களை இரவு உணவிற்குப் பிறகு சந்தித்து அவர்களிடத்தில் பேசுவதற்குப் பதிலாகத் தொலைபேசியில் அழைக்கிறீர்கள்” என்றார்.

298 ஓ, என் இருதயம் கொழுந்துவிட்டு எரிந்து கொண்டிருந்தது. நான், “ஓ மகத்தான தேவனுடைய மனிதனே, நான் இங்கு உங்களுடன் இணங்க மறுப்பதை வெறுக்கிறேன், ஆனால் பவுலின் ஒரே மனமாற்றத்தின் பேரில் சோம்பேறித்தனமான போதகர்கள் யார்? அவன் என்ன செய்தான், அவன் அவனை வார்த்தைக்குள்ளாகக் கொண்டு சென்றான், அவன் அவனைச் செய்திக்குள்ளாகக் கொண்டு சென்றான், அவன் தேவனைக் கண்ட இடத்திற்கு அவனைக் கொண்டு சென்றான்; அவனுடைய இருதயம் கொழுந்துவிட்டு எரிய, அவன் தேசத்தையே கொழுந்து விட்டெரியச் செய்தான்! நீங்கள் செய்கிற ஒரே காரியம் அவர்களை ஒரு பாப்டிஸ்டு அல்லது மெத்தோடிஸ்டு சபையில் அல்லது ஏதோ ஒன்றில் சேர்த்து, அங்கே எரிக்க ஒன்றுமேயில்லை என்பதில் ஆச்சரியமில்லை” என்று

நினைத்தான். ஹூ-ஹூ. ஆம், ஐயா!

299 அப்படியானால் வார்த்தை இன்றைக்கு என்ன வாக்குத்தத்தம் செய்திருக்கிறது என்பதைப் பாருங்கள். அது மெத்தோடிஸ்டு, பாப்டிஸ்டு, பெந்தேகோஸ்தே அல்லது இன்றைக்கு எது என்று நாம் கண்டறிவோமாக. இப்பொழுது நீங்கள் உங்களுடைய வேத வாக்கியங்களை வாசிக்கலாம். நான் உங்களுக்கு மேற்கோள் காட்டி வந்துள்ள இந்த வேத வாக்கியங்களை எடுத்துக் கொள்ளுங்கள். மேலும் வெளிப்படுத்தின விசேஷம்...

300 எனக்கு நேரமிருந்தால், நான் அதை வாசிப்பேன், ஆனால் எனக்கு நேரமில்லை. எனக்கு இன்னும் பன்னிரெண்டு அல்லது பதினான்கு நிமிடங்கள் உள்ளன. நான் சரியாக வெளியே வந்தால், நான் பதினொரு மணிக்கு முடிக்க வேண்டும்.

301 மல்கியா 4, வெளிப்படுத்தின விசேஷம் 10, ஏழு முத்திரைகளைக் கவனியுங்கள். வேதம் கூறவில்லையா...இப்பொழுது கவனியுங்கள்! ஒரு தூதன், பரத்திலிருந்து வந்த ஒரு செய்தியாளன், ஒரு பூமிக்குரிய செய்தியாளன் இருந்தான். ஒவ்வொரு செய்தியாளனும் சபையின் காலத்திற்குரியதாயிருந்தான். அவர் கூறினார், "நாட்களில்..." இப்பொழுது பேசுகையில், "ஒரு தூதன் வந்தான், செய்தியாளன்" (*தூதன்* என்ற வார்த்தை, ஆங்கில வார்த்தைக்கு "செய்தியாளர்" என்று பொருள்). "...வானத்திலிருந்து இறங்கி வந்து, அவர் தம்முடைய பாதத்தைப் பூமியின் மேலும் சமுத்திரத்தின் மேலும் வைத்து, இனி காலம் செல்லாது என்று என்றென்றைக்கும் ஜீவிக்கிறவர்மேல் ஆணையிட்டுச் சொன்னான்." அது சரியா? அவருடைய சிரசில் ஒரு வானவில் இருந்தது, இந்தக் காரியங்கள் யாவும் அப்படியே சம்பவித்துக் கொண்டிருக்கின்றன. அந்தத் தூதன் கிறிஸ்துவாயிருந்தார்! நிச்சயமாக! ஆனால் அவர் என்ன கூறினார்? "ஆனால் ஏழாம் தூதனின் நாட்களில், ஏழாம் சபைக்காலம்."

302 எப்போதும் சபைக் காலத்தின் இறுதியில்தான், அவர்கள் அந்த விஷயத்தைப் பெற்றுக்கொண்டார்கள்...தேவன் ஒரு தூதனை அனுப்பும் வரை சபை அமைப்பு மிகவும் சீர்குலைந்துவிடுகிறது, அதுவே அந்தத் சபைக் காலத்திற்கான செய்தியாகும். அதன்பின்னர் அவர்கள் அவனுடைய செய்தியை ஏற்றுக்கொண்டனர், ஏனென்றால் அவன் சிறிது காலம் தான் வாழ்ந்தான், தேவன்...அதன்பின்னர் அவர்கள் அவருடைய செய்தியை அதனுடைய மற்றவற்றோடு கொண்டு செல்வதற்குப் பதிலாக ஏற்றுக்கொண்டு, அவர்கள் ஒரு—ஒரு ஸ்தாபனத்தை உண்டாக்கிக் கொண்டனர். அதன்பின்னர் அவர்கள் மற்றொரு ஸ்தாபனத்தை உண்டாக்கிக் கொண்டனர்; மற்றொரு தூதன், மற்றொன்றை எடுத்துக்கொள்கிறார்கள்.

303 நீங்கள் யாவரும் என்னுடைய புத்தகத்தில் காண்கிறீர்கள், அவை யாவும் அவர் என்னிடத்தில் கூறியுள்ள *ஏழு சபைக் காலங்கள்* என்பதில் வரையப்பட்டிருக்கும்; அதற்காக நியாயத்தீர்ப்பு

நாளில் நியாயந்தீர்க்கப்படுவதற்கு, நான் தேவனுக்குச் சாட்சியாக நிற்கிறேன். அது தேவனிடத்திலிருந்து வந்தது, என்னுடைய சிந்தனையிலிருந்து அல்ல. இங்கே கவனியுங்கள். நான் என்னுடைய சொந்த சிந்தனையைக் கொண்டவனாக இருந்திருந்தால், அது அதிலிருந்து வேறுபட்டதாக இருக்கும் என்று நான் எண்ணியிருப்பேன்—நான் எண்ணியிருப்பேன். சகோதரன் ஜேக் அங்குள்ள தூதனைக் குறித்து என்னிடத்தில் கூறியது போல, "அந்தக் கிறிஸ்து ஒரு மகிமையடைந்த சரீரமாயிருந்தார்." ஆனால் அதுவல்ல, அது செய்தி சரியாயிருந்தது, உன்னத தெய்வீகத்தன்மை, அவர் தேவனாயிருந்தார் என்பதையே அது காண்பித்துக் கொண்டிருந்தது. பார்த்தீர்களா? நான் வார்த்தையிலிருந்து பிரசங்கித்துக் கொண்டிருந்த அதே காரியம். வார்த்தை எப்பொழுதுமே வார்த்தையைக் குறித்து சாட்சி பகருகிறது.

304 இப்பொழுது, இப்பொழுது துரிதமாக, நாம் இன்னும் ஒரு சில நிமிடங்களில் முடிக்க ஆயத்தமாகிக் கொண்டிருக்கிறோம்.

305 இப்பொழுது, அவர், "ஏழாம் சபைக்காலத்தின் பூமிக்குரிய தூதனான ஏழாம் தூதனின் செய்தியின் நாட்களில், அப்பொழுது இந்த மற்ற ஆறு சபைக் காலங்களினூடாக மறைந்துபோன இந்த இரகசியங்கள் யாவும் அப்பொழுதே வெளிப்படுத்தப்பட வேண்டும்" என்றார். பாருங்கள், அதைத்தான் அந்தத் தூதர்கள் கூறினர். இங்கே ஏழு முத்திரைகள், அல்லது இந்த இரகசியங்களின் திறக்கப்படுதலாயுள்ளது. நீங்கள் அதை அந்த ஸ்தாபனங்களுக்கு முன்பாகக் கொண்டு செல்ல முயற்சிக்கிறீர்கள். அவர்கள் எதற்கு முரணாக...சகோதரரே, அவர்கள் ஒரு சிப்பியைப் போல மூடிக்கொள்கிறார்கள், ஆனால் அவர்கள் எப்பொழுதுமே அதையே செய்து வந்துள்ளனர். ஆனால் இது பருவகாலமாயிற்றே!

306 இது ஏழாம் சபையின் காலம் என்பதை எத்தனை பேர் அறிவீர்கள்? "ஆமென்" என்று கூறுங்கள். [சபையோர், "ஆமென்" என்கின்றனர்.—ஆசி.] லவோதிக்கேயா காலம், ஒரு வெதுவெதுப்பாக இருந்ததை தேவன் தம்முடைய வாயிலிருந்து வாந்தி பண்ணிப் போடுகிறார். அவர்கள் தங்கள் வாயிலிருந்து தேவனை வாந்திப் பண்ணினார்கள்; வேதாகமத்தில் வேறெந்த காலத்திலும் இயேசுவானவர் வெளிப்புறத்தில் தட்டி மீண்டும் உள்ளே வர முயற்சித்ததாகக் காணப்படவில்லை. அவர்கள் அவரை வெளியே தள்ளினர், எந்த ஒத்துழைப்பும் இல்லை. இயேசு யார்? வார்த்தை! வார்த்தை வெளியேற்றப்பட்டது. பதரானது கோதுமையை வெளியே எறிந்தது! அவர், "நான் வாசற்படியிலே நின்று கதவைத் தட்டுகிறேன், வெளியே விலங்கிடப்பட்டிருக்கும் எந்த மனிதனும் என் சத்தத்தைக் கேட்பான்" என்றார். ஓ தேவனே, இரக்கமாயிரும்!

307 அப்பொழுதுதான் அந்த மனிதன் மரித்தபோது, அபிஷேகத்தில் இருந்த தாவீது தான் செய்த தவறு என்னவென்று கண்டான்.

ஓ தாவீதே, உம்முடைய மேய்ப்பனே, நீங்கள் பற்றிக் கொண்டிருக்கிற உங்களுடைய மரித்துப்போன கோட்பாடுகளையும், ஸ்தாபனங்களையும் உங்களால் காணமுடியவில்லையா? அது என்ன செய்து கொண்டிருக்கிறது என்பதை உங்களால் காண முடியவில்லையா? அது ஒரு ஊசாவைக் கொல்கிறது. ஆவிக்குரியப்பிரகாரமாக மரித்து, ஏன் எழுப்புதல் இல்லை என்று நீங்கள் யோசிக்கிறீர்கள், உங்களுடைய பெண்கள் தங்களுடைய தலைமுடியை வெட்டிக்கொள்ளவும், தங்களுடைய முகத்திற்கு வர்ணம் பூசவும், குட்டைக்கால் சட்டைகளை அணியவும், உங்கள் பையன்களை ரிக்கி பள்ளிகளுக்கு அனுப்பி, அதுபோல இன்னும் பல, அவர்களில் பாதி பேர் ஓரினச்சேர்க்கையாளர்களாக வீட்டிற்கு வருகிறார்கள், மற்றுமுள்ள ஒவ்வொரு காரியமும்.

308 தாவீதின் குறிக்கோளைக் கவனியுங்கள்: அவன் உடன்படிக்கைப் பெட்டியைத் தன்னுடைய *சொந்த* வீட்டிற்கு கொண்டு வந்து கொண்டிருந்தான். அது தலைநகரம் அல்ல, அது அந்த இடம் அல்ல, அது எருசலேமைச் சேர்ந்தது. ஆனால் தாவீதோ அதைத் தன்னுடைய சொந்த வீட்டிற்கு கொண்டு வந்து கொண்டிருந்தான், அவன் எழுப்புதல் தன்னுடைய சொந்த ஸ்தாபனத்தில் இருக்க வேண்டும் என்று விரும்பினான். “ஓ, நீங்கள் அசெம்பிளி, சரி. நீங்கள் ஒருத்துவக்காரராக இருந்தால், சரி. நீங்கள் பெந்தேகோஸ்தேயினராக இருந்தால், பரவாயில்லை.”

309 யாரோ ஒருவர் கூறினது போல, “சகோதரன் பிரான்ஹாம், நீங்கள் கூறுவதைக் கேட்க யாரை வைக்க முடியும்?” என்று கூறினார். மேலும், “பில்லி கிரஹாமை என்னால் காண முடிகிறது, அவரோடு தேசத்தில் உள்ள எல்லா ஸ்தாபனங்களும் உள்ளன. ஓரல் ராபர்ட்ஸை என்னால் காண முடிகிறது, ஒவ்வொரு பெந்தேகோஸ்தேயினரும் அவரோடு ஒட்டிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால்,” என்று கூறி, “நீங்கள் முழு காரியத்திற்கும் எதிராக இருக்கிறீர்கள்” என்றார். ஹூ-ஹூ. அவர், “உலகத்தில் நீங்கள் எப்படி யாரையாவது பெற்றுக்கொள்வீர்கள்?” என்று கேட்டார்.

310 நான், “அது தேவன்!” என்றேன்.

311 “கர்த்தராகிய நான் உலகத்தோற்றத்துக்கு முன்னே அதை நட்டேன். அவர்களில் சிலர் அதை என் கையிலிருந்து பறித்துக் கொள்ளாதபடிக்கு நான் அதற்கு இரவும் பகலும் தண்ணீர் பாய்ச்சுவேன்” என்று ஏசாயா கூறினான். “நான் தண்ணீர் பாய்ச்சுவேன், நான் அதை நட்டேன். நான் முன்குறித்தலின் மூலம், உலகத் தோற்றத்திற்கு முன்னரே அவர்களுடைய பெயர்களைப் புஸ்தகத்தில் பதிவு செய்தேன். நான் அதற்குத் தண்ணீர் பாய்ச்சுவேன், தொடர்ந்து முன்னேறிக்கொண்டேயிருங்கள். நான் தண்ணீரைத் தருகிறேன், நீ அதைத் தெளித்துவிடு” என்றார். சரி. பார்த்தீர்களா? “அவர்களில் ஒருவனும் என் கையிலிருந்து பறிக்கப்படாதபடிக்கு,

நான் அதற்கு இரவும் பகலும் தண்ணீர் பாய்ச்சுவேன்.” அங்குதான் காரியம்.

312 அது எருசலேமுக்கு பதிலாக, தாவீதின் நகரத்திற்கு வர வேண்டும் என விரும்புகிறேன். அந்த நேரத்தில் அதற்கு ஆயத்தமாக எந்த இடமும் இருக்கவில்லை, அது இன்றைக்கும் அவ்வண்ணமாகவே உள்ளது. ஏழு முத்திரைகளினால் வெளிப்பட்ட இந்த மகத்தான இரகசியங்கள், எந்த ஸ்தாபனத்திலும் ஒரு இடமும் இல்லை…அதை ஏற்றுக்கொள்ள ஒரு ஸ்தாபனமாயிருப்பதை விட்டுவிட வேண்டும். லூத்தர் தொடங்கி பெந்தேகோஸ்தே ஒருத்துவம் வரையிலும், அதைப் பெற்றுக்கொள்ள ஒரு இடமும் இல்லை. ஒரு மனிதனும் அதை ஏற்றுக்கொண்டு தன்னுடைய ஸ்தாபனத்தில் நிலைத்திருக்க முடியாது. அவன் கோதுமையைப் பின்தொடர வேண்டும் அல்லது அவன் விரும்புகிற எந்த ஒரு பதரையாவது பின்பற்ற வேண்டும்.

313 கிறிஸ்து நம்முடைய வார்த்தையாயிருக்கிறார். அவர்கள் தங்களுடைய ஸ்தாபனத்தையே விரும்புகின்றனர். அவன் ஸ்தாபனத்தின் புதிய வண்டிகளில் சுமந்து செல்ல முடியாது என்பதை கவனியுங்கள். அவருடைய செய்தி ஒரு புதிய ஸ்தாபனத்தின் வண்டியில் செல்ல முடியாது அது ஒரு தீர்க்கதரிசியின் இருதயத்தில் ஊடுருவி வந்து இறங்க வேண்டும். அது முடியாது. அது இவ்விதமாக இருக்கும் என்றும், அந்த விதமாகத்தான் அது இருக்க வேண்டும் என்றும் அவர் வாக்குத்தத்தம் செய்துள்ளார்.

314 எனவே ஸ்தாபனம் ஒருபோதும் அதை ஏற்றுக்கொள்ளாது, அவர்களால் அதை ஏற்றுக்கொள்ள முடியாது. அவர்கள் இயேசுவை சிலுவையில் தொங்க விட்டபோது யூதர்கள் அவரைப் பற்றிக் குருடர்களாக இருந்ததைப் போலவே, அவர்களும் அதைப் பற்றிக் குருடர்களாக இருக்கிறார்கள். இயேசு, “பிதாவே, இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்து கொண்டிருப்பது இன்னதென்று கூட அறியாதிருக்கிறார்கள்” என்று கூறினார். அவர்களை இழிவாகக் கருதாமல், சற்று சிந்தித்துப் பாருங்கள்: நீங்கள் விழித்தெழுந்து என்ன நடக்கிறது என்பதைக் காண முடியாத அளவிற்கு உங்களுடைய கண்கள் மிகவும் குருடாயிருந்த நிலையில் நீங்கள் அதே நிலையில் இருந்திருந்தால் என்னவாகும்?

315 அதுவே தங்களுடைய தேவன் என்பதையும் அவர்களால் காண முடியவில்லை. அவர் அங்கே சிலுவையில் தொங்கிக் கொண்டிருக்கையில், இருநூறு கெஜ தூரத்திலுள்ள ஆலயத்தில் அவர்கள் 22-ம் சங்கீதத்தை, “என் தேவனே, என் தேவனே, ஏன் என்னைக் கைவிட்டீர்? அவர்கள் என் கைகளையும், என் கால்களையும் உருவக் குத்தினார்கள்.” பார்த்தீர்களா? “என்னுடைய எலும்புகள் எல்லாம், அவர்கள் என்னை நோக்கிப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஏன் என்னைக் கைவிட்டீர்?” என்று பாடிக் கொண்டிருந்தனர். அவர்கள் பாடியிருந்த அதே தேவனை

சிலுவையில் அறையும் அளவுக்குக் குருடாயிருந்தனர், அதை அறியாதிருந்தனர்.

316 இப்போது, லவோதிக்கேயா சபையைப் பற்றி வேதாகமம் கூறவில்லையா, தன்னுடைய ஸ்தாபன அங்கத்தினர்களால் தான் மிகவும் மகத்தானவள் என்று எண்ணுகிறாள், அவள், "நிர்வாணியாயும், பரிதபிக்கப்படத்தக்கவளாயும், தரித்திரமாயும், குருடாயும், அதை அறியாமல்" இருப்பாளோ? *குருடன்* என்பதன் பொருள் என்ன? யூத சபையின் முடிவுக்குக் காரணமாக இருந்தது போலவே, இந்த லவோதிக்கேயா சபைக்கும் *குருட்டுத்தனம்* என்பது, வெளியே நின்று தட்டி, உள்ளே வர முயற்சிக்கும் அதே கிறிஸ்துவைப் பற்றிக் குருடராக இருந்தனர்; "நிர்வாணமாயும், பரிதபிக்கப்படத்தக்கதாயும், தரித்திரனாயும், நிர்பாக்கியமுள்ளவனும், குருடனாயும், அதை அறியாமலும் இருக்கிறாய்." ஓ தேவனே, இரக்கமாயிரும்!

317 அந்தக் குமாரனின் பிரசன்னத்தில் ஏன் கோதுமையினால் நாம் ஜீவித்துக் கொண்டிருக்கிற வேளையைக் காண முடியவில்லை? ஆம், கிறிஸ்துவே நம்முடையப் பேழையாயிருக்கிறார், ஆனால் அதைச் செய்வதற்கான அவருடைய மூல வழி. அப்படியானால் இங்கே அவர்…அவர்கள் அவருடைய ஆவியை உடையவர்களாயிருந்தனர். நாம் அதை அறிவோம். அவர்கள் கர்த்தர் பேரில் காத்திருக்கிறார்கள், அவருடைய மூல வார்த்தையின் காலத்தின் பேரில் அவருடைய திட்டம் ரூபகாரப்படுத்தப்படுவதைக் காண்கிறார்கள், அதைத்தான் நாம் இப்பொழுது செய்ய வேண்டும். அவர்—அவர் தம்முடைய வார்த்தையினால் அவர்களுடைய விசுவாசத்தை வெளிப்படுத்துகிறார், அவர் வாக்குத்தத்தம் செய்த ஒவ்வொரு திட்டத்தையும் அவர் உறுதிப்படுத்துவதைக் காணும்போது, மனிதனுடைய ஸ்தாபனத்தின் திட்டங்களினால் அல்ல, நம்முடைய சொந்த பேழைக்கு அங்கத்தினர்களை உண்டாக்குகிறதில்லை.

318 அவர்கள் ஒரு மெதோடிஸ்டு பேழையையும், ஒரு பாப்டிஸ்டு பேழையையும், ஒரு பிரஸ்பிடேரியன் பேழையையும், வரப்போகும் மிகுந்த உபத்திரவத்திற்காக ஒவ்வொருவரும் இந்தப் பேழைக்குள் போகிறார்கள்; "தேவனுக்கு மகிமை! நான் மெதோடிஸ்டு பேழையில், பிரஸ்பிடேரியன், பெந்தேகோஸ்தே பேழையில் ஞானஸ்நானம் பண்ணப்பட்டேன்" என்கிறார்கள். ஒரே ஒரு பேழை மாத்திரமே உண்டு, அது இயேசு கிறிஸ்து, அவரே வார்த்தை!

319 கவனியுங்கள், தேவன் தீர்க்கதரிசியிடம், பழைய ஏற்பாட்டில், "புஸ்தகச்சுருளைப் புசி" என்று கூறினார். புதிய ஏற்பாட்டின் தீர்க்கதரிசியிடம் அவர், "சிறு புத்தகத்தைப் புசி" என்றார். ஏன்? அதாவது தீர்க்கதரிசியும் வார்த்தையும் ஒன்றாக இருக்க வேண்டும்! புரிகிறதா? அது தேவனுடைய வார்த்தையாகிய பேழையாகும்.

320 தேவன் தம்முடைய மணவாட்டியைத் தெரிந்துகொள்ளும்போது, அது எப்படி நிறைவேறும் என்றும், அது எப்படி நிறைவேற்றப்படும் என்றும், தம்முடைய வார்த்தையில், அது எப்படி செய்யப்பட வேண்டும் என்பதை தேவன் வாக்களித்துள்ளார். அது உங்களுக்கு முன்பாகக் கர்த்தருடைய நாமத்தில் சம்பவித்துக் கொண்டிருக்கிறது, அது மூல வார்த்தையின் மூலமே! சாயங்கால நேர செய்தி இங்கே உள்ளது.

321 ஹேவுட் எழுதியது எத்தனை பேருக்கு நினைவிருக்கிறது:

> சாயங்காலத்திலே வெளிச்சம் உண்டாகும்,
> மகிமைக்கு செல்லும் பாதையை நீங்கள்
> நிச்சயமாகவே கண்டடைவீர்கள்;

322 ஆம், வெளிப்படுத்தின விசேஷம் 10, மல்கியா 4, லூக்கா 30 மற்றும் 10-இல் உள்ள ஏழு முத்திரைகளைக் குறித்த சாயங்கால வாக்குத்தத்தம். உபாகமம் 4, 4:1 மற்றும் 4-ஐ வாசித்து, அதன்பின்னர் 25-வது மற்றும் 26-வது வசனங்களை வாசித்து, இந்தக் கடைசி நாளைக் குறித்து அவர் என்ன கூறினார் என்பதைப் பாருங்கள். இது மோசே இஸ்ரவேலரிடம், "ஒவ்வொரு வார்த்தையையும் கைக்கொள்ளுங்கள், எந்த ஒரு காரியத்தையும் கூட்ட வேண்டாம்!" என்று கூறினதாயிருந்தது. மோசே, அந்தத் தீர்க்கதரிசி அங்கிருந்து, அந்தத் தேவனுடைய வார்த்தையைக் கண்டிருந்தான். அது அவனுக்கு எழுதப்பட்டு, தேவனுடைய சொந்த கரம் அதை எழுதுவதன் மூலம் ரூபகாரப்படுத்தப்பட்டது. அவன், "நீங்கள் ஒவ்வொரு வார்த்தையையும் காத்துக் கொண்டால், அதனோடு எந்த ஒரு காரியத்தையும் கூட்ட வேண்டாம் அல்லது அதிலிருந்து ஒரு காரியத்தை எடுத்துப் போட வேண்டாம்" என்றான். நீங்கள் அதை உபாகமம் 4-ம் அதிகாரம் 25-ம் மற்றும் 26-ம் வசனங்களில் வாசிக்கலாம்.

323 கவனியுங்கள்! நீங்கள் அதனோடு ஒன்றை சேர்க்க வேண்டாம், அதிலிருந்து நீங்கள் எடுத்துப் போட வேண்டாம்; ஏனென்றால் நீங்கள் அப்படிச் செய்தால், தேவன் உங்களுடைய பங்கை ஜீவ புத்தகத்திலிருந்து எடுத்துப் போடுவார். நீங்கள் அவருடைய வித்தாயிருக்கவில்லை என்பதையே அது காண்பிக்கிறது.

324 நினைவிருக்கட்டும்! தேவன் நமக்கு வாக்குத்தத்தம் செய்துள்ள ஒவ்வொரு காரியத்தையும், தேவன் நமக்கு உரைத்துள்ள ஒவ்வொரு காரியத்தையும், கர்த்தருடைய நாமத்தில் உங்களுக்குக் கூறப்பட்ட யாவும் நிறைவேறிவிட்டதே! தேவன் எந்த ஒரு வாக்குத்தத்தத்தையும் ஒருபோதும் வீணாக்கவில்லை, ஆனால் அவர் நமக்குக் கூறியுள்ள சத்தியமாக இருந்து வந்த ஒவ்வொரு வாக்குத்தத்தத்தையும் அவர் காத்துக்கொண்டிருக்கிறார். இந்த இருபது வருடங்களாக ஷ்ரீவ்போர்ட்டே, தேவனுடைய வல்லமையினாலும், உன்னுடைய போதகரின் உபகாரத்தினாலுமே

நான் உனக்குப் பிரசங்கித்திருக்கிறேன், இன்றைக்கு நான் உன்னைப் பதிவு செய்கிறேன். பிரசவ வயதைக் கடந்த ஸ்திரீகளுக்கும் கூட; புருஷர், பிள்ளைகள், இன்னல்கள், சுகமளித்தல், தீர்க்கதரிசனம், சம்பவிக்கப்போகும் காரியங்கள், அவைகளில் ஒன்று கூடத் தவறிப்போகவில்லையே! இப்பொழுது, அந்த ஸ்தாபனங்களிலிருந்து விலகியிருங்கள், அவைகள் உங்களை மரணத்திற்கு வழி நடத்திக் கொண்டிருக்கின்றன.

325 ஒரு நாள் சாமுவேல் நின்று, அவர்கள், “எங்களுக்கு ஒரு இராஜா வேண்டும், நாங்கள் மற்ற உலகத்தாரைப் போல் இருக்க வேண்டும்” என்றனர்.

326 அவர்கள்...சாமுவேல், “அந்த ராஜாவை எடுத்துக்கொள்ள வேண்டாம். அவன் உங்களுடைய குமாரரையும், குமாரத்திகளையும் எடுத்துக் கொள்வான், அவன் *இதைச்* செய்வான் *அதைச்* செய்வான்” என்றான்.

327 அதற்கு அவன், “ஆம், நீர் கூறுவது சரியென்று எனக்குத் தெரியும்” என்றான்.

328 ஆனால் சாமுவேல், “நான் கூறுவதைக் கேளுங்கள். நான் எப்போதாவது உங்களுடைய பணத்தை எடுத்துக்கொண்டதுண்டா? ஒரு ஜீவனத்துக்காக நான் எப்போதாவது உங்களிடத்தில் கெஞ்சினதுண்டா? உங்களுக்காக ஒரு கூட்டத்தை நடத்த எனக்கு இவ்வளவு சம்பளம் தர வேண்டும் என்று நான் எப்போதாவது உங்களிடம் கூறினேனா?” என்று கேட்டான். இப்பொழுதும் கூட, உங்களையே நியாயந்தீர்த்துக் கொள்ளுங்கள்! பார்த்தீர்களா? அவன், “நான் எப்பொழுதாவது கர்த்தருடைய நாமத்தில் கூறின காரியம் நிறைவேறாமல் போனதுண்டா?” என்று கேட்டான். ஒரு காரியமும் இல்லை.

329 “ஓ, ஆம், சாமுவேலே, நீர் எங்களிடம் ஒருபோதும் பணத்திற்காகக் கெஞ்சினதில்லை, நீர் பெரிய காரியங்களை ஒருபோதும் விரும்பினதில்லை. சாமுவேல், அது உண்மை, நீர் கர்த்தருடைய நாமத்தில் எங்களுக்குக் கூறின யாவும் நிறைவேறினது. ஆனால் சாமுவேலே, எங்களுடைய ஸ்தாபனம் எப்படியும் எங்களுக்கு வேண்டும்!”

330 “அப்படியானால் போய் அதை எடுத்துக் கொள்ளுங்கள். அது உங்களைப் பொறுத்தது” என்றான். அது உண்மை.

331 நீங்கள் தேவனுக்கு ஒரு சேவையைச் செய்து கொண்டிருப்பதாக நீங்கள் எண்ணிக் கொள்ளலாம், நீங்கள் தேவனுடைய வழியை விட்டு விலகிச் செல்லும்போது, நீங்கள் அதைத் தொடர்ந்து குழப்பிக் கொண்டே போகப் போகிறீர்கள். ஓ ஜீவனுள்ள தேவனுடைய சபையே! என்னுடைய அயர்லாந்து மொழியையும், என்னுடைய நகைச்சுவை உணர்வையும் தயவு கூர்ந்து மன்னியும், ஆனால் என்னுடைய இருதயத்தின் உத்தமத்தோடும், பரிசுத்தத்தோடும்

கூறுவதென்னவென்றால், நீங்கள் அசெம்பிளிஸ் ஆஃப் காட், நீங்கள் ஒருத்துவம், பிரஸ்பிடேரியன், மெத்தோடிஸ்டு, நீங்கள் என்னவாயிருந்தாலும், உங்கள் ஜீவனுக்காக ஓடிப்போங்கள். நினைவிருக்கட்டும், அங்கிருந்து வெளியேறுங்கள்.

தேசங்கள் உடைந்து கொண்டிருக்கின்றன,
இஸ்ரவேலின் விழித்துக் கொள்கிறது, (அந்த மீதியானவர்களுக்காக ஆயத்தமாகிறது.)
தீர்க்கதரிசிகள் முன்னுரைத்த அடையாளங்கள்;
ஸ்தாபனங்களின் நாட்கள் எண்ணப்பட்டு,
இடுக்கண்கள் சூழ்ந்துள்ளன,
"ஓ, சிதறடிக்கப்பட்டவர்களே, உங்களுடைய சொந்த இடத்திற்குத் திரும்பி வாருங்கள்."

மீட்பின் நாள் சமீபித்துவிட்டது,
மனுஷருடைய இருதயங்கள் பயத்தினால் சோர்ந்து போகின்றன;
அவருடைய ஆவியினால் நிரப்பப்பட்டு,
உங்களுடைய தீவட்டிகளை சுத்திகரித்து ஆயத்தப்படுத்திக் கொள்ளுங்கள்,
மேலே நோக்கிப் பாருங்கள்! உங்களுடைய மீட்பு சமீபமாயிருக்கிறது.

332 நீங்கள் அதை விசுவாசிக்கிறீர்களா? நாம் முடிவு காலத்தில் இருக்கிறோம், நாம் இங்கே இருக்கிறோம். சுவற்றின் மேல் கையெழுத்து எழுதப்பட்டுள்ளது, இரண்டாம் வருகை சமீபமாயுள்ளது, மணவாட்டி தெரிந்து கொள்ளப்பட்டு, தண்ணீர் வார்க்கப்பட்டு, இழுக்கப்படுகிறாள்.

333 இப்பொழுது, அது சபையிலிருந்து வெளியே இழுக்கப்படுவதை பொருட்படுத்துகிறதில்லை, அது ஸ்தாபனவாதத்திலிருந்து வெளியே இழுக்கப்படுவதை பொருட்படுத்துகிறது. நீங்கள் சபைக்குச் செல்ல வேண்டும், ஆனால் எந்த ஸ்தாபனத்திலும் சேர வேண்டாம். இயேசுவானவர் எல்லா ஸ்தாபனங்களோடும் சென்றார், ஆனால் அவர் அவைகளில் ஒன்றையும் அவர் சேரவில்லை. அவர் அவர்களில் எவருடைய பட்சத்திலும் இருக்கவில்லை, உண்மையாகவே இல்லை, ஆனால் அவர் அவர்கள் மத்தியில் இருந்தார். அங்குதான் வெளிச்சம் பரவ வேண்டும். நீங்கள் எங்கே இருக்கிறீர்களோ அங்கேயே தரித்து ஒளியைப் பரப்புங்கள். பார்த்தீர்களா? அதற்காகத்தான் தேவன் உங்களை உபயோகித்துக் கொண்டிருக்கிறார். இருதயத்தின் பசி கொண்ட ஜனங்கள், இயேசு கிறிஸ்து உண்மையானவர் என்பதை அவர்கள் அறிந்துகொள்ளட்டும், அவர் நேற்று இருந்தது போலவே, அவர் இன்றைக்கும் இருக்கிறார்; என்றென்றைக்குமாய் இருப்பார்.

334 ஒரு மனிதனோ அல்லது ஸ்திரீயோ முழு உத்தமத்தோடும்,

தேவனுக்கு ஒரு சேவையைச் செய்யத் தங்களால் இயன்றவரை முயற்சித்து, அதைத் தவறான வழியில் கிளறிவிடக்கூடும். அவர்கள்மேல் அசலான பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தோடு, ஆனால் அந்தக் காலத்திற்கான தேவனுடைய திட்டத்திற்கு முரணாக அதைக் கிளப்பி, முழு காரியத்தையும் குழப்பிவிட்டனர். இப்பொழுது, அது சத்தியம் என்று நீங்கள் விசுவாசித்தால், “ஆமென்” என்று கூறுங்கள். [சபையோர், “ஆமென்” என்கின்றனர்.—ஆசி.] நாம் இப்பொழுதுதான் அதைப் படித்தோம். அதைச் செய்யத் தேவன் அளித்துள்ள வழி வராமல் முழு காரியத்தையும் குழப்புகிறது.

நாம் ஜெபிப்போமாக.

335 ஓ சபையே, இங்கேயும் மற்றும் தேசத்தினூடாகவும் உள்ள உம்முடைய தாழ்மையான ஊழியக்காரனுக்கு இந்தக் காலையில் செவிகொடுங்கள். நீங்கள் செவிகொடுப்பீர்களா? ஒரு சில ஆண்டுகளுக்கு முன்னர் இது முதலில் துவங்கியபோது, நீங்கள் எங்கே இருந்தீர்கள் என்று பாருங்கள்; இப்பொழுது அதன் பேரில் ஆள் மாறாட்டங்கள் சாதகமாக்கிக் கொண்டிருக்கின்றன என்பதைப் பாருங்கள், பெரிய கோடிக்கணக்கான டாலர்கள் ஸ்தாபனங்களுக்குள் வந்துள்ளன. பார்த்தீர்களா? தேவனுடைய வார்த்தையிலிருந்து இன்னமும் விலகி இருக்கிறீர்கள். கட்டிடங்களும், ஸ்தாபனங்களும் தேவன் தம்முடைய ஆவியைத் தூண்டுகிற விதமாய் இல்லை. அவர் அதைச் ஜீவிக்கச் செய்யத் தம்முடைய வார்த்தைக்குள் அதைச் சரியாகக் கலக்குகிறார். நீங்கள் பூமியின் துவக்கத்திலிருந்து அந்த வார்த்தைக்கு நியமிக்கப்பட்டிருந்தால், ஒவ்வொரு வார்த்தையும் வார்த்தையின் மேல் சரியாக வரும். ஒரு மனித உயிரணுவில் ஒரு மனித உயிரணு, அதற்கு அடுத்தபடியாக ஒரு நாயின் உயிரணு, அதற்கு அடுத்தபடியாக ஒரு பூனையின் உயிரணுவாக இருக்காது; அது மனித உயிரணுக்களாக இருக்கும். ஆனால் அதற்கு முதலில் ஒரு உயிரணு இருக்க வேண்டும். அது சரியா? “ஆமென்” என்று கூறுங்கள். [சபையோர், “ஆமென்” என்கின்றனர்.—ஆசி.] பாருங்கள், அது வார்த்தையின் உயிரணுவில் துவங்குமானால், மற்ற வார்த்தையின் உயிரணுக்கள் அதை ஒரு முழு சரீரமாக ஆக்க நியமிக்கப்படுகின்றன.

336 அன்பில் மாத்திரம் பிள்ளைகளாயிராமல், ஆவியிலும் நியாயத்தீர்ப்பிலும் மனுஷராயிருங்கள். நான் உங்களுக்கு உண்மையைக் கூறியிருக்கிறேனா அல்லது இல்லையா என்று நீங்கள் நிதானித்துப் பாருங்கள். அது தேவனுடைய வார்த்தையா அல்லது இல்லையா என்று நீங்களே நிதானித்துப் பாருங்கள். நாம் பேசிக்கொண்டிருக்கிற வேளை இதுதானா இல்லையா என்பதை நீங்கள் நிதானித்துப் பாருங்கள். வாக்குத்தத்தம் பண்ணப்பட்டவைகளா என்று நீங்கள் நிதானித்துப் பாருங்கள். இப்பொழுது, அவைகள் ரூபகாரப்படுத்தப்பட்டுள்ளனவா?

உலகில் எந்த மனிதராலும் செய்ய முடியாத காரியங்களைக் கொண்டு செய்யப்பட்டன. ஆனால் அது நமக்கு மிகவும் சாதாரணமாகிவிட்டபடியால், நாம் அதை நம் மேல் பாய்ந்து செல்ல விட்டுக் கொண்டிருக்கிறோம். காத்திருங்கள், சபையே, காத்திருங்கள்.

337 இந்தக் காலையில் இங்குள்ள எவரேனும் இயேசு கிறிஸ்துவை அறியாதவர்களாயிருந்தால், இந்தக் காலையில் நீதிமான்களாக்கப்பட்டவர்களாக நிற்கவில்லையென்றால், நீங்கள் ஒருபோதும் பாவமே செய்யாதவர்களைப் போல உங்களுடைய பாவங்கள் யாவும் போய்விட்டன, நீங்கள் அந்தவிதமாக இருக்க விரும்புகிறீர்கள்…ஏனென்றால் நினைவிருக்கட்டும், ஒரு நாள், ஒருக்கால் இன்றைக்கு, ஒருக்கால் அடுத்த ஐந்து நிமிடங்களில், ஆனால் ஒரு நாள் அந்த இருதயம் நின்றுவிடப் போகிறது. அந்த உட்புறத்தின் உட்புறம் இன்று காலை நீங்கள் காணும் *இந்தச்* செய்தியைக் கொண்டு என்ன செய்கிறீர்கள் என்பதற்கேற்ப, தேவனுடைய பிரசன்னத்தில் நியாயத்தீர்ப்புக்கு நிற்கப் பறந்து செல்ல போகிறது. இல்லை…அது நானல்ல, நான் ஒரு வாயாய் இருக்கிறேன். இந்த ஒலிபெருக்கியைப் போல, நான் அதில் பேசிக் கொண்டிருந்தாலொழிய, அது ஒரு காரியத்தையும் கூற முடியாது. தேவன் அதனூடாகப் பேசிக் கொண்டிருந்தாலொழிய நான் ஒன்றையும் கூற முடியாது, ஆனால் அது சத்தியம் என்று தேவன் ரூபகாரப்படுத்தியிருப்பதை நீங்கள் காணலாம். நீங்கள் ஒரு உண்மையான கிறிஸ்தவராக இருக்க விரும்புகிறீர்கள்.

338 இப்பொழுது, ஒரு பீட அழைப்புக்கு எங்களுக்கு இடமில்லை, ஆனால் நீங்கள் உட்கார்ந்து கொண்டிருக்கிற அதே மேஜையில்தான். அந்த இடம் நிரம்பி வழிந்து, நெரிசலாக உள்ளது. நான் உங்களை ஒரு பீடத்திற்கு அழைக்க முடியாது, உங்களை அழைக்க இங்கே எந்தப் பீடமும் இல்லை. ஆனால் பீடம் உங்களுடைய இருதயத்தில் உள்ளது. “இயேசு கிறிஸ்து உண்மையானவர்” என்ற அந்தச் சிறு நம்பிக்கையை இன்றைக்கு நீங்கள் நெருக்கமாக்கி அவருடைய சரீரத்தில் எஞ்சியுள்ளவர்களை உங்களண்டை வரவழைத்து, உங்களுடைய இருதயத்தில் அவரை முன்னணையில் வைப்பீர்களா? அவர் அங்கு இல்லையென்றால், நீங்கள் உங்களுடைய கரத்தை அவருக்கு ஒரு அடையாளமாக உயர்த்தி, “கர்த்தாவே, நான் உம்மால் பிழைக்கும்படி, என்னை நிரப்பும், உம்முடைய வார்த்தையினாலும், உம்முடைய பிரசன்னத்தினாலும் என்னை நிரப்பும்” என்று கூறுவீர்களா?

339 ஒவ்வொரு தலையும் வணங்கியிருக்கையில், ஒவ்வொரு கண்ணும் மூடப்பட்டிருக்கும்போது, தேசம் முழுவதிலும், காணக்கூடிய கூட்டத்திலும், அங்கேயும் கூட உங்களுடைய கரங்களை உயர்த்துங்கள்; நான் உங்களுக்காக ஜெபத்தை ஏறெடுப்பேன். என்னால் செய்ய முடிந்ததெல்லாம் அவ்வளவுதான்,

என்னால் அதை நிரப்ப முடியாது. தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. என்னால் அதை நிரப்ப முடியாது. தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக; நீங்களும் கூட. தேவனால் அதை நிரப்ப முடியும். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. காணக்கூடிய கூட்டத்தினூடாக எல்லாவிடங்களிலும் கரங்கள் இங்கே உயர்த்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன. "அதை நிரப்புங்கள். கர்த்தாவே, என்னை நிரப்பும். என்னை நிரப்பும்." இப்பொழுது, நான்...சகோதரியே, உங்களுக்கு நன்றி. சகோதரனே, உங்களுக்கு நன்றி. தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. நான்...அருமையான சகோதரியே, தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. நீங்கள். அதன்பின்னர்...இப்பொழுது நான் உத்தமமாக இருக்க முயற்சித்து, உங்களோடு என்னுடைய கரங்களை உயர்த்த விரும்புகிறேன்.

340 ஓ, கர்த்தாவே, என்னை ஒருபோதும் செயலிழந்து போகவிடாதேயும். தொடர்ந்து, கர்த்தாவே, நான் ஒரு காரியத்தோடு நிற்காமல், கர்த்தாவே, நீர் எனக்குச் செய்யும்படி நியமித்துள்ள ஒவ்வொரு காரியத்தையும் நான் செய்து முடிக்கும் வரையில் நான் தொடர்ந்து செல்லட்டும். கிரயம் எவ்வளவு இருந்தாலும், விலை எவ்வளவு இருந்தாலும், விமர்சனம் எவ்வளவு இருந்தாலும், சிலுவை எவ்வளவு கடினமாக இருந்தாலும், நீர் சுமந்த சிலுவையை நான் நினைவு கூருவேன்.

எனவே இந்த அர்ப்பணிக்கப்பட்ட சிலுவையை
  நான் சுமப்பேன்,
மரணம் என்னை விடுதலையாக்கும் வரைக்கும்,
அதன்பின்னர் ஒரு கிரீடத்தை தரித்துக்கொள்ள
  பரலோக வீட்டிற்கு செல்வேன்,
எனக்காக ஒரு கிரீடம் இருக்கிறது.

இயேசு மாத்திரமே சிலுவையை தனியே சுமக்க,
முழு உலகமும் சும்மா இருக்க வேண்டுமா?
இல்லை, அவருடைய குமாரர்கள்
  ஒவ்வொருவருக்கும் ஒரு சிலுவை உண்டு,
எனக்காக ஒரு சிலுவை உள்ளது.

341 அன்புள்ள தேவனே, வார்த்தை புறப்பட்டுச் சென்றுவிட்டது. அது வெறுமையாகத் திரும்ப முடியாது, அது எங்கோ அதனுடைய ஸ்தானத்தைக் கண்டறியும். விதை ஏற்கனவே நடப்பட்டிருந்தால், அது வளரும் வரைக்கும் அதற்குத் தண்ணீர் பாய்ச்ச வேண்டும். ஒருவரும் அதை உம்முடைய கரத்திலிருந்து பறித்துக் கொள்ள முடியாது, "பிதாவானவர் எனக்குக் கொடுக்கிற யாவும் என்னிடத்தில் வரும், அவர்களை என் கையிலிருந்து ஒருவனும் பறித்துக்கொள்ள முடியாது. என் பிதா உலகத்தோற்றத்துக்கு முன்னே அவைகளை எனக்குக் கொடுத்திருக்கிறார்"; எல்லா திட்டங்களும் தீட்டப்பட்டபோது, அந்தவிதமாகவே, இயேசுவுக்கு அவருடைய சபையும், அவருடைய மணவாட்டியும் அளிக்கப்பட்டது.

342 இந்த ஸ்தாபனங்களுக்கு உலகத்தின் போலியான விவாகம். நீர் உலகத்திற்குள்ளாக வந்து மரித்தீர், நீர் அவளை மீட்டு, நீர் அவளை நீதிமானாக்கினீர், அவள் அதை முதலில் செய்யவேயில்லை. அவள் குருடாயிருந்தபடியால் அதில் சிக்கிக் கொண்டாள். அந்தப் பாடல் கூறுகிறபடி:

நான் ஒரு காலத்தில் காணாமற்போனேன்,
இப்பொழுது நான் கண்டுபிடிக்கப்பட்டேன்,
நான் ஒரு காலத்தில் லவோதிக்கேயாவில் குருடாயிருந்தேன், ஆனால் இப்பொழுதோ நான் காண்கிறேன்.

கிருபையே என் இருதயத்தை பயப்படக் கற்றுக் கொடுத்தது,
என் பயங்களைப் போக்கினதும் அந்தக் கிருபையே;
அந்தக் கிருபை தோன்றினது எவ்வளவு விலையேறப்பெற்றதாயிருந்தது
நான் விசுவாசித்த அந்த முதல் வேளையில்!

தேவனுடைய தண்ணீர் என் ஆத்துமாவின் மேல் விழுந்தது. நான் வறண்டு கொண்டிருந்தேன்.

343 தேவனே, இங்கும் மற்றும் தேசத்தைச் சுற்றிலும் உள்ள ஒவ்வொரு இருதயத்தின் இந்தச் சிறு பீடத்தண்டை இந்தக் காலையில் தேவனுடைய பலிபீடத்தின் கீழுள்ள தண்ணீர் உம்முடைய சபையின் மேல் பொங்கி வழிவதாக; கர்த்தாவே, அதற்குத் தண்ணீர் பாய்ச்ச வேண்டும், ஏனெனில் பருவம் முடிவடையப் போகிறது. அது உம்முடைய மகத்தான களஞ்சியத்திற்காக முதிர்வடையும்படிக்கு குமாரனின் பிரசன்னத்தில் கிடக்கத்தக்கதாக அதற்கு ஜீவனை, ஜீவத் தண்ணீரைக் தாரும்.

344 பிதாவே, நான் அவர்களுக்காக ஜெபிக்கிறேன். ஆனால் தண்டு காய்ந்து போக வேண்டும், எனவே நான் அதற்காக ஜெபிக்க முடியாது; அது மரிக்க வேண்டும், எனவே அது மரித்துவிட்டது. ஆனால் கர்த்தாவே, கிறிஸ்துவின் சரீரத்திற்குள்ளாக உருவாகிக் கொண்டிருக்கும் கோதுமைக்காக நான் ஜெபிக்கிறேன். கர்த்தாவே, தேவனுடைய புதிய தண்ணீர் அதனுடைய கன்னங்களைச் சந்தோஷக் கண்ணீரால் நீராட்டும்படி காத்துக்கொள்ளவும், அதை வீட்டிற்கு கொண்டு செல்ல அறுவடைக் கருவி வரும் வரையிலும் புரிந்து கொள்ள அருள்புரியும். இயேசுவின் நாமத்தில், கர்த்தாவே, நான் அவை எல்லாவற்றையும் உம்மிடம் சமர்ப்பிக்கிறேன்; பலன் உம்முடையதாயுள்ளது. ஆமென்.

[ஒரு சகோதரி ஒரு செய்தியைக் கொடுக்கிறாள். ஒலிநாடாவில் காலியிடம்—ஆசி.] ஆமென்.

345 எனவே பிதாவாகிய தேவனே, நாங்கள் உமக்கு நன்றி செலுத்துகிறோம். மேலும், பிதாவே, நாங்கள் இங்கே வேலைக்காரியாகிய எங்களுடைய சிறிய சகோதரியின் பெலனுக்காக ஜெபிக்கிறோம். நான்—நான் அவளுடைய சந்நிதியில் நடந்த ஒரு காலத்தைப் பற்றி நினைக்கிறேன், எப்படியாய் ஆவியானவர் அவள்மேல் வந்து ஆற்றண்டையிலே கர்த்தருடைய தூதன் கூறின அதே செய்தியைக் கொடுத்தார்: "கர்த்தராகிய இயேசுவின் முதலாம் வருகைக்கு முன்னோடியாக யோவான் ஸ்நானன் அனுப்பப்பட்டதுபோல, நீர் இரண்டாம் வருகைக்கு முன்னோடியாக அனுப்பப்பட்டிருக்கிறீர்."

346 அது இப்பொழுது கோதுமை பாகமாக உருவாகுவதைக் காணும்போது, தேவனே, நீர் செய்திருக்கிற ஒவ்வொரு காரியத்திற்காகவும் நாங்கள் உமக்கு நன்றி செலுத்துகிறோம். பேச முடியாத அளவிற்கு எங்களுடைய இருதயங்கள் நிறைந்துள்ளன. கர்த்தாவே, நான் மிகவும் நிறைவாக உணருகிறேன், வேறெந்த காரியத்தையும் எப்படி கூறுவது என்று எனக்குத் தெரியவில்லை. ஆனால் பிதாவே, நீர் எங்களுக்குச் செய்திருக்கிற எல்லாவற்றிற்காகவும் மீண்டும் உமக்கு நன்றி செலுத்துகிறோம். இயேசு கிறிஸ்துவின் நாமத்தின் மூலமாக.

நான் அவரை நேசிக்கிறேன்…

இப்பொழுது, நாம் அப்படியே அவருக்குப் பாடுவோமாக. அவர் இங்கிருக்கிறார் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

ஏனென்றால் அவர் முதலில் என்னை நேசித்தார்
என்னுடைய இரட்சிப்பை சம்பாதித்தார்
கல்வாரி மரத்தின் மேல்.

347 அது உங்களை மிகவும் சிறியதாக, உண்மையாகவே சிறியதாக உணரச் செய்கிறதா? எல்லாமே வெறுமையாக்கப்பட்டு, ஆவிக்காக ஆயத்தமாயுள்ளது, பாருங்கள்.

தேவனுடைய மாறாத கரத்தைப் பற்றிக் கொள்ளுங்கள்!
தேவனுடைய மாறாத கரத்தைப் பற்றிக் கொள்ளுங்கள்!
நித்தியமான காரியங்களின் பேரில் உங்களுடைய நம்பிக்கைகளைக் கட்டுங்கள்,
தேவனுடைய மாறாத கரத்தைப் பற்றிக் கொள்ளுங்கள்!

இந்த உலகத்தின் வீணான ஐஸ்வரியங்களை இச்சியாதேயுங்கள்,
அது மிக வேகமாகச் சீர்குலைந்து போகும்,

நித்தியமான காரியங்களின் பேரில் உங்களுடைய நம்பிக்கைகளைக் கட்டுங்கள், (இப்பொழுது ஸ்தாபனம் வேண்டாம்.)
தேவனுடைய மாறாத கரத்தைப் பற்றிக் கொள்ளுங்கள்!

தேவனுடைய மாறாத கரத்தைப் பற்றிக் கொள்ளுங்கள்!
தேவனுடைய மாறாத கரத்தைப் பற்றிக் கொள்ளுங்கள்!
நித்தியமான காரியங்களின் பேரில் உங்களுடைய நம்பிக்கைகளைக் கட்டுங்கள்,
தேவனுடைய மாறாத கரத்தைப் பற்றிக் கொள்ளுங்கள்!

348 எத்தனை பேர் அதைச் செய்ய முயற்சித்துக் கொண்டிருக்கிறீர்கள்? உங்களுடைய கரத்தை உயர்த்துங்கள். இப்பொழுது நேராக மேசையின் குறுக்கே நீட்டி, உங்களுடைய கரங்களை ஒருவர் மற்றொருவருடைய கரங்களில் *இந்த* விதமாக, ஒன்றாக இணைத்துக் கொள்ளுங்கள். நீங்கள் உட்காரலாம், பரவாயில்லை, அல்லது நீங்கள் என்ன வேண்டுமானாலும் செய்யலாம். கூர்ந்து கவனியுங்கள். இப்பொழுது அதை நாம் சேர்ந்து பாடுவோம். இது நம்முடைய அறுபடாத தேவனுடைய அன்பின் சங்கிலியைச் சுட்டிக்காட்டுகிறது. நாம் தேவனில் விசுவாசங்கொண்டுள்ள காரணத்தால் நாம் ஒருவர் மற்றொருவருடைய கரங்களைப் பற்றிக்கொண்டிருக்கிறோம். நாம் சகோதரரும் சகோதரிகளுமாய் இருப்பதால், நாம் ஒருவரையொருவர் தொடுகிறோம், அதே அதிர்வுறும் ஆவியானவர், எங்களுடைய இருதயங்களில் வாசமாயிருக்கிற தேவனுடைய நித்திய வார்த்தை வெளிப்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது.

நம்முடைய பயணம் முடிவுறும்போது,
நாம் தேவனுக்கு உண்மையாய் இருந்து வந்திருந்தால்,
மகிமையில் உள்ள நம்முடைய வீடு அழகாகவும் பிரகாசமாகவும் இருக்கும்,
பரவசமடைந்துள்ள நம்முடைய ஆத்துமா காணும்!

தேவனுடைய மாறாத கரத்தைப் பற்றிக் கொள்ளுங்கள்!
தேவனுடைய மாறாத கரத்தைப் பற்றிக் கொள்ளுங்கள்!
நித்தியமான காரியங்களின் பேரில் உங்களுடைய நம்பிக்கைகளைக் கட்டுங்கள்,

தேவனுடைய மாறாத கரத்தைப் பற்றிக் கொள்ளுங்கள்! (கர்த்தருடைய ஆவியே!)

தேவனுடைய பிடித்துக்கொள்...

உங்கள் சிந்தை அவர்பேரில் வையுங்கள், பாருங்கள். இந்தவிதமான கூட்டங்களைத்தான் நாம் எதிர்காலத்தில் அமைக்க வேண்டும்.

...மாறாத கரம்!
நித்தியமான காரியங்களின் பேரில் உங்களுடைய நம்பிக்கைகளைக் கட்டுங்கள்,

வார்த்தை மாத்திரமே நித்தியமானதாய் இருக்கிறது.

தேவனுடைய மாறாத கரத்தைப் பற்றிக் கொள்ளுங்கள்!

இவ்வுலகின் வீண்...(புகழ், கல்வி) இச்சியாதே.
அது அவ்வளவு சீக்கிரத்தில் அழிந்துபோகிறது, (அது என்ன செய்யப்பட்டுள்ளது என்பதை இன்றைக்கு பாருங்கள்.)
பரலோகப் பொக்கிஷங்களை ஆதாயப்படுத்த நாடுங்கள்,
அவைகள் ஒருபோதும் ஒழிந்து போகாது!

தேவனுடைய மாறாத கரத்தைப் பற்றிக் கொள்ளுங்கள்!
தேவனுடைய மாறாத கரத்தைப் பற்றிக் கொள்ளுங்கள்!
நித்தியமான காரியங்களின் பேரில் உங்களுடைய நம்பிக்கைகளைக் கட்டுங்கள்,
தேவனுடைய மாறாத கரத்தைப் பற்றிக் கொள்ளுங்கள்!

349 [ஒரு சகோதரி அந்நிய பாஷையில் பேசுகிறாள், வேறொரு சகோதரி அதற்கு அர்த்தம் உரைக்கிறாள்—ஆசி.] கர்த்தாவே, நாங்கள் உமக்கு எவ்வளவாய் நன்றி செலுத்துகிறோம். ஏறக்குறைய ஒரு சவ அடக்கம் போன்ற இந்தப் பயபக்தியான நேரத்தில் நாம் அமர்ந்திருக்கையில், ஏனென்றால் நாம் ஒரு மரிக்கும், மரித்த உலகத்தின் அடக்கத்தை எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறோம்; ஒரு மரித்துக் கொண்டிருக்கிற, மரித்த சபை.

ஓ, தேவனே, பிதாவே, உம்முடைய கோதுமையை சீக்கிரமாய் சேகரியும். கர்த்தராகிய இயேசுவே, சீக்கிரமாக வாரும்.

350 பிதாவே, உம்முடைய ஜனங்களை ஆசீர்வதியும், ஜனங்களின் இருதயங்களில் உத்தமத்தையும் ஆழத்தையும் கொண்டு வாரும். நாங்கள் அந்த உடையக்கூடிய குமிழி நடனங்களை விட்டு விலகி, தேவனுடைய தேனின் ஆழமான செழுமைகளில்

நிலைபெறுவோமாக. கர்த்தாவே, அதை அருளும். எங்களுடைய இருதயங்களை அன்பினாலும், உத்தமத்தினாலும் உறுதிப்படுத்தும்.

351 பிதாவே எங்குமுள்ள உம்முடைய ஜனங்களை ஆசீர்வதியும். நாங்கள் இந்த இடத்தை விட்டுச் செல்லும்போது, நாங்கள் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தில் சென்று, உத்தமமாய் இருக்கிறதை, கர்த்தாவே, சத்தியமாயிருக்கிறதை, சரியாயிருக்கிறதைப் பேசுவோமாக, தவறாயிருக்கிறதை நாங்கள் தவிர்ப்போமாக. ஒரு மனிதன் எங்களிடத்தில் பொய்யுரைக்கத் துவங்கும்போது, நாங்கள் விரைவாக அவனைப் புறக்கணித்து, எங்களுடைய முதுகை எல்லா அசுத்தமான, கேவலமான கேலிப் பேச்சுகளுக்கும், உலகத்தின் காரியங்களுக்கும் திருப்பி, அப்படியே எங்களுடைய முதுகைத் திருப்பிக் கொண்டு நடந்து செல்வோமாக. அன்புள்ள தேவனே, எங்களுக்கு உதவி செய்யும். எங்களை வனையும், எங்களை உருவாக்கும், எங்களை உடையும், நாங்கள் பரிசுத்த ஆவியின் நற்பண்பைக் கொண்டு செயல்படும்படியாக எங்களைத் தேவனுடைய குமாரரும், குமாரத்திகளுமான சாயலுக்குள்ளாக ஆக்கும். நாங்கள் எங்களுடைய கரங்களை ஒருவரோடொருவர் வைத்து உம்மண்டை இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் சமர்ப்பிக்கிறோம். ஆமென்.

நாம் எழுந்து நிற்போமாக. சகோதரர் நோலன்.

65-1127B தேவனுடைய சித்தமாயில்லாமல்
தேவனுக்கு ஒரு சேவை செய்ய முயற்சித்தல்
வாஷிஸ்டன் யூரீ உணவகம்
ஷீரிவ்போர்ட், லூசியானா அமெரிக்கா

TAMIL

©2026 VGR, ALL RIGHTS RESERVED

VOICE OF GOD RECORDINGS, INDIA OFFICE
19 (NEW NO: 28) SHENOY ROAD, NUNGAMBAKKAM
CHENNAI 600 034, INDIA
044 28274560 • 044 28251791
india@vgroffice.org

VOICE OF GOD RECORDINGS
P.O. BOX 950, JEFFERSONVILLE, INDIANA 47131 U.S.A.
www.branham.org

## பதிப்புரிமை அறிவிப்பு

எல்லா உரிமைகளும் தனியாருக்கென ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தப் புத்தகம் தனிப்பட்ட உபயோகத்திற்கோ அல்லது இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பரப்புவதற்கு ஒரு கருவியாக வெளியே விநியோகிக்கப்படவோ வீட்டில் பயன்படுத்தப்படும் மூலப்பிரதியிலிருந்து நகல் எடுக்கும் இயந்திரத்தின் மூலம் பிரதி எடுக்கலாம். இந்தப் புத்தகம் Voice Of God Recordings® நிறுவனத்தின் மூலம் எழுதிக்கொடுக்கப்பட்ட அனுமதி வெளியீடின்றி விற்கப்படவோ, பேரளவில் மீண்டும் அச்சிடப்படவோ, இணையதளத்தில் வெளியிடவோ, மீண்டும் பயன்படுத்த வேண்டும் என்ற முறையில் சேமித்து வைக்கப்படவோ, பிற மொழிகளில் மொழிபெயர்க்கப்படவோ அல்லது நிதி திரட்ட வேண்டுகோள் விடுக்கும்படி உபயோகப்படுத்தவோ இயலாது.

மேலும் கூடுதலான விபரங்களுக்கு அல்லது கிடைக்கக்கூடிய மற்ற பிரதிகளுக்கு தயவுகூர்ந்து தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

Voice Of God Recordings, India Office
19 (New No: 28) Shenoy Road, Nungambakkam
Chennai 600 034, India
044 28274560 • 044 28251791
india@vgroffice.org

Voice Of God Recordings
P.O. Box 950, Jeffersonville, Indiana 47131 U.S.A.
www.branham.org